சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வச்சிரதண்டமும்

தாந்திரிக துண்டகண்டன கண்டனமும்

காசிவாசி. செந்திநாதையரால்

இயற்றி

தமது

திருப்பரங்குன்றம்

செந்திநாதசுவாமி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

1910.

அன்பளிப்பு

சிவமயம்.

பூமிகை.

எச்சமயங்களினும் சிறந்த சைவசமயத்துக்குப் புத்தர்களாலும், சமணர்களாலும், மாயாவாதிகளாலும், ஏகான்மவாதிகளாலும் எத்தனையோ இடையூறுகள் நெடுங்காலமாக அவ்வப்போது நிகழ்ந்து கொண்டிருப்பினும், அவ்வுத்தமோத்தம சமயமானது சுடச் சுடப்பொன் மாற்றேறக் கதித்தல் போல, தன் உண்மை நிலையை மேன்மேலும் உலகினர்க்குப் பிரகடனஞ் செய்துகொண்டு வச்சிரஸ்தம்பம் போலச் சற்றும் சலியாது மேலோங்கி நின்றது, நிற்கின்றது. வேதம் ஒன்றனையே பிரமாணமாகக் கொண்ட வைதிகப்பிராமணர் முதலாயினோர் உபப்பிருங்கணங்களாகிய இதிகாச புராணங்கள் யாவும் மகோபப்பிருங்கணங்களாகிய சிவாகமங்கள் கொண்டே அவ்வேதப்பொருள்கள் நிச்சயிக்கப்படும் என்பதை உணரமாட்டாமையாலும், சைவசமயஸ்தாபனாசாரியர்களாகிய திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் முதலிய நால்வர் அருளிய தேவார திருவாசகங்கள் ஈசகேநாதி முக்கிய சைவோபநிடதப்பொருள்களெல்லாம் தம்முள்ளே அடக்கிக்கிடந்த அருட்பாக்களாம் என்றுணர்தற்குப் போதிய தமிழ்ப் பாஷைக் கல்வியும் சிவபுண்ணியத்தகுதியும் இலவாய ஒழியப் பெற்றமையாலும், அவ்வைதிகர்கள் தமது வெள்ளறிவுக்குப் புலப்பட்டபொருள் கொள்ளக்கிடந்த சர்வசாரமுதலிய ஏகான்மவாத உபநிடதங்களுக்கு இணங்கப் பிரமசூத்திரம் எனப்படும் உத்தரமீமாம்சைக்கு மூலமாய் நின்ற அம்முக்கியோபநிடத சுருதிகளுக்குந் தாமே சேர்த்தவாறு பொருள் செய்து சுருதிகளை விபரீதமுறியவாறு கொன்றுவிட்டார்கள்.

வேத மகோபப்பிருங்கணங்களாயும், சிவபெருமானுக்குப் பாதாதிகேசாந்தம் வடிவமாயும் மிளிர்ந்த காமிகாதி சிவாகமங்கள் வைதிகர்களுள்ளே காலந்தோறும் நம் பாரதவர்ஷத்தில் உதிக்கும் ஒவ்வொருவரால் கொடுந்தூஷணைக்கிலக்காதல் கண்டு சைவசமயாபிமானிகள் படுந்துயரம் ஓர் அளவுக்கு அடங்குவதன்று.

சென்ற சிற்சில வருஷங்களுக்கு முன்னே நடுக்காவேரி. கு. ஸ்ரீநிவாச தீக்ஷிதரென்பவர் [illegible] பத்திரிகை வாயிலாகப் புரிந்த சிவாகமதூஷணைகளை நிராகரணமெல்லாம் யாம் செந்திநாதப் பெருமான் திருவருளால் அவ்வப்போது [illegible] பத்திரிகைகளைத் தொகுத்து முருக்கி வெற்றியடைந்தேம்.

அக்காலத்திலே யாம் தூஷணைகளைப் பற்றி வேதவிசாரணையிற் போயிருக்கும் சமயத்திலெனப் பெயரிய பிராமண சந்நியாசியாரும் சிவாகமங்களையும், சிவாசாரியர்களையும் வாயில் கோக்க வந்தவாறு பலர் முன்னிலையில் தூஷித்துக் கொண்டு வந்தார்.

இவற்றைக் கேள்வியுற்ற பசுபதிகோட்டை ஸ்ரீமத் சுப்பிரமணிய சிவாசாரியாவர்கள் "வேதாகமதாத்பர்யம்" என்னும் பத்திரிகையில் சிவாகமமாத்ஸர்யம் தொனிக்க எழுதினார். அதுகண்ட சந்நியாசியார் அச்சிவாகமங்களையும் சிவாசாரியர்களையும் தேவார திருவாசகங்களையும், இங்ஙனம் [illegible] நடுங்கத்தகும் அத்துணைக் கொடுந்தூஷணைகள் பொதிந்த "ஆதிசைவநாமக கபலயகருக பங்கமுத்ரம்" என்னும் பத்திரிகையொன்றைப் பொழிந்துவிட்டார்.

அது கண்டு பொறுக்காது அவர் பத்திரிகையிற் கண்ட தூஷணைகளைப் பரிகரிக்குமாறு யாம் முன் வந்து, அவரது "முற்கர" பத்திரிகைக்கு கண்டனமாக இந்த "வச்ரதண்டத்தையும்," அவர் விடுத்த "தாந்திரிக துண்ட கண்டன"த்துக்கு மறுப்பாகத் "தாந்திரிக துண்ட கண்டன கண்டனத்தையும்" முறையே எழுதி முன்பின்னாக நிறுவி, அத்தூஷணபத்திரங்களாற் புண்பட்ட சைவசமயிகளுடைய மனசை ஆற்றிச் சாந்தி செய்யுமாறு அரசெந்திநாதப்பெருமான் திருவருளால் அவற்றைப் பிரகடனஞ்செய்துவிட்டேம்.

இங்ஙனம்,

ஸ்ரீ காசிவாசி—செந்திநாதையர்.

அன்பளிப்பு

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வச்சிரதண்டம்.

(க) வச்சிரதண்டம் என்றமைக்குக் காரணம்.

ஸ்ரீ தத்துவத்துள்ள ஆயிரகோடி அண்டங்களுள்ளே ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகங்காறும் அரசுபுரிந்த மகா குரூர சூரபன்மனுடைய குமாரனாகிய பானுகோபன் யுத்த பூமியிலே மகாபராக்கிரமசாலியாகிய வீரவாகுதேவருடையவும் மற்றைச் சேனாவீரர் முதலிய சைனியங்களுடையவும் அறிவைக் கெடுத்து மோகத்தை விளைத்துக் கோறற்கு விடுத்த மோகாஸ்திரத்தை நிகர்ப்பவும், பிரம விஷ்ணு முதலிய தேவர்கள் சமுத்திரமதனஞ் செய்தகாலத்து உயிர்களையெல்லாம் வதைக்குமாறு கிளர்ந்த மகா கோரமாகிய ஆலகாலவிஷத்தை நிகர்ப்பவும், தாருகாவனத்தில் இருடிகள் புரிந்த அபிசார ஹோமத்திற் கிளர்ந்த அதிகுரூர அபஸ்மாரத்தை நிகர்ப்பவும், இறந்தகாலத்தும் நிகழ்காலத்தும் பூமியிலுள்ளார் செய்தனவும் செய்கின்றனவுமாகிய பாவசமூகங்களெல்லாம் திரண்டொரு வடிவெடுத்துப் போந்தமையை நிகர்ப்பவும்—திரிபுரத்தசுரர் சிவபுண்ணிய சிவபக்தியனைத்தையும் கெடுக்குமாறு போந்த நாராயண பவுத்தரைப்போலத் தேவிகோட்டையில் வசிக்கும் நகர வைசியப்பிரபுக்களுடைய சிவபுண்ணிய சிவபக்திகள் அனைத்தையும் "லாடன் ஒருவனுக்குச் செம்புள்ளி கரும்புள்ளிகுத்திச் சடாமுனியாக்கித் தரிசிப்பித்தன்" முதலிய ஜாலங்களினாலும் பிறவற்றாலும் கெடுக்குமாறு போந்த ஓர் ஏகான்மவாத சந்நியாசியார்—விடுத்த சிவதூஷணஞ் சிவாசாரியதூஷணந் திராவிடபாஷாப்பிரபந்த தூஷணமுதலிய தூஷணங்கள் மிகுதியும் பொதிந்த "ஆதிசைவ நாமத கவுலேயக முகபங்க முற்கரம்" என்னும் மகாசிவத்துரோகபத்திரிகையிற் கண்ட போலி நியாயங்களை உடைத்து வேதசிவாகமஸ்தாபனஞ் செய்யுமாறு எழுந்தது இந்த வச்சிரதண்டம் என்னும் பத்திராஸ்திரமாம்.

(உ) சந்நியாசியார் முரணுற எழுதினமைக்குக் காரணம்.

வெய் நாயானது வாலை மூடிக்கொண்டு ஒரு மூலையிற் கிடப்பினும் அதற்குள்ள விசேஷக்காரணமாக அது கிடக்குமிடந் தேடி உலகிலுள்ளார் அதனை அடிப்பார்கள் என்றும், அது நுழைந்துக் கடிக்குமாறு வரின் எவர்

வச்சிரதண்டம்.

நான் அறிய அத்யாதிருப்பார் என்னும் சந்நியாசியார் தமது பத்திரிகையின் அசபத்தெட்டாம் பக்கத்திற் கூறுமுகத்தால், ஆதிசைவர் வாளா இருக்கவிடத்தும் அவர் அவர்களைத் தூஷித்துக்கொண்டே வருதாரென்றும், ஸ்ரீமத் சத்தியோசாதசிவாசாரியார் என்னும் ஆதிசைவர் "வேதாகம தாரதம்மியம்" என்னும் பத்திரிகை ஒன்று தீட்டித் தம்மைக் கண்டிக்க வந்தபோது அவரையும் ஆதிசைவர்களையும் சிவாகமங்களையும் கொடுந்தூஷணைக்கு இலக்காக்காது விடுவாரோ என்றும் பெறப்படலால், கடிக்கவரும் பேய் நாயைக் கண்டு ஒருவன் பயத்தினால் அறிவிழந்து முன்பின் யோசியாது அதன்மீது கற்களையும் தடிகளையும் வீசுவதுபோல, சத்தியோசாத சிவாசாரியர் பத்திரப்பிரயோகம் கண்டபோது அச்சந்நியாசியாரும் நிலைடைந்து அச்சிவாசாரியரையும் சிவசாஸ்திரமாகிய சிவாகமங்களையும் நேர்ந்த நேர்ந்தவாறு தூஷித்துத் தீட்டிவிட்டிருப்பாராக, அங்ஙனம் அவர் எழுதியவற்றை நோக்குமிடத்து, எத்தனை தர்க்கசாஸ்திரங்களை அவர் படித்தாரேனும் சுதாகமமேலீட்டினால் ஒவ்வோர் விஷயத்தையும் தொடங்கியவாறு முடிக்க அறியாது முன்பின் முரணுற எழுதியுள்ளாரோ அபுத்தி பூர்வமாகச் சிவாகமஸ்தாபனமுஞ் செய்துவிட்டார் என்பது முன் வந்மாற்றால் யூகிக்கப்படும்.

இவரது முற்கூற்றுப் புஸ்தகத்திற் கண்டிக்கற்கு இலக்காய்க்கிடந்தவற்றைச் சூசிகடாஹ நியாயங்கொண்டு கண்டிப்போம்.

(௫) சூதசங்கிதை பாரதாதி ஆகமங்களைப் பிரமாண மாகக்கொண்டமை.

எங்ஙனம் புத்தர்களுக்குப் பௌத்தாகமமும் க்ஷபணர்களுக்கு க்ஷபணாகமமும் அதிகாரிபேதத்தினாற் பிரமாணங்களாயப் போந்தனவோ, அங்ஙனம் சிவாகமங்களும் அதிகாரிபேதத்தினாற் பிரமாணந்தான் என்றும், வைதிகர்களுக்கு அச்சிவாகமங்கள் பிரமாணமன்று என்றும் கூறிய இவர் முன்வரும் சூதசங்கிதா சுலோகத்தை நோக்குவாராக

அஷ்டாதசபுராணாநாம் கர்த்தா ஸத்யவதீஸுத:|
காமிகாதிப்ரபேதாநாம் யதா தேவோ மஹேச்வர:||

"காமிக முதலிய ஆகமங்கள் பரமசிவனால் அருளப்பட்டுப் பிரமாணமாதல் போல, நாராயணவதாரராகிய வியாசரால் கூறப்பட்ட பதினெண்புராணங்களும் பிரமாணமாகின்றன"

காமிகாத்யாகமா ஶ்ரீ ஸம்ஹிதா நாம ஸ்வேவதோதிக பிரணயநாத்।
ப்ராமாண்யமாவிஸம்வாஹம்। ஸாம்ப நாராயணாவதாரேண வ்யாஸேந
ப்ரணயநாத் புராணெஷுவ்யவிசேஷம்।

எனச் சூதசங்கிதை சிவமாகாத்மிய கண்டத்துப் பிரதமாத்தியாயத்துப் பன்னிரண்டாஞ் சுலோகதீபிகையில் இவர் குருவாகிய வித்தியாரணியர் ஆகமப்பிராமாண்ணியத்தைச் சித்தாந்தமாய்க்கொண்டு புராணப் பிராமாண்ணியஞ் சாதித்திருக்கின்றார். பவுத்தாகமம் ஆருகதாகமம் போலச் சிவாகமமும் ஒருங்கு கணிக்கப்படுமென்றோர்யின், பவுத்தாகமத்துக்கும் ஆருகதாகமத்துக்கும் கர்த்தா சிவனாதல் போல, பதினெண் புராணங்களுக்கும் கர்த்தா வியாசர் என்று சூதர் உரைத்திருக்கலாமே. அங்ஙனம் கூறாமையாற் சிவாகமங்கள் சந்நியாசியார் கருத்துப்பிரகாரம் பவுத்தாதி ஆகமங்களோடு சரிசமமாயிருக்க அன்றாம்.

(௪) வித்தியாரணியர் ஆகமங்களைப் பிரமாணமாக எடுத்தாண்டமை.

"சைவாதி ஆகமங்கள் வைதிகர்க்குப் பிரமாணம் அன்று" என்று கூறிய இவர் காமிகாதி ஆகமங்களைப் பிரமாணமென்று வித்தியாரணியர் கூறாதலோடமையாது, சூதசங்கிதையில் அங்கங்கே தோற்றும் அநேக சுலோகங்கட்கு, இன்ன இன்ன ஆகமம் என்று பெயர் கூறாமற் பொதுவுற ஆகமத்திற் கூறப்படுகின்றன என்று அச்சிவாகம சுலோகங்களைப் பிரமாணமாகக் காட்டியும், சிவாகமப்பெயர்களை எடுத்துக்கூறி மிருகேந்திரம், சுப்பிரபேதம், ஞானரத்தினாவளி, காலோத்தரம், துவிசதிகாலோத்தரம், சித்தாந்தசேகரம், தத்துவப்பிரகாசம், சர்வஞ்ஞானோத்தர முதலிய *ஆகமங்களினின்று பிரமாணம் காட்டியும் விளக்கினமையானும், அச்சூதசங்கிதா சுலோகங்கட்கு ஆருகதியாகமவாக்கியங்களைப் பிரமாணமாக அவர் எடுத்துதகரிக்காமையானும், சிவாகமங்கள் வைதிகர்களுக்குப் பிரமாணமாம் என்பது இவர்க்கும் உடன்பாடாய் முற்றியது. பதினெண் புராணங்களுள்ளே பத்துப புராணம் சிவபுராணங்களேயாக, இப்பத்தினுள்ளும் சைவம் என்பது ஓர் புராணமேயாதல் போல, காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களுள்ளே சைவம் என ஓர் ஆகமம் காணப்படாமையாற் சந்நியாசியார் சிவாகமம் என்று சொல்வதற்குப் பதிலாக ஆங்காங்குத் தமது முற்கா பத்திரிகையிற் "சைவாதி ஆகமம்," "சைவாதி ஆகமம்" என்று எழுதித் தவறுண்டார்.

(ரு) சூதசங்கிதா சுலோகத்தைப் பாரதத்துள்ளதெனக் கொண்டமை.

அஃதன்றி ஸ்ரீசத்தியோசாதசிவாசாரியர் தமது வேதாகமதாரதம்மியத்து எண்பத்தொன்பதாம் பக்கத்திலே மேலே கண்ட அஷ்டாதச (அஷ்டாதஶ) என்னும் சூதசங்கிதா சுலோகத்தைப் பாரதத்திலுள்ளதென்று வழுவுறக் கூறியவிடத்தும், இந்த வழுவைச் சந்நியாசியார் கண்ணுற்றுக் கண்டிருந்தும், அந்தச் சுலோகத்தை எடுத்து விளக்கிப் பாரதத்தில் அச்சுலோகம் இல்லை என்று கூறி, தமக்குப் பரமப்பிரமாணமாகிய சூதசங்கிதையிலே அச்சுலோகம் உள்ளதெனக் காட்டிச் சிவாசாரியரைக் கண்டிக்கப்போவாராயின், இவர் சிவாகமத்தைப் பிரமாணமாகக்கொண்டவராக முடிந்துவிடுவார் என்றும், அங்ஙனம் முடியின் சிவாகமத்திலே மிகுதியும் புகழப்பட்ட ஆதிசைவரை உயர்ந்தவராகக்கொள்ள நேர்ந்துவிடுமே என்றும் ஓர்ந்து, அச்சுலோகத்தைப் பாராதவர்போல விடுத்துவிட்டமையும் இவரது அறிவின் சால்பை நன்கு தொனிப்பிக்கின்றது.

(௯) சிவாக்கினி விரஜாக்கினி பஸ்மம்.

ஆகம மந்திர பூருவமாகச் செய்யப்பட்டு ஆகுதிகளாற் றகிக்கப்படும் விபூதி மந்திராபரச சம்ஸ்காரமுள்ளதென்று சந்நியாசியார் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

“ ஒன்றுமோமாக்கினியேனுமொளிரும்விரசாக்கினியேனும்
பான்மையுதவுதிருநீற்றைப்பகரும்வேதமந்திரத்தாற்
றுங்கியபிமந்திரித்தன்பிற்சுருவாக்கமுழுத்தூளனஞ்செய்
தாங்கத்திரிபுண்டரநெற்றியலம்புயங்களனைந்தணித்து ”

என்றுஞ் சூதசங்கிதை ஞானயோககண்டத்து மூன்றும் அத்தியாயத்துக் கண்ட ஏழாம் எட்டாம் சுலோகங்களை விளக்கப் போந்த போது,

[illegible]

“ விரஜாக்கினி என்பது சிவாக்கினி ” என்றும், “ [illegible] பஸ்மம் ” என்றும் கூறி,

[illegible]
[illegible]

“ வெற்றிகொ சாதந்தா னானின் மனையிலேயின்
னாற்றிடுக மேலை வழும்பு ”

ருபயுக்தனாற் கவ்வியுமதை [illegible] ஹூமயைச
மையு மகோமய பகர்க''

"கோமயத்தை (பூமியிலே விழுமுன்) சலத்திலேயாவது மேல் [illegible] (தாமரை இலையிலாவது, (மேலுள்ள [illegible] கொண்டு), அந்தக் கோமயத்திலே பஞ்சகவ்யத்தை விரமந்திரத்தினாலே வார்த்து, ஆகோரமந்திரத்தை உச்சரித்துப் பிசைந்து உருட்டிப் (பருணி [illegible] அதன்மேல் அவ்வுண்டைகளை வைத்துச்) சிவாக்கினி கற்பித்து அதனாற் றகனம் பண்ணுக", எனப்பொருள் கொள்ளும் நான்கு சுலோகங்களைச் சிவாகமத்தினின்று உதகரித்துக் காட்டிய பின்னர்,* இன்ன மந்திரங் கொண்டு விரஜாக்கினிபஸ்மம் செய்யவேண்டும் என்று வித்தியாரணியா தீபிகையில் உரைத்தமையால, சிவாகமாக்கினிப் பஸ்மமும் விரஜாக்கினிப் பஸ்மமும் பெருமையிலுஞ் சமத்துவமுடையன என்பது சூதாசாரியரா லும், இச்சந்நியாசியார்க்கு முற்பட்டிருந்த வைதிகக் குழுவினர் யாவராலும் ஒப்ப முடிந்த பக்ஷமாக, இச்சந்நியாசியார் ஒருவர் மாத்திரம் சிவாகமாக்கினி விசேஷபஸ்மத்தைப் பொருட்படுத்தாது அதனை நிந்தித்தமையால் வைதிகர்க்கேனும் வைதிகசைவர்க்கேனும் எய்தும் ஹாநி யாதுமின்றாம்.

(எ) பிருகச்சாபாலோபநிடதத்துச் சிவாலய சிவாக்கினி பஸ்மம்.

ஸிவ க்ஷேத்ர தேவாலயஸ்ய ஹவ ஸிவாக்நிஜம் ஸிவயோநிஜம்।
ஸிவாலயஸ்ய ஸம்ஸ்ரீவா வா ஸேவஸ்வாமி [illegible]

"தேவாலயத்துள்ள சிவாக்கினியாலுண்டாகிய விபூதியாவது, சிவாலய (மகாநச) த்திலுள்ள பஸ்மமாவது, அவ்வாலயத்துச் சிவலிங்கத்துக்கு அபிஷேகித்த விபூதியாவது, மந்திரசம்ஸ்காரத்தினாற் றகித்த விபூதியாவது [illegible] கள் அனைவர்க்கும் உரியது" எனப் பிருகச்சாபாலோபநிடதம் கூறுமாற் றுச் சிவத்துவிஜராற் சிவாக்கினியானது வளர்க்கப்பட்டது என அறியப்பட்டு, சிவாசாரியரது சிவாலயத்துச் சிவாக்கினியானது வைதிகம் என்று பிருகச்சாபாலோபநிடதத்தினாற் பெறப்படுவதேயாகவும், சந்நியாசியார் இந்த உபநிடதத்திற் கூறப்பட்ட சிவாலய விபூதியைப் பொருட்படுத்தாது நூற்றுப்பதினொன்றாம் பக்கத்தில் ஆகமிகப் பிராமணர் பிரஷ்டர் என்றும், [illegible] என்றுங் கூறி, ஐம்பத்தெட்டாம் பக்கத்தில் ஆகமிகரிடத்திருந்து வரும் பஸ்மம் [illegible] என்று கூறினமை அச் சந்நியாசியார் தமது மூளையை இந்த உபநிடதத்திலேனும் மற்ற வேத வேதாங்க உபாங்கங்களிலேனுஞ் செலுத்தாது [illegible] செலுத்தித் தம் காலத்தைக் கழித்துவிட்டமையினாலன்றோ? [illegible]

மேலே வித்தியாரணியரால் உதகரிக்கப்பட்ட சிவாகமமந்திரங்கள் ஆபாசமேயாயின், இம்மந்திரங்கொண்டு உதகரித்தற்கு மூலமாய் நின்ற சூதசங்கிதைச் சிரௌதமந்திரங்களும் ஆபாசமாய், இவற்றை உதகரித்த வித்தியாரணியரும் ஆபாசராய், இந்த வித்தியாரணியரை ஆசாரியராய்க் கொண்ட சங்கியாசியாரும் ஆபாசராயன்றே முடிந்து போவார். ஆகலின், பேய் காயைக் கண்டு வெருண்டு கதறுபவர் போலச் சங்கியாசியாரும் "வேதாகமதாரதம்மிய" த்தைக் கண்டு முன்பின் யோசியாது எழுதிய சிவாகமதூஷண வாக்கியங்கள் அப்பிராமாண்ணியமாய், ஆபாசமாய், வழுஉப்பட்டனவாய் முடிந்துபோயின.

ஆகமத்தைத் தொட்ட வைதிகர்களுக்கு ஸ்மிருதியானது பாதகமேற்றிப் பிராயச்சித்தம் கூறுகின்றதென்று கூறிய சங்கியாசியார் மேலே கூறியவாறு மிருகேந்திரமுதலிய ஆகமங்களை, சூதசங்கிதா சுலோகங்களை விளக்குமாறு, பரிசித்த வித்தியாரணியர்க்கும், அச்சூதசங்கிதா சுலோகங்களுக்குக் கீழே உதகரிக்கப்பட்ட ஆகமசுலோகங்களைப் படித்த தமக்கும், மற்றைய வைதிகர்க்கும் ஸ்மிருதிப் பிரகாரம் யாது பிராயச்சித்தஞ் செய்தனரோ? இவர் படிப்பது ஒன்றும் எழுதுவது மற்றொன்றுமேயாக முரணுற்று முடிகின்றார் என்பதைச் சிவநேசச் செல்வர்கள் யாவரும் யூகிப்பாராக. தமது குருவாகிய வித்தியாரணியர்க்குப் பிராயச்சித்தம் விதிக்கும் பரமாசாரிய சங்கியாசியார் பின் யாதுதான் செய்யத்துணியார்!

(அ) சந்நியாசியார் சித்தாந்த சேகரத்தைச் சிவாகமமென அறியாது மயங்கினமை.

கேரள சங்கரராற் பதினெட்டுத்தரம் படித்து அங்கங்கே திரிவுபடுத்தப்பட்ட சூதசங்கிதையைச் சங்கியாசியார் நெடுங்காலமாகப் படித்துப் பயின்றவரன்றி ஏனைய சாஸ்திரங்களிற் பெரிதும் பயிற்சியுடையராகத் தோன்றவில்லை; இச்சங்கியாசியார் தமது முற்கரபத்திரிகையில் இலிங்கபுராணம், சித்தாந்தசேகரம், போதாயனம், சிவபுராணம், பவிஷ்யபுராணம், பாரதம், சிவதருமம் என்னும் நூல்களினின்று சுலோகங்களையெடுத்து வைதிக விபூதி என்பதற்கும் பிரமாணமாக உதகரித்திருக்கின்றார். அங்ஙனம் உதகரிக்கும் இவர் இந்த விபூதி மான்மியங்களைக் கூறிய இலிங்கபுராணம் சிவபுராணம் என்பவற்றை நேரே எடுத்து நன்கு படித்திருப்பாராயின், சிவாகமங்களையும் சிவாசாரியர்களையும் வாயில் நேர்ந்த நேர்ந்தவாறு தூஷித்திருக்கமாட்டார். இந்த இலிங்கபுராண சிவபுராண உதாகரண சுலோகங்களை அவரது தூஷண முற்கர பத்திரிகையிற் கண்டபோது சங்கியாசியார் இந்த நூல்களையெல்லாம் சித்தியாஸ்தானங்களென்றும், வேதோபப்பிருங்கணங்

களொன்றும் அங்கிகரித்தமையின், சிவாகமங்களையும் சிவாசாரியர்களை யும் தூஷித்திருக்கமாட்டாரே என்று யாம் யோசித்தபோது, இலிங்கபுரா ணமுதலியவற்றினின்று உதகரிக்கப்பட்ட சுலோகங்களெல்லாம் சூதசங் கிதை யஞ்ஞவைபவகண்டத்து முப்பதாம் அத்தியாயத்துப் பதினான்கு சுலோகத்தின் கீழ் உதகரிக்கப்பட்டிருத்தல் கண்டு, அந்தச் சிவாகமதூஷ [illegible]சங்கியாசியார் இளிப்பிள்ளைபோன்றிருக்கின்றாரன்றி விசேஷ அறிவினையு டையவரன்றென்று ஓர்ந்துகொள்ள நேர்ந்தது.

மேலும், வித்தியாரணியர் சூதசங்கிதா சுலோகங்கட்கு ஆங்காங்கு உதகரித்த சிவாகமசுலோகங்களையும் பொருட்படுத்திலரல்லர். இதனால் இவர் தமக்குப் பெரியவராகக் கொண்ட வித்தியாரணியர்க்கே கட்டுப்பட் டவராய்த் தோன்றவில்லை. ஏதனாலெனின், வித்தியாரணியர் உதகரித்த சிவாகமவாக்கியங்களைப் பொருட்படுத்தியிருப்பாரேற் சிவாகமவாக்கிய மந் திரங்களை "ஆந்தராளிகம்" என்றும், "ஆபாசம்" என்றும் கூறத்துணி வாரா? வித்தியாரணியர் சிவாகம சம்பந்தமாகிய சித்தாந்த சேகர சுலோ கங்களைப் பிரமாணமாக யஞ்ஞவைபவகண்டத்து ௩௦-ஆம் அத்தியாயத்திலே உதகரித்திருப்பாராக, தாம் கொண்ட கருத்தின்படி. சிவாகமம் "ஆபாச மந் திரமுடையது" என்றும், "வைதிகர் பரிசிக்கற்பாலதன்று" என்றும், "புராணத்திற்றாழ்ந்தது" என்றும், "வைதிகத்திற் றாழ்ந்தது தாந்திரிகம்" என்றும், "சிவாகமத்தைப் பரிசிக்கிற் பாதகம் ஏறும்" என்றும், "அதற் குப் பிராயச்சித்தஞ் செய்யவேண்டும்" என்றும், வேதாந்தத்துக்கு விரோ தமுறப் பேசுவது சிவாகமம்" என்றும் பலபிரகாரமாகத் தமது முற்கர புஸ்தகத்திற் பற்பல தூஷணஸ்திரங்கள் விடுத்துவைத்த சங்கியாசியார், சித் தாந்தசேகரம் சிவாகமசம்பந்தமுடையதென்று ஓர்ந்து தவிர்த்துவிட அறி யாது போதாயன ஸ்மிருதி முதலாயின போன்ற ஓர் நூல் என்று மயங்கி அச்சித்தாந்த சேகரத்தைச் சேர்த்து எழுதிச் சிவாகமத்தைச் சங்கியாசியார் பரமப்பிரமாணமாக அங்கிகரித்தவராய் முடிந்தார். இவர் எத்தனை தர்க்க சாஸ்திரங்களைப் படித்தும் என்! இவர் எத்தனை தூஷணங்களைச் சிவாக மங்கண்மீதும், சிவாசாரியர்கண்மீதும், தேவார திருவாசகங்களாகிய தமிழ்ப் ப்பாஷாப் பிரபந்தங்கண்மீதும் பொறாமைமேற்கொண்டு பொழிந்தும் என்! இவர் பரந்து ஓடிச் சுற்றித்திரிந்தும் கட்டகுடிப்பிரயாத நியாயத்தினால் நமக்குள்ளே சிக்குண்டு போயினர்.

அஃதன்றிச் சூதசங்கிதையிலே வித்தியாரணியர் சித்தாந்த சேகரத்தி [illegible] இரண்டு வரிகள் அடங்கிய ஒரு சுலோகம் மாத்திரம் உதகரித்திருக் கின்றார்; அதனால் அது சிவாகமவாக்கியமென்று அறிந்துகோடற்குச் சங் கியாசியாரது சுருங்கிய அறிவு அளவுபடுத்த முடிந்திலது. அஃதொழிந்து

இத்தகைய பிரமாணங்களால் ஸ்ரௌத விபூதியைச் [illegible] லானபோலாக, சூத சங்கிதையிலே [illegible] கண்டுகொண்ட சத்தியோசாத சிவாசாரியரே னும் மற்றைச் சிவாசாரியரேனும், சூதசங்கிதையில் இன்ன இடத்திலே இச்சுலோகங்கள் [illegible] காட்டாதிருந்தாரெனி னும் [illegible] சித்தாந்தசேகர சிவாகமப் பிரமாணத்தை [illegible] பார்க்க [illegible] என்றும் [illegible] அச் சித்தாந்தசேகர சிவாகம சுலோகங்களைத் தமது முத்திரைப் பத்திரிகையின் [illegible]-ஆம் பக்கத்து உ-ஆம் வரியிலே வச்சிரசிபாசியார் சேர்க்கா தொழிந்த மையுடனும், அவ்வாகமத்தைப் பிரமாணமாகக் கொண்டவராய் அகப்பட்டுப் போயினர்.

[illegible] ஆகமமான்து அக்கினிகோத்திர விபூதியையேனும் கற்பமெனப்படும் விபூதியையேனும் பொருட்படுத்திக் கூறமாட்டாதே, அங்ஙனமாகவும் சித் தாந்தசேகரமானது அக்கினிகோத்திர விபூதியையும் கற்பவிபூதியையும் விதி கட்டனஞ் செய்கின்றதே. ஆகலின், அது மற்றோர் வைதிக நூலாயிருக்கலாம என்று சந்நியாசியார் மயங்கி ஓர்ந்து அச்சித்தாந்தசேகராகமத்தை அங்கி கரித்தனராயினர் என்று கூறலுமாம்.

(கூ) சூதசங்கிதை சிவாகமதருமத்தைச் சிறந்ததென்றமை.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

சைவாகமத்திற் கூறப்பட்ட தருமம் மேலானது சந்தேகமில்லையன்றோ; சைவாகமத்திற் கூறப்பட்ட தருமம் இருபிரகாரமாயது என்று மேலே கூறப்பட்டது; அகஸ்சுரோதசினின்று (கீழ்ச்சுரோதசினின்று) பிறந்தது ஒன்று; ஊர்த்துவசுரோதசினின்று (மேற்சுரோதசினின்று) பிறந்தது மற் றது; கீழ்ச்சுரோதசினின்று உண்டாகிய தருமத்திலும் மேற்சுரோதசினின் றுண்டாயது மேலானது [illegible] பலவேறாய் அநேக பிரகாரமாய் உள்ள [illegible] கீழ்ச்சுரோதசிலே உண்டாகிய தரும [illegible] னம் அநேகபிரகாரமாயுள்ளது" என்று யஞ்ஞவைபவகண்டத்து உ0-ஆம் அத்தியாயத்திற் கூறப்பட்டிருக்க, வித்தியாரணியர் தீபிகையிலே சுத்தியோ

கூத முதலிய ஐம்முதல் இரண்டின்று முறையே காமிகாதி ஆகமங்கள் ஐந்தும் தீப்தாதி ஆகமங்கள் ஐந்தும், விஜயாதி ஆகமங்கள் ஐந்தும், இரௌரவாதி ஆகமங்கள் ஐந்தும், புரோற்கீதாதி ஆகமங்கள் எட்டும் பிறந்தன என்று சிவாகமப்பிரமாணங்கள் கூறுதல் இவை ஊர்த்துவஸ்ரோதசினின்று பிறந்தன என்றும், கீழ்ஸ்ரோதசினின்று (அஃதாவது நாபிக்குக் கீழிருந்துண்) டாகிய ஆகமம் காபால முதலிய ஆகமங்கள் என்றும் கூறுகின்றமையான், காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்கள் காபாலாதி ஆகமங்களோடு சம்பந்த முடையன அன்றென்று பெறப்படுகின்றது.

(கo) லளிதாசகஸ்ரநாமபாஷ்யம் சிவாகமங்களை வைதிகம் என்றமை.

[Sanskrit verse in Grantha script]

என்னும் மந்திரத்துக்குப் பொருள் கூறுங்கால் காமிகாதி ஆகமங்களை வேதத்தை அநுசரித்தன (வைதிகமாயா) என்றும், காபாலாதி ஆகமங்களை வேதவிருத்தமாயுள்ளன (வேதவிருத்தா) என்றும் கூறுமாற்றால் காமிகாதி ஆகமங்கள் வைதிகாகமங்கள் என்பது பெறப்பட்டது. பகவே, சற் பியாசியார் திருமூலர் கூறிய வாக்கியத்தும் இடமுண்டது. மேலும், ஸ்ரீகாளகஸ்திஸ்தலபுராணத்து எக-ஆம் அத்தியாயத்து கஅ-ஆஞ் சுலோகத்தில் காமிகாதி ஆகமங்கள் வைதிகாகமம் (வைதிகாகமம்) என்று கூறப்பட்டிருக்கின்றது.

(கக) சனற்குமாரசங்கிதையும் வாயுசங்கிதையும் காமிகாதி ஆகமங்களை வைதிகசித்தாந்தம் என்றமை.

வாயுசங்கிதை வைதிகாகமத்தில் இரு பகுதிகள் உண்டென்று கூறுகின்றது, ஒன்று காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்கள், மற்றது நூறுகோடி விரிவினையுடைய ஆகமம் சனற்குமாரசங்கிதையானது வாயுசங்கிதா சுலோகத்துக்குப் பொருள் செய்யுங் கிரமத்தைக் காட்டுகின்றமையான் முதற் கண்ணே சனற்குமாரசங்கிதா சுலோகங்களை உதகரிக்க அவையான பொருள் விளக்குவாம்.

[Sanskrit verses in Grantha script — 5 lines]

(இ-ள்) - ஶிவாக³ம: ஶ்ரௌதாஶ்ரௌத விபே⁴தே³ந த்³விப்ரகார:= சைவாகமமான சிரௌதம் (வைதிகம்), அசிரௌதம் (அவைதிகம்) என இரு வகைப்படும்

ஶ்ருதிஸாரமய: ஶ்ரௌத:= சுருதிசாரமாயுள்ளது சிரௌதம் (வைதிகம்);

ஸபுநர்த்³விவிதோ⁴மத: ஸ்வதந்த்ர இதரஶ்சேதி= அது (வைதிகம்) பின்னர்ச் சுவதந்திராகமமும் இதராகமமும் என இருவகைப்படும்;

ஸ்வதந்த்ரோ த³ஶதா⁴ பூர்வம் ததா²ஷ்டாத³ஶதா⁴பரம் ஸித்³தா⁴ந்தஸஞ்ஜ்ஞக இதி கீ³யதே= சுவதந்திராகமமானது முன்னர்ப் பத்தும் பின்னர்ப் பதினெட்டுமாய் (எனவே, இருபத்தெட்டாய்) சித்தாந்தம் என்று கூறப்படும்;

ஶ்ருதிஸார இதரஸ்து ஶதகோடி ப்ரவிஸ்தர:= சுருதிசாரமாயுள்ள இதராகமமானது (மற்ற ஆகமமானது) நூறுகோடி விரிவினையுடையதாகும்'' என்று சனற்குமாரசங்கிதை கூறுமாற்றால் சுவதந்திரமாகிய சுருதிசார வைதிகாகமமானது காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களாம் என்றும், சுருதிசாரமாயுள்ள வைதிக இதர ஆகமமானது நூறுகோடி விரிவினையுடையதாமென்றும் பெறப்படலான், காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களும் வைதிகாகமங்களாம். வாயுசங்கிதையும் அங்ஙனம் வைதிகாகமத்தை இருபிரகாரமாகக் கூறுகின்றது. எங்ஙனமெனின்,

ஶைவாக³மோ(அ)பி த்³விவித⁴: ஶ்ரௌதோ(அ)ஶ்ரௌதஶ்ச ஸம்ஸ்ம்ருத:|
ஶ்ருதிஸாரமய: ஶ்ரௌத: ஸ்வதந்த்ர இதரோ மத:
ஸ்வதந்த்ரோ த³ஶதா⁴ பூர்வம் ததா²ஷ்டாத³ஶதா⁴ பரம்|
காமிகாதி³ஸமாக்²யாபி⁴: ஸித்³த⁴: ஸித்³தா⁴ந்தஸஞ்ஜ்ஞித: |
ஶ்ருதிஸாரமயோ யஸ்து ஶதகோடிப்ரவிஸ்தர:|

(இ-ள்) ஸ ஶைவாக³மோ(அ)பி த்³விவித⁴: ஶ்ரௌத: அஶ்ரௌதஶ்ச ஸம்ஸ்ம்ருத:= அந்தச் சைவாகமமும் வைதிகம் அவைதிகம் என இருதிறப்படும்;

ஶ்ருதிஸாரமய: ஶ்ரௌத:= சுருதிசாரமாயுள்ள வைதிகாகமமானது;

ஸ்வதந்த்ர: இதர: மத:= சுவதந்திராகமமும் இதராகமமும் என (இரு பிரிவாகக்) கொள்ளப்படும்;

ஸ்வதந்த்ர: த³ஶதா⁴ பூர்வம் ததா² அஷ்டாத³ஶதா⁴ பரம் காமி

[illegible]=சுவதந்திராகமமானது முன்னர்ப் பத்தும் பின்னர்ப் பதினெட்டுமாய் (இருபத்தெட்டாய்) காமிகாதி நாமங்களோடு முடிந்த சித்தாந்தம் எனப் பெயர் பெறும்;

[illegible]=சுருதிசாரமாயுள்ள இதராகமமானது (மற்ற வைதிகாகமமானது) நூறுகோடி விரிவினதாகும்.

(கஉ) வாயுசங்கிதையும் சனற்குமாரசங்கிதையும் வாமபைரவாதி அசிரௌதாகமங்களையும், கூர்மபுராணம் காமிகாதி ஆகமங்களையும் எடுத்துக் கூறாமைக்குக் காரணம்.

இங்ஙனம் வாயுசங்கிதையும் சனற்குமாரசங்கிதை கூறுமாறு, சுருதிசாரமாகிய வைதிக சுவதந்திராகமமானது சித்தாந்தம் எனப் பெயர்கொண்ட காமிகாதி இருபத்தெட்டாகமங்களாம் என்றும், சுருதிசாரமாகிய மற்ற ஆகமமானது நூறுகோடி விரிவினையுடையதாம் என்றும் அறியற்பாற்று. அறியவே, சனற்குமாரசங்கிதையினும் வாயுசங்கிதையினும் அசிரௌதம் என ஓர் ஆகமம் காணப்படுகின்றதே, அது யாதெனக் கூறப்படாதபோனமை மலைவாம் பிறவெனின், ஆகாது; கூர்மபுராணம் சூதசங்கிதை முதலியவற்றிலே அசிரௌதபாசுபத மானது சாக்தம், வாமம், லாகுளம், பைரவம், பாஞ்சராத்திரம் என்றற்றொடக்கத்தனவாகக் கூறப்பட்டிருத்தல்பற்றி அவற்றை ஈண்டு எடுத்துக் கூறல் மிகையாம் என்று கொண்டு விடப்பட்டமையின். கூர்மபுராணத்தினும் சூதசங்கிதையினும் கவுதமர் சாபம் கூறப்பட்டவிடத்துக் காபாலம் லாகுளமுதலிய அவைதிகாகமங்கள் எடுத்துக்கூறற்கு ஆவசியகமாய், வைதிக காமிகாகமங்களை எடுத்துக் கூறல் அநாவசியகமாய் முற்றியது போல, சனற்குமாரசங்கிதை வாயுசங்கிதைகளிலே வேதசிரசுகளாகிய உபநிடதங்களுக்கு உபப்பிருங்கணஞ் செய்தற்குக் காமிகாதி ஆகமங்களை எடுத்துக்கூறல் ஆவசியகமாய் முற்றவே, அவைதிக காபாலாதி ஆகமங்களை எடுத்துக் கூறல் அநாவசியமாய்ப் போந்தது. கர்ஷணாதிப் பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தாந்தம் என்பவற்றைச் சுருதியினின்று எடாது தானே சுவதந்திரமாய் எடுத்துக் கூறுதலின், காமிகாதி இருபத்தெட்டும் சுவதந்திராகமம் எனப்பட்டதென்றூர் தெளிதயோரியார்.

(கங) சிவத்துவிஜர்க்கு வைதிகசந்தியாவந்தனம் சைவசந்தியாவந்தனம் என்னும இரண்டும் உரியன என்றமை.

இவ்விறந்த சுருதிகளைச் சிவாகமங்கள் அநுவதித்து பிரதிபாதிப்பனவேயாக, அச்சுருதிகளைச் சிவாகமம் விதித்த பிரகாரம் சிவத்துவிஜரகிய ஆதிசைவர் எடுத்துப் பிரயோகஞ் செய்தலான், இவர்களைச் சந்நியாசியார் நிஷாதஸ்தபதி நியாயத்துக்கு இலக்காக்கப்போந்தமை அவர் சுருதியுங் கற்றுப் பயின்றறிந்த குதர்க்கநியாயப்போலியின் பாலதாம். இந்தச் சிவத்துவிஜர் உபநயன சம்ஸ்காரத்தினாலெய்திய வைதிகாநுஷ்டானமும், சிவதீக்ஷையினாலெய்திய சைவாநுஷ்டானம் என்னும் இரண்டுக்கும் உரியராவர்

[illegible]

"வைதிகசந்தியாவந்தனத்தை முதற்கண்ணும், சைவசந்தியாவந்தனத்தை அதன் பின்னுஞ் செய்க" என்று பிருகத்காலோத்தராகமமும,

[illegible]
[illegible]

என்று சூட்சுமாகமமும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(வைதிக சந்தியாவந்தன) மந்திராசமனத்துக்குரிய மந்திரத்தொடக்கத்தையும், அர்க்கியத்திரய ஆசமனத்தையும், மார்ச்சனமந்திரத்தையும், காயத்திரி செபமுதலியவற்றையும் குறித்துப் பச்சிமத்துவாரார்ச்சனவிதிப்படலத்திற் காமிகாகமத்து உத்தரபாகமும் கூறுமாற்றால், சிவத்துவிஜர் வைதிகாநுஷ்டானமுஞ் சைவாநுஷ்டானமும் என்னும் இரண்டுக்கும் உரியரேயாக, சந்நியாசியார் வைதிக "உபநயனாதி - குணியுராகையாற் சிவத்துவிஜர்க்கு வேதாதிகாரத்துவம் இல்லை" என்றும், "தாந்திரிகர் வேதபாகியர்" என்றும், "தாந்திரிகரிடத்தில் வைதிகத்துவம் இராது" என்றும், "தாந்திரிகன் வைதிகனாகான்" என்றும், "தாந்திரிகர்க்கு வேதாதிகாரமில்லாமையால் வேதாத்தியயனாதி கர்மமில்லை" என்றும், "இந்தக் கர்மமில்லாமையால் துவிஜத்துவம் இல்லை" என்றும் மிகுதியும் இழித்துக் ககஅ-ஆம் பக்கங்களிற் கூறிய இழிமொழிகளெல்லாம் அயுக்தமான்னிய[illegible]ாலியரைகளாய்த் தொலைந்தொழிந்து போயின.

(கச) அப்பயதீக்ஷிதயோகியார் சிவாகமங்களைப் பிரமாணமாகக் கொண்டமை.

ஶிவாகமாநாமப்ராமாண்யவாதிநாம் மதம் நிரஸ்தம்।

"சிவாகமங்கள் பிரமாணம் அன்றென்று கூறும் மூர்க்கருடைய பிதற்றுரைகள் பிடர்பிடித்து உந்தப்பட்டன" என்று ஏகான்மவாதிகள் பொருட்டுச் சித்தாந்தலேசசங்கிரகம் (ஸித்தாந்தலேஶஸங்க்ரஹம்), பரிமளம் (பரிமலம்) முதலிய ஏகான்மவாத நூல்களை இயற்றிய ஸ்ரீ அப்பயதீக்ஷிதரவர்கள் சிவதத்துவ விவேகத்திற் கூறியிருத்தலானும், சிவாகமங்கள் அப்பிராமாண்ணியப்படுத்தப்படுவன அன்று.

(கரு) அரதத்தாசாரியர் சிவாகமங்களைப் பிரமாணமாகக்கொண்டமை.

வேதம் ப்ராமாணிகம் ஸம்ப்ரமாண வஶாத்
திவ்யாகமாந் மந்யதே ஜநஃ ப்ராமாண்யம்।
யஸ்மாந் மத்த்யாநவிஷயம் வேதோ ப்ரூதே
ரூபலக்ஷணம் ஆகமஸ் ததாஹ॥

"வேதத்தைப் பிரமாணமாகக் கூறுகின்ற சனங்களே உம்முடைய திவ்யாகமங்களையும் பிரமாணமென்று அறிகின்றார்கள்; எதனாலெனின், உமது தியானத்தைக் கூறியது வேதம்; அதனைச் செய்தற்கு வேண்டற்பாலதாகிய சொரூபலக்ஷணத்தை ஆகமம் கூறுதலான்" என்று அரதத்தாசாரியர் தமது சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்தில் உரைத்திருக்கின்றார். அதனால் வேதத்தைப் போலச் சிவாகமம் பிரமாணமாம் என அறியப்படுகின்றது. மேலே கூறிய வைதிகப் பெரியோரெல்லாம் காமிகாதி சிவாகமங்களை வைதிகங்கள் என்றும், பிரமாணங்களாம் என்றும் கூறியிருப்பனவற்றை, முன்பின் விரோதமற எழுத அறியாத சந்நியாசியார் சிவாகமத்தை அவைதிகம் என்று பிரமாணமொன்றுமின்றி வெறிய வாயால் நிந்தித்தலும், மாற்றுதலும் செயிக்கவன்மையுடையனவா! ஓர்போதும் ஆகாது! ஆகாது!!

(கசு) வித்தியாரணியரும் ஸ்ரீ நீலகண்டசிவாசாரியரும் வேதங்கள் மூவருணத்தார்க்கும், சிவாகமங்கள் நால் வருணத்தார்க்கும் உரியன என்றமை.

சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டத்து உபரிபாகத்துச் சூதகீதை அ-ஆம் அத்தியாயத்து உகி-ஆம் சுலோகத்திலே,

[illegible]

"சுருதிமார்க்கத்தினின்று வழுவிய மனிதர்க்கே தந்திரம் (ஆகமம்)" என்று கூறப்பட்டிருக்கின்றது. இதன் பொருளை விளக்குவம்.

[illegible]

"காமிகமுதலிய ஆகமங்களும் சுருதிகளும் மேலே கூறியவாறு அத்துவிதீய பரசிவசொரூப பரமான்மாவைப் பிரதிபாதித்தலின் விரோதமில்லை" என்றும், "அங்ஙனமாயினும உபநயன சம்ஸ்காரமுள்ள எம் மூவருணத்தார்களும் சுருதியில் அதிகாரமுடையர்களோ, அம்மூவருணத்தாரும் அந்தச் சுருதிவாயிலாகவே பரதத்துவத்தை அடையற்பாலர்; எவர்கள் சுருதியில் அதிகாரமிலரோ அவர்கள் ஆகமவாயிலாகப் பரதத்துவத்தை அடையற்பாலர் என யூகிக்கற்பாற்று" என்றும் வித்தியாரணியர் தீபிகையிற் கூறுமாற்றானும், அவ்வித்தியாரணியர் சுருதிகளும் ஆகமங்களும் அத்துவிதீய பிரமபரத்துவத்தைப் பிரதிபாதிப்பன என்று அபேதமுற உரைக்குமாற்றானும், சூதசங்கிதையிலே ஆங்காங்கு நேர்ந்த சுருதியர்த்தங்களை வைதிகராகிய தாம் சுப்பிரபேதமுதலிய ஆகமப் பிரமாணங்கொண்டு நிரூபணஞ் செய்யுமாற்றானும், சுருதியில் அதிகாரமில்லாதவர்கள் (சூத்திரர்கள்) பரதத்துவத்தை ஆகமவாயிலாக அடையலாம் எனக் கூறுமாற்றானும, ஸ்ரீநீலகண்டசிவாசாரியர்

[illegible]

"வேதம மூவருணத்தார்க்குரியது, மற்றது (சிவாகமம்) நால் வருணத்தார்க்குமுரியது" என்றும், "வேதமும் ஆகமமும் ஒரே பொருளைப் பிரதிபாதித்தலின்" என்றும் கூறினமை வித்தியாரணியர் கருத்துக்குப் பொருத்தமாய்ப்போந்தது.

இங்ஙனமாகவும் சந்நியாசியார் தமது முற்கரபுஸ்தகத்து எக-ஆம் பக்கத்திலே,

[illegible]

என்றும், சஙி-ஆம் பக்கத்தில் "கவுதமாதி மகர்ஷிகளின் சாபத்தால் வேதாதிகாரம் தகிக்கப்பட்டுப் போனமையால், இந்தப் பிரஷ்டப்பிராமணாத மர்களுக்காகமாத்திரஞ் செய்யப்பட்ட காமிகாதி ஆகமங்கள் வைதிகர்களுக்கு ஒருக்காலும் கிரகிக்கத்தக்கன அன்று" என்றும், "பூர்வஜென்ம பாவத்தாற் சூத்திரசரீரமெடுத்த ஜாதிசூத்திரரும் ஆகமத்தைக் கிரகிக்கக்கூடாது" என்றும் சூதசங்கிதை கூர்மபுராணமுதலியவைகளுக்கும், "வித்தியாரணியர் கூறினமைக்கும் மாறுபடச் சந்நியாசியார் தமது வாயையே சுருதிப்பிரமாணமாக நினைந்து எழுதிய பெரும் பொய்களெல்லாம் தூரம் போய்த் துச்சமாயின.

(கஎ) காமிகாதி ஆகமப்பிரகாரம் தீக்ஷைபெறுக என்று கவுதமர் சாபமிட்டார் எனல் முழுப்பொய்

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் "வேதசிவாகமங்கட்கு பேதங் காண்கிலேம்" என்றற்றொடக்கத்தனவாகக் கூறிய திவ்ய வாக்கியங்களை ஒன்றையேனும் பிரமாணம் ஒன்றையேனும் விடுத்துக் கண்டிக்காது, தமது பத்திரிகையிற் றமிழ் எழுதிய இடங்களினெல்லாம் பெரிதும் பொய்யுரை பொதிந்து வைத்தாற் போலவே, எ௰, எக, எ௨-ஆம் பக்கங்களிற் சம்ஸ்கிருதம் எழுதுகின்றேம் என்று குதர்க்கம் பொதிந்து வைத்திருக்கின்றார். இங்ஙனம் நமக்கெல்லாம் தெரிந்த விஷயத்திலே இத்துணை குதர்க்கமும் பொய்யும் வரைந்துவிடுவாராயின், சமஸ்கிருதமறிந்து சிறிதும் வீசப்பெறாத ஏனைய பாப்பாரையும் சூத்திரரையும் சந்நியாசியார் என்ன ஆட்டம் ஆட்டி வைக்க மாட்டார்!! முற்கூறப்பெற்ற நகூ-ஆம் பக்கத்திலே பஞ்ஞையபங்கிண்டத்து ௬௨-ஆம் அத்தியாயத்தினின்று பெயர்த்து எழுதப்பட்ட சுலோகங்கள் ஒன்றிலேனும் காமிகாதி ஆகமங்கள் எடுத்துக் கூறப்படாதிருப்பனவாகவும், இந்தச் சந்நியாசியார் "ஹே! பிராம்மணாதமர்களே! இன்றும் சுருதி விருத்தங்களாயிருக்கின்ற காமிகாதி ஆகமங்களிலேயும் சிரத்தையோடு தீக்ஷை அடையக்கடவீர்கள்" என்று கவுதமர் சபமிட்டதாகப் பெரும்பொய் புகுத்தி எழுதியிருக்கின்றார். இவர் அங்ஙனம் அந்த ஆம அத்தியாயத்திலேனும் மற்றைப் புராணத்திலேனும் கவுதமர் சாபங் கூறிய விடத்துக் காமிகம் என்னும் பதம் பிரயோகிக்கப்பட்டிருத்தலைக் காட்டுவாராயின், இவர் சிவாகமங்களைப்பற்றியும் சிவாசாரியர்களைப்பற்றியும் எழுதிய தூஷணைங்களை மெய்யென்று அங்கீகரித்து வாளாவிருந்துவிடுவேம். இவர் ஓர் போதும் காட்ட வல்லுநரல்லர். இவர் மெய் கலவாது சுத்தப்பொய் கற்பித்துப் பேசுவதில் மகாசமர்த்தர்!

ஶிவஜ்ஞாநவராய ஶிவஜ்ஞஸ்ய ஈஶிஷ்ணவே

"சிவபக்தர்க்கு அபராதமும் சிவஞானதூஷணமுஞ் செய்பவர்க்கு (ஞானம் உற்பத்தியாகாது)" என்று முக்திகண்டத்து கூ-ஆம் அத்தியாயத்திற் கூறப் பட்டிருப்பவும், சிவபெருமானுக்குப் பக்தர்களாயும், ஆன்மார்த்த பரார்த்த பூசைகளுக்கு அதிகாரமுடைய சிவாசாரியர்களுமாயுள்ள முப்பொழுதுந் திருமேனி தீண்டுவாரையும், பாசஞானம் பசுஞானம் என்பவற்றுக்கு மேற்பட்ட பதிஞானமாகிய சிவஞான சிவாகமத்தையும் தூஷிப்பவர்க்கு யாது கதி எய்துமோ? யார் அறிவார்!! இவர் ஒன்றை மற்றொன்றாகப் புரட்டி எழுதி

"கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும்"

என்னும் திருக்குறளுக்கு இலக்காயினர்.

(கூ) சிவாகமப்பிரகாரம் சிவாசாரியர்களாற் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயங்களுள்ளே வைதிகரைப் பிரவேசித்து வழிபாடு செய்யுமாறு சந்நியாசியார் உளுற்றினமை.

சிவாகமத்தைச் சிரமேற் போற்றி அவ்வவ்வாகமப் பிரகாரம் சிவாசாரியராற் பிரதிஷ்டை செய்யப்பட்ட "சிவபெருமான் வைதிகர்களால் வந்திக்கற்பாலர், சேவிக்கற்பாலர், பூசிக்கற்பாலர்" என்று சூதசங்கிதையிற் கூறப் பட்டிருப்பதேயாகவும், சந்நியாசியார் சிவாகமங்களிலே பெரிதும் புகழப் பட்ட பெரியோரை "அமேத்தியங்கள்" என்றும், "அதிசீசர்" என்றும், "நரமாதமர்" என்றும், "மிலேச்சர்தாமும் பரிசிக்கத் தகாதவர்" என்றும், நாம் இங்கே நினைக்கவும் பேசவும் எழுதவும்கூடாத அத்துணைக் கொடுந்தூஷண மொழிகளால் இழிவுபடுத்திக் கூறியிருப்பாராக, இவ்வியல்பினராகிய ஆசாரியராற் சந்நியாசியார் கருத்தின்படி சிவாகம ஆபாச மந்திரங்கொண்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கங்களை வைதிகர் வந்திக்கலாம், சேவிக்கலாம், பூசிக்கலாம் என்று அச்சந்நியாசியார் எங்ஙனம் கூறத்துணிந்தார்? அதிசீசனுடைய வீட்டினுள்ளே எந்தப் பார்ப்பானுயினும் எத்துணை ஆவசியகமிருந்தபோதினும் நுழையத்துணிவானோ? நுழைவானாயின், அப்பார்ப்பானுக்கு அதிசீசத்துவம் எய்துமன்றோ. அமேத்தியமாகிய மலசலாசத்துள்ளே பார்ப்பானுயினும் மற்றெவனேனும் புத்தி பூருவமாகத் தன் காலை வைத்துத் தன் சரீரமெங்கும் அதனைப் பூசிக்கொள்வானோ? அங்ஙனம் வைப்பானாயின் அவன் சரீரமுழுதும் துர்மலநாற்றம் எய்துமன்றோ. அங்ஙனமாகவும் அதிசீசத்துவமும், மிலேச்சத்துவமும், அமேத்தியத்துவமும், சண்டாளத்துவமும் நிறைந்துள்ள ஸ்தானத்துள்ளே வைதிகப் பிராமணர்

களை யாதுகாரணம்பற்றிப் பிரவேசிக்குமாறு சந்நியாசியார் உஞற்றுகின்றார்? சிவாகமங்கண்மீதும் சிவாசாரியர்கண்மீதும் கொடுந் தூஷணம் புரிந்து அங்ஙனம் புரிந்தவாறே நின்று அதனை நீடு சாதிக்கமாட்டாது, நிக்கிரகஸ்தானமெய்தி வைதிகர்கள் கோயிலினுள்ளே பிரவேசிக்கலாம் என்று இடங்கொடுக்கின்றார்.

(கக) சிவாகமங்கள் வைதிகம் எனப் பெறப்படல்.

அஃதன்றிச் "சிவாகமத்தைப் பரிசித்த வைதிகர்க்கு ஸ்மிருதியானது பாதகமேற்றிப் பிராயச்சித்தம் சொல்கின்றது" என்று எகூ-ஆம் பக்கத்திற் கூறிய சந்நியாசியார் கஅ-ஆம் பக்கத்திற் "பிரமா விஷ்ணு என்றற்றொடக்கத்த சிவாகமவாக்கியங்களைப் பெயர்த்தெழுதித் தமது வாக்குப்பிரகாரம் தாம் பாதகராய்ப்போதலோடமையாது, வைதிகர்களை ஆதிசைவருடைய ஆலயங்களுள்ளே நுழையச்செய்து அவர்களைக் கொடுந் தூஷணங்களுக்காளாக்கி இழிவுபடுத்தியும் விட்டார். இதனாற் சந்நியாசியார் ஆதிசைவரைத் தூஷித்திலர்; பின், முன்பின் விரோதமுறுமே என்று ஆராயாது எழுதிய தம்மீதும் வைதிகர்மீதும் தூஷணங்களை ஏற்றிச் சிவாகமங்களை வைதிகம் என்று ஸ்தாபித்துவிட்டாராயினர்.

(உ0) சந்நியாசியார் சிவாகமங்களைப்பற்றி முரணுற எழுதினமை.

"சிவாகமங்களால் உண்டாகும் ஞானம் அவித்தைதான்" என்று தமது முற்கரபத்திரிகையின் சஉ-ஆம் பக்கத்திற் கூறிய இச்சந்நியாசியார் "ஆகமங்களுக்கும் உக்தப்பிரகாரமாக அத்துவைதத்திற் றாற்பரியம்" இருக்கின்றதென்றும், "ஆகமங்களுக்கு அர்த்தந் தெரிந்து கொள்ளாமல் அத்துவைதத்தைத் தூஷிக்கவந்தமை கூடாது" என்றும் கூரு-ஆம் பக்கத்தில் முன்பின் விரோதமுறக் கூறி இடர்ப்பட்டார்.

(உக) தேவாதிதேவருடைய வாயிலே வேதங்கள்; நாவிலே சிவாகமங்கள்.

[illegible]

"வேத சிவாகமங்கட்குப் பேதம் காண்கிலம்" என்று நீலகண்டசிவாசாரியர் கூறியிருத்தல் கண்டு சந்நியாசியார் தமது தீய வாயினால் "வாய் போன்றது வேதம்" என்றும், "ஆசனத் துவாரம் போன்றது ஆகமம்" என்றும் இவேத்துரோக சிவாகம தூஷணஞ் செய்பவர், தம்மால் மிகுதியும் புகழப்படும் வியாசமுனிவர்

ஆஸ்யமத்யே ஸ்திதா வேதா தேவதேவஸ்ய ஸர்வஶ꞉ |
அக்ஷராணி ச த்விஜேந்த்ர ஜிஹ்வாயாஞ்ச ஶிவாகமா꞉ ||

"கேளீர் பூசுரர்காள்! எல்லா வேதங்களும் அந்தத் தேவாதிதேவருடைய முகநடுவில் (வாயில்) விளங்கி நிற்கின்றன; அக்ஷரமனைத்தும் அவர் பற்களினும், சிவாகமங்கள் (அவர்) நாவினும் இருந்தன" என்று சங்கரசங்கிதை யுத்தகாண்டத்து ௩௫-ஆம் அத்தியாயத்து கக, கஉ-ஆம சுலோகங்களிற் கூறினராதலின், வாயினும் சிறந்து நாவானது விசேஷித்ததாற் போல, சூத்திரரூபமாகிய சுருதியினும் பாஷ்யரூபமாகிய சிவாகமம் சிறப்புடைத்தென்று பெறப்படுகின்றது. சந்நியாசியார் சிவாகமத்தை ஆசனத்துவாரமென்றுரைத்த இழிந்த தூஷணவாக்கோ? அச்சிவாகமத்தை நாவில் உள்ளது என்று கூறிய வியாசமுனிவர் அருளிய உயர்ந்த பூஷணவாக்கோ? உற்கிருஷ்டம் என்பதைப பெரியோர் சொல்வாராக.

(௨௨) வைதிகத்திலும் வைதிகம் தாந்திரிகம் எனப் பிரிவு உளதாதல்.

ஆகமத்தைத் தாந்திரிகம் தாந்திரிகம் என இழிவுபடக் கூறும் இவர் மனுஸ்மிருதி ௨-ஆம் அத்தியாயத்து முதற் சுலோகத்தின் கீழ்

ஶ்ருதிப்ரமாணகோ தர்ம꞉ ஸ த்விவிதோ வைதிகஸ்தாந்த்ரிகஶ்ச |

"சுருதிப பிரமாணக தர்மமானது வைதிகம் தாந்திரிகம் என இருதிறப்படும்" என்று குல்லூகபட்டர் இயற்றிய முக்தாவளியைப பார்ப்பாராக.

தத்விஷ்ணோ꞉ பரமம் பதம் |

என்னும் கடவல்லி ௩, ௯-ஆம் மந்திரத்திற்குச் சிவாசாரியர் "விஷ்ணுவைக்காட்டிலும் மேலானபரமபதம் (சிவஸ்தானம்)" என்று கூறிய அர்த்தத்தைக் கண்டு, அவரை "விஷ்ணுத் துவேஷி" என்றும், "நரமாதமன்" என்றும் "நாராயணனைத் தூஷிக்கிறவன் சண்டாளனுக்கு செனித்தவன்" என்றும், முற்கரப் பிரதியின் ௯௨, ௯௩, ௯௪-ஆம் பக்கங்களில் வாய் கொள்ளாது தூஷித்த சந்நியாசியார், க௯-ஆம் பக்கத்திலே "உருத்திரர் விஷ்ணுவைக்காட்டினும் உற்கிருஷ்டர்" என்று தாமே எழுதிச் சிவாசாரியர்மீது பொழிந்த தூஷணங்களையெல்லாம் சிறிதும் ஆலோசனையின்றி முராறை எழுதித் தங்கலைமேலேற்றிக் கொண்டிருக்கின்றார். எப்போது அப்பாரத்தை இறக்குவாரோ அறிகிலேம்!

(௨௩) மாயாவாதத்தை மறைந்த பவுத்தம் என்று பாத்துமபுராணம கூறுகின்றமை.

"பிரச்சன்ன பவுத்தர்" என்று சிவாசாரியர் தூஷித்தார் என்று அவர் மீது தாவப்போகின்ற சந்நியாசியார் பூனைகாத்தில் அச்சிடப்பட்ட பாத்துமபுராணத்து கஅ௯ச-ஆம் பக்கத்து உ௯௯-ஆம் அத்தியாயத்து எ0-ஆஞ் சுலோகத்தில்

மாயாவாதமஸச்சாஸ்த்ரம் ப்ரச்சந்நம் பௌத்தமுச்யதே |

"மாயாவாதமான அசத்சாஸ்திரம்" என்றும், "அது பிரச்சன்ன (மறைந்த) பவுத்தம்" என்றும் கூறப்பட்டிருக்கக்கண்டு சந்நியாசியார் வியாசர் மீதேனும், பிரமகீதையைப் புதிதாக மாற்றிய பண்டைத்தூச சூதசங்கிதையிலே புகட்டி, பதினெட்டுத்தரம் அதனைத் திருப்பித் திருப்பிப் படித்து வேறு பற்பல சுலோகங்களை மாற்றித் திரித்துப்போந்த கேரள சங்கரரைப்போல, பாத்துமபுராணத்தினின்று சிவகீதையையும், வேதசாரசகச்சிரநாமத்தையும் மற்றைய சிவோற்கர்ஷ சுலோகங்களையும் தொலைத்துக்கெடுத்து வைத்த வைஷ்ணவர்மீதேனும் தூஷணை முற்காங்கொண்டு முதற்கண்ணே சாருவதற்கு மறந்துபோனதென்னைபோ? சூதசங்கிதைச் சூழ்ச்சியெல்லாம் சந்நியாசியார் அறிந்திலா போலும்!

(௨௪) சந்நியாசியார் சூதசங்கிதையை இனித் தீண்டமாட்டார்.

சூதசங்கிதை ஒன்றையே பெரிதென மதித்துச் சூத்திரர் முதலாயினோர்க்கு மிகு பிழைத் தமிழ் வாக்கியங்கொண்டு பிரசங்கஞ் செய்துகொண்டுவந்த சந்நியாசியார், முன்னரே சங்கரராற் சூதசங்கிதையானது சூதுசங்கிதையாக்கப்பட்டமையானும், பிற்காலத்திலே வித்தியாரணியரால் இவரது கருத்துப் பிரகாரம் ஆசனத்துவார அவைதிக சுலோகங்கள் ஆங்காங்கு ஊதகரிக்கப்பட்டு அமேத்திய துர்நாற்றமேறி அவைதிகமானமையானும், அச்சந்நியாசியார் அச்சூதசங்கிதையை இனி நாடவும் மாட்டார்; அதற்குக் கிட்டப் போகவும் மாட்டார்; அதனைத் தீண்டவும் மாட்டார்; சனங்களுக்கு அதனைப் பிரசங்கிக்கவும் மாட்டார். அங்ஙனஞ் செய்யத்துணியின் அவரது ஆசனத்துவார அமேத்திய துர்க்கந்தம், அவர் மூக்கைப்பற்றிச் சூதசங்கிதையை நணுகவிடாதன்றே.

(௨௫) சோமசம்புசிவாசாரியரை வித்தியாரணியர் பொருட்படுத்தினமை.

சிவாசாரியர்களை வாயில் வந்தவாறு தூஷிக்குஞ் சந்நியாசியானவர் துர்வாசசிவாசாரியர், பைங்கலசிவாசாரியர், உக்கிரஜ்யோதிசிவாசாரியர், ஸ்ரீகண்டசிவாசாரியர், விஷ்ணுகண்டசிவாசாரியர், சுபோதசிவாசாரியர்,

வித்தியாகண்டசிவாசாரியர், இராமகண்டசிவாசாரியர், ஞானசிவாசாரியர், ஞானசங்கரசிவாசாரியர், சோமசம்புசிவாசாரியர், பிரம்மசம்புசிவாசாரியர், திரிலோசனசிவாசாரியர், அகோரசிவாசாரியர், வருணசிவாசாரியர், பிரசாதசிவாசாரியர், இராமநாதசிவாசாரியர், ஈசானசிவாசாரியர் என்னும் பதினெண் சிவாசாரியர்களுள்ளே சோமசம்புசிவாசாரியர் வரைந்த பத்ததியினின்று இவர் குருவாகிய வித்தியாரணியர் சூதசங்கிதை சிவமான்மிய கண்டத்து ச-ஆம் அத்தியாயத்து ௯-ஆஞ் சுலோகத்தை விளக்குதற்குப் பிரமாணசுலோகங்கள் உதகரித்திருப்பாராக, இதனைச் சந்நியாசியார் கண்டிருந்தும் சிவாசாரியர்களையெல்லாம் யாதுபற்றி வாயில்வந்தவாறு வையத் தொடங்கினர்? தம்மை யார் திருப்பிக் கேட்கப்போகின்றார் என்ற அகங்காரமேலீட்டினாலன்றோ வழுவுற எழுதிப் பொறிப்பட்டார்.

(உ௬) சமுத்திரமதனகாலத்து மூதேவி.

ததஶ் ஶதஸஹஸ்ராம்ஶுர் மத்யமாநாத்து ஸாகராத் |
ப்ரஸந்நாத்மா ஸமுத்பந்நஸ் ஸோமஶ் ஶீதாம்ஶுருஜ்ஜ்வல꞉ |
ஶ்ரீரநந்தரமுத்பந்நா க்⁴ருதாத்பாண்டு³ரவாஸிநீ ||

"அதன் பின்னர் (சமுத்திர) மதனஞ் செய்யுங்கால் ஆயிரம் கிரணங்களையுடையனும், பிரசன்னாத்துமாவும், குளிர்ந்த கிரணங்களால் விளங்குகின்றவனுமாகிய சோமன் (சந்திரன்) சமுத்திரத்தினின்று தோற்றினான்; வெள்ளை வஸ்திரம் தரித்தவளாகிய இலட்சுமி அதன்பின்னர்க் கிருதத்தினின்று தோன்றினாள்" என்று மகாபாரதத்து ஆதிபருவத்து க௮-ஆம் அத்தியாயத்து ௩௪-ஆம் சுலோகத்தினும், மற்சபுராணத்து உ௫0-ஆம் அத்தியாயத்து உ, ௩-ஆஞ் சுலோகங்களினும் ஒரேபிரகாரம் அங்ஙனம் காணப்படுகின்றது. பாகவதத்தில் முதற்கண்ணே காமதேனு தோற்றியதென்றும், லிங்கபுராணத்தில் விஷம் தோற்றிய பின்னர் அமிர்தம் தோன்றுங்காலத்து மூதேவி தோன்றினாள் என்றும் கூறப்படுகின்றது. அங்ஙனம் கூறும் லிங்கபுராணத்திலேனும் மற்றோர் நூலிலேனும் ஆதிசைவர் முகத்திலே மூதேவியைப் போயிருக்குமாறு எவரும் ஆஞ்ஞாபித்தாருமல்லர்; அங்ஙனம் அவர் முகத்தில் மூதேவியிருக்க நியாயமுமில்லை; சிவபெருமானுக்குச்சமமாகவேனும் அவருக்கு அதிகராகவேனும் மந்திரோபநிடத சுருதிப்படி மற்றொரு கடவுளைப் பரப்பிரமமாகக் கொள்ளாத ஆதிசைவரிடத்தில் மூதேவி ஓர்போதும் செல்வாளல்லள். சிவபெருமானையும் மற்றோர் கடவுளையும் சமமென்று சுருதிக்கு மாறுபடத் தூஷித்துக் கூறுபவரிடத்திலே தடையின்றி மூதேவி செல்வாள் என்பது சாஸ்திரநிர்ணயம்.

(உஎ) சந்நியாசியாரது பொய்க் கூற்று.

இப்புஸ்தகத்து ருகூ-ஆம் இலக்கப் பிரிவிற் கண்டவாறு பக்தியோகம் (சகுணம்), சாங்கியயோகம் (நிர்க்குணம்), அத்தியாசிரமயோகம் (வைதிகபாசுபதயோகம்) என்னும் மூன்றனுள்ளே நடுக்கணுற்ற நிர்க்குணப்பிரமத்தை முடிந்த நிலையாகப் பிரமாவானவர் கூறி, அதனை மெய்ப்படுத்தப் பரமசிவனை ஆவிர்ப்பவிக்கச்செய்தமை எங்ஙனம் கேரளசங்கரரால் புதிதாகப் படைக்கப்பட்டுப் போயிற்றோ, அங்ஙனம் (பிரமகீதை ரு-ஆம் அத்தியாயத்திலே) விஷ்ணுவானவர் பெண்வடிவுகொண்டு சிவபெருமானை ஆலிங்கனஞ் செய்யவேண்டும் என்று தமது அபிப்பிராயத்தை வெளியிட்டாராகச் சந்நியாசியார் கஉஉ, கஉகூ-ஆம் பக்கங்களில் இசைத்துப் பாடியதும் பெரும் பொய்யாமென்று கடைப்பிடிக்க.

கந்தபுராண அசுரகாண்டத்து ககூ-ஆம் அத்தியாயத்திற் சாத்தனார் உற்பத்தி உணர்த்துமாறு எடுத்துக்கொண்ட மோகினி வரலாற்றைப் படித்துப் பார்த்து, முற்கரபத்திரிகையின் கஉகூ, கஉச, கஉரு-ஆம் பக்கங்களிற் சந்நியாசியார் பிரயோகித்த மோகினிக்கதை எதுகாறும் வாஸ்தவமென்பதை எவரும் இவைத்துணர்ந்து கொள்வாராக.

"தனக்கும் தன்பத்தர்கட்கும் அநிஷ்டத்தைத் தானே தேடிக்கொண்டாற் பரமசிவனைச் சர்வஞ்ஞர் என்று கொண்டாடுஞ் சுருதியானது கோபத்தை அடையும்" என்று கஙஅ-ஆம் பக்கத்திற் கூறிய சந்நியாசியார், பஸ்மாசுரன் கேட்டவாறு வரங் கொடுத்தால் அவன் தம்மைத் தொடுதற்கு வருவான் என்று பரமசிவன் முதற்கண்ணே அறியாது போனமையால், அவர் அசர்வஞ்ஞராவார் என்று சுருதி கோபிக்கும் என்பதை யாதுகாரணம்பற்றி மறந்துபோய் ஒவ்வாத கதையை ஈண்டு புகுத்தப் புகுந்தனரோ!

(உஅ) கவுதமாதி முனிவர் சாபமேற்றோர் யாவரென்பது.

சைவாகமமானது வைதிக காமிகாதி ஆகமம், அவைதிக காபாலாதி ஆகமம், பாஞ்சராத்திராகமமென்று வகுக்கப்படுவது போல, உபநிடதமும் சைவோபநிடதம், ஏகான்மவாதோபநிடதம், வைஷ்ணவோபநிடதம் என வகுக்கப்படும். உபநிடதங்களெல்லாம் பொதுவுற வேதாந்தம் எனப்படும். தற்காலத்து வேதாந்தம் எனப்படுவது ஏகவாதம் எனவும், ஏகான்மவாதம் எனவும், அபாவயோகம் எனவும், நிர்ப்பீஜயோகம் எனவும், நிராகாரயோகம் எனவும், சாங்கியயோகம் எனவும், கேவலாத்துவிதம் எனவும் படும் மாயாவாதமாம். இந்த வேதாந்த மாயாவாதத்தை ஆதாரமாய்க்

கொண்டுபிரமசூத்திரங்கள் பிறந்தன அன்று; பின், ஈசகேநாதி உபநிடத சைவ வேதாந்தத்தையே ஆதாரமாகக்கொண்டு பிறந்தன. இந்தச் சைவோபநிடதங்கள் கேரள சங்கரரால் மாற்றிப் புதுக்கப்பட்ட பிரமகீதை யொழிந்த மற்றைச் சிவபுராணங்களாற் பொருள் துணியப்படும். இவ்வுபநிடதங்களின் பொருளெல்லாம் ஸ்ரீஞானசம்பந்தர் முதலிய பரமாசாரியர்களால் திராவிட வேதங்களிற் செலுத்தப்பட்டிருக்கின்றன. இந்த உபயவேதாந்தங்களாகிய ஈசகேநாதி வடமொழி உபநிடத வேதாந்தங்களும் தேவார திருவாசகாதி திராவிடத் தென்மொழி வேதாந்தங்களுமாகிய இரண்டையும் ஆதிசைவரானார் ஒர்காலும் தூஷித்தாரில்லை; பின் அவராற் றூஷிக்கப்பட்டன சர்வசார முதலிய மாயாவாத வேதாந்தமும், இதற்கியையச் சங்கரரால் ஈசகேநாதி உபநிடதங்களுக்குத் திரித்து இயற்றப்பட்ட பாஷ்யமும், அவர் பிரமசூத்திரத்துக்கு இயற்றிய ஏகான்மவாத பாஷ்யமுமாம்; ஈசகேநாதி உபநிடதப் பொருள்களும் திராவிட வேதப்பொருள்களும் சிவாகமப்பொருள்களோடு மாறுபடாதிருக்குமென்னும் உண்மை ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் அருளிய பிரமசூத்திர சத்திய சைவபாஷ்யத்தினால் அறியப்படும். உள்ளதை உள்ளதாகக் கூறும் ஆதிசைவர் சந்நியாசியார் கருத்துப்பிரகாரம் வேத நிந்தகருமாகார்! வேதபாகியருமாகார்! பிரமகீதா சுலோகங்களையும், முக்கிய சுருதிப்பொருள்களையும், பிரமசூத்திரப்பொருள்களையும் ஒரு புரட்டாய்ப் புரட்டிச் சிவபரதத்துவத்தை மாற்றித்தமது ஆன்மபசுப்பிரமத்துக்கேற்றித் தூஷிக்குஞ் சந்நியாசியாரும், இச்சந்நியாசியாருக்கு முற்பட்டோரும், பிற்பட்டோருமாகிய எல்லா வைதிகருமே கவுதமர் ததீசிமுதலாயினோர் சாபத்துக்கு இலக்காய் நின்றவராம் என்க.

(உகூ) பிராமணன் சூத்திரனிடத்து உபதேசம் பெற்றமை.

"சூத்திரருக்குப பூருவசென்ம சம்ஸ்காரத்தினால் ஞானமுண்டாயிற்றேயானால், அந்தச் சூத்திரனுக்கு அணுகச் சூத்திரனாவது பிராமணனாவது ஞானோபதேசம் பெறும்பொருட்டுப் போகக்கூடாது" என்று வற்புறுத்திக் கூறுஞ் சந்நியாசியார் மகாபாரதத்து வனபருவத்து உ0சு-ஆம் அத்தியாயத்திலே கவுசிகர் என்னும் ஓர் பிராமணர் பதிவிரதாசிரோமணியாகிய ஓர் பார்ப்பினியாற் பிரேரிக்கப்பட்டு மிதிலாபுரியிற் புலால் விற்கும் வேடனிடத்திலே உபதேசம் பெறும்பொருட்டுப் போனமையையும் அவர் உபதேசம் பெற்றமையையும் சந்நியாசியார் கவனித்துப் பார்க்க மறந்துபோனதென்னையோ? இவர் இங்ஙனம் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாது எழுதுவதில் மிகத் துணிந்தவரன்றோ!!

(௯0) வேதங்களுக்கு இதிகாசபுராணங்களினுஞ் சிறந்து மகோபப்பிருங்கணங்களாயுள்ளன சிவாகமங்கள்.

இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்|

“இதிகாசபுராணவாயிலாக வேதத்தை உபப்பிருங்கணஞ் செய்க” என்று சிவமான்மியகண்டத்து க-ஆம் அத்தியாயத்து ௯ரு-ஆஞ் சுலோகத்திற் கூறப்பட்டிருக்க, வைதிகத்தையே பெரிதெனை விரித்துக் கூறும் இச்சூதசங்கிதையினும் மேற்பட்டு, வைதிக பாசுபத விரதயோக ஞானங்களை விரித்துக் கூறும் வாயுசங்கிதையின் பூருவபாகத்து உஅ-ஆம் அத்தியாயத்திலே

பரோ யோகாவதிர்தர்மோ யஃ ஶ்ருதிஶிரோ கத: |
ஸஹாயகோபரோ தர்ம: பரதர்மஸ்ய ஸாதநம்|
தர்மஶாஸ்த்ராதிபிஸ்ஸம்யக் ஸாங்கோ வேதோபப்ரும்ஹித: |
தத்ராப்யயம் பரோ தர்ம: ஶ்ரேஷ்டோநுஷ்டாநாத்மக:
இதிஹாஸ புராணாப்யாம் கதஞ்சிதுபப்ரும்ஹித:|
ஶைவாகமேஷு து ஸ புநஸ்ஸாங்கோபாங்கவிஸ்தர: |
ஸம்ஸ்காராதிகாரஞ்ச ஸம்யகேவோபப்ரும்ஹித:|

“யோகத்தை முடிவாகக்கொண்ட பரதருமம் உபநிடதங்களில் அமைந்தது” என்றும், “பரதருமத்துக்குச் சாதனமாயுள்ளது இந்த அபரதருமம் என்றும், இது தருமசாஸ்திர முதலியவைகளால் நன்கு சாங்கமாக உபப்பிருங்கணஞ் செய்யப்படும் என்றும், முதற்கண் உள்ளதாய் முக்கியமாய் அநுஷ்டிக்கற்பாலதாம் எனக் கூறப்பட்ட (யோகபரியந்தமுள்ள) பரதருமம் இதிகாசபுராணங்களினுற் பிரயாசையோடு (அஃதாவது சிற்சிலவற்றுக்கு) உபப்பிருங்கணஞ் செய்யபபடும் என்றும், அது பின்னர்ச் சிவாகமங்களினுற் சாங்கோபாங்க விஸ்தாரமாகச் சம்ஸ்காராதிகாரத்தோடு நன்கு உபப்பிருங்கணஞ் செய்யப்படும்” என்றும்,

வாயுசங்கிதை உத்தரபாகத்துப் பதினமூன்றும் அத்தியாயத்திலே

ஸம்ஸ்காரம் பரம் புண்யம் ஶிவேந பரிகீர்த்திதம்|
ஸம்ஸ்கார: கத்யதே தேந ஷடத்வ பரிஶோதநம்|

“சிவபெருமானுலே சம்ஸ்காரமானது மேலாகிய புண்ணியம் என்று கூறப்பட்டது; அவராற் சம்ஸ்காரமானது ஷடத்துவசுத்தி எனக் கூறப்படுகின்றது” என்றும் காணப்படலான், யோகபரியந்தமே சுருதி சிரசுகளிற் கூறப்பட்டிருக்கின்றன எனவும், அந்த வேத சிரசுகளாகிய உபநிடதங்கள் இதிகாசபுராணங்களாற் சிற்சிலவாய் உபப்பிருங்கணஞ் செய்யப்படும் எனவும்,

அது பின்னர்ச் சிவாகமங்களினுற் சாங்கோபாங்கமாய் ஷடத்துவசுத்தியாகிய சம்ஸ்காராதிகாரத்தோடு நன்கு உபப்பிருங்கணஞ் செய்யப்படும் எனவும் பெறப்படலான், உபநிடதங்கள் சூத்திரரூபமேயாக, இதிகாசபுராணங்கள் உபப்பிருங்கணங்களாகவும், சைவாகமங்கள் மகோபப்பிருங்கணங்களாகவும் கொள்ளப்பட்டு, இதிகாசபுராணங்களிற் சிறந்தன சைவாகமங்கள் என்பது வெளிப்படையாகப் புலப்பட்டவிடத்தும், புராணங்களிற் குறைந்தது சிவாகமம் என்று சந்நியாசியார் இனித்தம்வாயைத் திறப்பார்தாமோ!! இவர் பிரமாணம் ஒன்றும் காட்டாது எழுதுவதெல்லாம் தமது கிருகத்திலே தமக்குக் கீழ்ப்பட்ட வேலைக்காரரோடு பேசுவது போலவாம். இவர் முன் கண்டனம் ஒன்றும் எழுதிப் பழக்கமுடையராய்த் தோற்றவில்லை. அங்ஙனம் எழுதியிருப்பாரேற் பிரமாணங்கள் விடுத்தன்றோ கண்டனஞ் செய்யத்துணிதல்வேண்டும். இவரது வாக்குச் சுருதியா? புராணமா? இதிகாசமா? ஆகமமா? இவரது தூஷணவாக்குகளை யார் பொருட்படுத்துவார் !!

(௬௧) சந்நியாசியார்க்கு நபும்சக புல்லிங்க பேதங்கள் தெரியாமை.

சத்தியோஜாதரை நிவிர்த்திகலை என்றும், வாமதேவரைப் பிரதிஷ்டாகலை என்றும், அகோரரை வித்தியாகலை என்றும், தற்புருஷரைச் சாந்திகலை என்றும், ஈசானரைச் சாந்தியதீதகலை என்றும் சந்நியாசியார் முற்கர பத்திரிகையின் கஅ-ஆம் பக்கத்தில் எழுதினமை சென்னை ராஜதானிக்கதிபதியாகிய கவர்ணரைச் சென்னை ராஜதானி என்றும், பம்பாய் ராஜதானிக் கவர்ணரைப் பம்பாய் ராஜதானி என்றும், பஞ்சாப் தேசத்துக் கவர்ணரைப் பஞ்சாப் தேசம் என்றும், வடமேற்கு மாகாணத்துக் கவர்ணரை வடமேற்கு மாகாணம் என்றும், பங்காள ராஜதானிக் கவர்ணரைப் பங்காள ராஜதானி என்றும் ஓர் முழுமகன் வரைந்தமையை நிகர்க்கின்றது. நிகர்ப்பவே, இவர்க்கு ஞானசாஸ்திரப் பயிற்சி சிறிதும் இல்லையென்றாயிற்று!! அஃதன்றிப் புல்லிங்க நபுஞ்சகலிங்கங்களுடைய பேதங்கள்தாலும் அறிந்தாரில்லை. இவரது விவேகமே விவேகம்! இங்ஙனம் புல்லிங்க நபுஞ்சகலிங்க வேற்றுமை அறியாது கசு-ஆம் பக்கத்தினும் சத்தியோஜாதர் பச்சிமமுகம் என்றும், வாமதேவர் உத்தரமுகம் என்றும், அகோரர் தக்ஷிணமுகம் என்றும், தற்புருஷன் பிராங்முகம் என்றும், ஈசானர் ஊர்த்துவமுகமென்றும் வழுப்பட வரைந்தார்.

(௬௨) கவுதமர் சாபம்.

[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

"முன்னோர்காற் கிரகஸ்தாச்சிரமிகளாகிய முனிவர் ஆயிரக்கணக்காயினோர் திவ்யமாகிய தாருவனத்திலே சிவாராதனையின்பொருட்டுத் தவஞ் செய்து வந்தார்; காலபேதத்தினால் ஓர்காலத்து பெரிதாயதும், கடத்தற்கரியதும், அதிக உக்கிரமுடையதும், உயிர்களை வதைக்கற்பாலதுமாய ஓர் துர்ப்பிக்ஷம் உண்டாயிற்று; அப்போது தபசுக்கு நிதியாயுள்ள கவுதமரை அம்முனிவரெல்லாம் அடைந்து பசியினால் வருந்திப் பிராணாதாரமாகிய ஆகாரம் வேண்டுமென அவரை யாசித்தார்கள்; அம்முனிவர் அவர்கட்கு மிகுதியாகப் பாகஞ் செய்யப்பெற்ற அன்னமளித்தார்;" பின்னர் அச்சம் யாதுமின்றி அவரது ஆச்சிரமத்தில் இருந்து பன்னிரு வருஷம் உண்டு வருவாராக, துர்ப்பிக்ஷம் நீங்கிற்று; மழை பெய்து நாடு செழித்தமையால், அவர்கள் அவ்வாச்சிரமம் விடுத்துத் தம்முறைவிடம் போதற்கு முயன்று முனிவரிடம் வந்து அநுமதி கேட்க, அவர் பின்னும் சிலகாலம் தமது ஆச்சிரமத்திருந்து சுகமே உண்டு வாழுமாறு கூறி, அவர்களைப் போகாவண்ணம் தடுத்தார்; அப்போது அம்முனிவர் மாயா ரூபமாகிய கரிய பசு ஒன்றை (மந்திரத்தினால்) ஆக்கி, கவுதமர் சமீபத்தில் நிற்குமாறு செய்ய, அம்முனிவர் அப்பசுவைக் கொட்டத்திற் கொணர்ந்து கட்டித் தொட்டமாத்திரத்தில் அது வீழ்ந்திறந்தது; இவ்விஷயத்தை முனிவர் அறியாது கோஹத்தி நிகழ்ந்துபோயிற்றே என்று சோகித்தார்;

[illegible]
[illegible]

"(அம்முனிவர்கள் கவுதமரை நோக்கி) விப்பிரசிரேஷ்டரே! இது பசுக்கொலை; நுமது சரீரம் நீங்கும் வரையும் நுமது அன்னம் புசிக்கற்பாலதன்று; நாங்கள் (இவ்விடம்விட்டுப்) போகின்றோம்" என்று கூறிப் போய்த் தமது தாருவனத்தை அடைந்தார்கள் இவர்கள் மாயத்தினால் நேர்ந்த கோவதையைக் கவுதமமுனிவர் அறிந்து அவர்களைச் சபித்தார்;

[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible] நாராயணம் [illegible] |
ஸ்தவம் ஸம்ஸ்தூயமாநௌ [illegible] |
அசோதயந் மோஹஶாஸ்த்ராணி [illegible] |
காபாலம் நாகுலம் வாமம் பைரவம் பூர்வபஶ்சிமம் |
பாஞ்சராத்ரம் பாஶுபதம் ததாந்யாநி ஸஹஸ்ரஶ: |

"மகாபாதகிகளை நிகர்த்து வேதபாகியர்களாய் ஆவார்கள் என, அவர்கள் அநேகமாய்ச் சாபத்தினால் மீட்டும் மீட்டும் பிறந்து, (மாயாதத்துவ) உருத்திரரையும் அவ்வியயராகிய நாராயணனையும் ஸ்தோத்திரஞ் செய்தார்கள்; அப்போது மோகசாஸ்திரங்களைச் செய்வோம் என்று மாதவனாகிய முராரியினால் உருத்திரர் வேண்டப்பட்டும், கேசவர் உருத்திரரால் ஏற்றப்பட்டும் மோகசாஸ்திரங்களைச் செய்தார்கள்; காபாலம், நாகுளம், வாமம், பைரவம், பாஞ்சராத்திரம், பாசுபதமுதலிய மற்றைய ஆயிரக்கணக்காய (மோக சாஸ்திரங்களை) உண்டாக்கினார்கள்" என்று கூர்மபுராண பூருவபாகத்து ௧௬-ஆம் அத்தியாயத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

மேலே கூர்மபுராணத்தில் முனிவர் என்று கூறப்பட்டவர் யாரெனின்,

ப்ராஹ்மணா: [illegible] |
கௌதமஸ்ய [illegible] |

பிராமணர்களே கவுதமர் சாபத்தை அடைந்தார் என்று [illegible]டத்து ௯௨-ஆம் அத்தியாயத்திற் கூறப்படுகின்றது.

"கவுதமமுனிவர் நதிக்குச் சென்று மாத்தியாந்நிகாநுஷ்டானம் பண்ணிவரும்போது பசுவை அதட்டினார், அதட்டியபோது அது கீழே விழுந்து மடிந்தது" என்று சந்நியாசியார் விடுத்த கதாப் பிரசங்கம் கூர்மபுராணத்திலேனும் சூதசங்கிதையிலேனும் கூறப்படவில்லை.

மேலே கூர்மபுராணத்திற் கூறியவாறே சூதசங்கிதையினும

பாஞ்சராத்ரே ச காபாலே ததா காலாமுகேऽபி ச |
ஶாக்தே ச தீக்ஷிதா யூயம் பவத ப்ராஹ்மணாதமா: |
பௌத்தே சார்ஹந்தகே சைவ ததா பாஶுபதேऽபி ச |
ஸாம்பவே தீக்ஷிதா யூயம் பவத ப்ராஹ்மணாதமா: |

"பாஞ்சராத்திரம், காபாலம், காளாமுகம், சாக்தம் என்பவற்றில் தீக்ஷிக்கப்பட்டு நீங்கள் பிராமண அதமர்களாவீர்களாக; பவுத்தம், ஆருகதம், பாசுபதம், சாம்பவம் என்பவற்றில் தீக்ஷிக்கப்பட்ட நீங்கள் பிராமண அத

மர்களாகுக" என்று கூறப்பட்டமையால், வேதபாகிய பிராமணர்களுக்காக அவைதிகாகமங்கள் உருத்திரராலும் விஷ்ணுவாலும் ஆக்கப்பட்டன என அறியப்படுகின்றது.

கூர்மபுராண சூதசங்கிதா சுலோகங்களுட் காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களின் பெயர் ஒன்றேனும் காணப்படவில்லை. சபிக்கப்பட்டவர் ஆதிசைவப்பிராமணர் என்றும் காணப்படவில்லை. அங்ஙனமாகவும் சந்நியாசியார் "கட்டிப்பேச ஆளில்லாவிடிற் றம்பி சண்டப்பிரசண்டன்" என்றவாறு, கவுதமரால் ஆதிசைவர்கள் சபிக்கப்பட்டார்கள் என்றும், காமிகாதி ஆகமங்கள் வேதபாகியர்களாகிய அவ்வாதிசைவர்கள் பொருட்டுப் படைக்கப்பட்டன என்றும் சந்நியாசியார் இப்பூமண்டல மெங்கு மில்லாத பொய்யைக் கற்பித்து வரைகின்றார். "யாதுக்காக இந்தப் புராணங்களில் இல்லாத பொய்களைப் பிதற்றி வரைகின்றீர்" என்று அவரைக் கேட்பார் ஒருவரும் இல்லைப் போலும!

(௧௩) சிவாகமம் வேதத்திற் பிரதிபாதிக்கப்பட்டமை.

கூர்மபுராணத்திலும் சூதசங்கிதையிலும் கவுதமர் சாபம் கூறப்பட்டவிடத்துக் காணப்படும் பாசுபதம் அவைதிக பாசுபதமன்றி வைதிக பாசுபதமன்றும். பாசுபதம் இருதிறப்படும் என்பதை முன்னர்க் காட்டுதும். எப்போது வேதங்களுளவோ, அப்போது இதிகாசபுராணங்கள் உண்டு; எப்போது இதிகாசபுராணங்கள் உண்டோ, அப்போது சிவாகமங்கள் உண்டு; வேதத்திலும், இலிங்கபுராண சிவபுராண ஸ்காந்தபுராண முதலியவைகளிலும், சிவாகமங்களும சிவாகம விஷயங்களும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றமையின்.

யசுர்வேதத்தைச் சார்ந்த தைத்திரிய ஆரணியகத்துப் பிரதம பிரசினத்து

ஒெநநமஹொவஷிநவஹி |

என்றற்றொடக்கத்த மந்திரத்திற் காணப்படும் நவபதி (நவபதீ) என்னும் சொல்லுக்கு "மீமாஞ்சை, நியாயம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், பாசுபதம், ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம் என்னும் ஒன்பது பிரிவுகளாக வாக்தேவி பரமான்மாவினின்று வெளிவந்தாள்" என்று வித்தியாரணிய பாஷ்யத்தில் வியாக்கியானஞ் செய்யப்பட்ட பாசுபதம் சைவாகமத்தின்பாலதாம் என்று பெறப்படலானும்,

ஸிவமொெவாநஷோநாடு |

"சைவாகமநெறியினர்க்குக் (கர்த்தா) சிவபெருமான்" என்று அன்னபூர்ணி யுபநிடதத்திற் காணப்படலாலும், சிவாகமம் சுருதியுக்தமாம் என யாவரும் உணர்ந்து கொள்வாராக. ஆதலின், சந்நியாசியார் கலிகாலத்துப் பின்னேயிலே காமிகாதி ஆகமங்கள் உண்டாயின என்னும் கூற்று வெற்றுரையாய் முற்றியது. மூலபுருடராகிய சங்கரர் சுவேதாசுவதரோபநிடதத்துக்குப் பாஷ்யம் எழுதுங்காற் சந்தான சர்வோத்தம் என்னும் இருபத்து நான்காவது ஆகமத்துக்கு உபாகமமாய்ப் போந்த சிவதருமோத்தரத்தினின்று பிரமாணம் எடுத்துதகரித்திருக்கின்றார். சந்நியாசியார் கருத்துப்பிரகாரம் சிவாகமம் அவைதிகமாய் அப்பிராமாண்ணியமாய்ப் போமாயின், அம்மூல புருடர் அச்சிவதருமோத்தராகம சுலோகத்தை யாதுகாரணம்பற்றி உதகரித்துச் சுவேதாசுவதரோபநிடதத்தையும் அவைதிகமாக்கித் தாமும் அவைதிகராய்ப் போயினர்? இச்சந்நியாசியார் அம் மூலபுருஷர் காலத்தில் உதித்திருப்பாராயின், அவ்வாகமசுலோகங்களைப் பிரமாணமாக உதகரிக்கவொட்டாது அம் மூலபுருடர்காதிலே உபதேசித்து இவர் தடுத்திருப்பார். அங்ஙனஞ் செய்யாதுவிட்டமை இவர்க்கு இப்போது துரதிஷ்டமாய் நேர்ந்தது.

(௩ச) கவுதமாச்சிரமத்துக்குப் போனவர் ஆதிசைவரல்லர்.

"சாண் கல்லு முழச்சோறு" என்று சந்நியாசியார் கூறியவாறு, சிவாலயங்களையே ஆதாரமாய்ப் பற்றியிருக்கின்ற ஆதிசைவப்பிராமணர்களுக்கு ஓர்காலும் துர்ப்பிக்ஷம் நேர்ந்திராது. சிவபெருமானுக்கு மீளா அடிமையாகி "முப்பொழுதுந் திருமேனி தீண்டுபவர்" களாகிய ஆதிசைவர்களைச் சிவபெருமான் ஓர்போதும் கைவிடுவாரல்லர். இவர்கள் எத்துணை அபராதங்கள் செய்யினும் அவற்றைச் சிவபெருமான் க்ஷமித்தார், க்ஷமிக்கின்றார், க்ஷமிப்பார். ஓர் இராசபுத்திரன் எத்தனை குற்றஞ் செயினும், நாம் அவனுக்கு அஞ்சவேண்டி நேர்கின்றது. ஆகலின், காமிகமுதலிய வைதிகாகமப் பிரகாரம் அங்கங்கே சிவலிங்கப்பெருமானை அர்ச்சித்துவரும் ஆதிசைவர்கள் கவுதமர் கொடுக்கும் அன்னத்துக்கு ஆசைப்பட்டு ஓர்போதும் அவர்கள் வனத்துக்குப் போந்திலர்; அவ்வாற் சபிக்கப்பட்டவருமாகார்.

ந யஸ்ய ப்ரதிமா ஸ்தி ।

"சிவபெருமானுக்கு ஒப்பாயினரும் மேலாயினரும் காணப்படவில்லை" என்று மந்திரோபநிடதத்திற் கூறப்பட்டதற்கு மாறுபட "அரியுஞ் சிவனுமொன்று அறியாதார் வாயில் மண்" என்று பிதற்றி

[illegible] படுவதன்
[illegible] ப்படுவதில்லை.

[illegible]

[illegible]

[illegible] அநாரம் [illegible] சிலர் [illegible] நமஸ்காரம் [illegible] கின்றனர்.

(௩௫) முண்டகோபநிடதச் சுருதிப்பொருள்.

முண்டகோபநிடதத்து முதன் மந்திரத்துக்குப் பொருளுரைக்கப் போந்து" "பிரமம் எதனுல் அறியப்படுகின்றதோ, அது பரவித்தை" என்று கூறி, "கர்மகாண்டம் அபரம் என்றும், ஞானகாண்டம் பரம் என்றும் சிலர் பொருளுரைக்க முந்துவர்" என்று சிவாசாரியர் உரைத்தமை தவறு என்றும், ஒருவரும் இதுவரைக்கும் அர்த்தஞ் சொல்லவில்லை என்றும் கூறிய சந்நியாசியார் அப்பயதீக்ஷிதர் சிவார்க்கமணிதீபிகையின் ௩-ஆம் அத்தியாயத்து ௩-ஆம் பாதத்து ௩-ஆஞ் சூத்திரத்தின் கீழும், பஸ்மவாதாவளியினும்

உபக்ரமே த்³வே வித்³யே வேதி³தவ்யே இதி ஸாமாந்யதோ விப⁴ஜ்ய விஶேஷதோ விப⁴ஜதி பரா சைவாபரா ச । தத்ராபரா ருக்³வேதோ³ யஜுர்வேத³: ஸாமவேதோ³(அ)த²ர்வவேத³: ஶிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம் ச²ந்தோ³ ஜ்யோதிஷமிதீதிஹாஸபுராணந்யாயமீமாம்ஸாத⁴ர்மஶாஸ்த்ராணீதி । அத² பரா யயா தத³க்ஷரமதி⁴க³ம்யத இதி வித்³யாஸ்தா²நேஷு வித்³யாஸ்தா²நேநைவ வ்யவஜஹார ஸூத்ரகார: ।

கூறப்பட்டவாறு, அபரம் என்றது இருக்காதி வேத முதலியவற்றையும், பரம் என்றது வித்தியாஸ்தானங்களையும் (உபநிடதங்களையும்) உணர்த்தியவாமென உணர்ந்து, தாம் எல்லாம் பார்த்தவர் போல மதித்து ஒருவரும் அங்ஙனம் கூறவில்லை என்று எழுதினமை தவறென்றும் அறிந்துகொள்வாராக.

(௩௬) சுருதிகளைப் பிராகிருதபாஷாமத்தியில் எழுதப்படாதென்ற சந்நியாசியார் பின் அங்ஙனம் எழுதி வழுவுற்றமை.

வேதங்களைப் பிராகிருதபாஷாப் பிரபந்த மத்தியிலே எழுதுவது அநுசிதம் என்று தமது முற்கரபத்திரிகையின் ௫௫-ஆம் பக்கத்திற் கூறிய சந்நியாசியார், ௧௦௭-ஆம் பக்கத்திலே

யதா²ஶ்வதர: ।

என்னும் சுவேதாசுவதரசுருதியைப் பிராகிருத பாஷையின் மத்தியில் யாது பற்றி எழுதினரோ? அங்ஙனம் எழுதிய இவர் தமது வாக்குப் பிரகாரம் சுருதியை அநுசிதமாக்கி, தாமும் அநுசிதராமாறு முன்பின் மலைவுறத் தீட்டிவிட்டார்.

பிராகிருதபாஷைக்கு மத்தியிலே சுருதியை எழுதக்கூடாதென்றும், பிராகிருத தமிழ்ப்பாஷையை லௌகிகத்துக்கன்றி மற்றொன்றுக்கும் உபயோகப்படுத்தக் கூடாதென்றும் தூஷிக்கின்ற இவர் சமஸ்கிருதபாஷை மிருதியும் வழங்கும ஆரியாவர்த்த பூமியில் வசிக்காது, யாதுகாரணம்பற்றிப் பிராகிருதபாஷாப் பூமியில் வந்து பிராகிருதபாஷை பேசுபவரோடு கலந்து கேட்டு இவர் கர்ணகடோரம் எய்தவேண்டும்? இத்தென்னாட்டுள்ளும் சுத்தத் தமிழ் பேசுகின்ற நகரப்பிரபுக்கள் வசிக்கும் தேவிகோட்டை நாடி யாதுக்காகப் போயிருக்கின்றார்? லௌகிகத்துக்கும் பிராகிருதபாஷை உபயோகிக்கலாகாது என்று கூறி இவர் சமஸ்கிருதபாஷையில் நகரவணிகர்களோடு சம்பாஷிக்கில், அவர்கள் இவர் பாஷையின் அர்த்தத்தை எங்ஙனமறிந்து இவர்க்குப் பொருள் கொடுக்கவல்லுநராவர்! சந்நியாசியார் சமயோசிதமாய்க் காலம் போக்குவதில் மகாசமர்த்தர் போலும்!! பொருள் யாசகமாகப் போயிருத்தலாற்றான் லௌகிகத்துக்குத் தமிழை உபயோகிக்கவேண்டும என்று இப்போதுசிறிது இரங்கினார்போலும்!! இவரது உபாயம் மிகவும் நன்று! நன்று!!

(௩௭) சந்நியாசியார் வழுவுறப் பொருள் செய்யப்பட்ட சுருதியைத் திருந்தாதுவிட்டமை.

யதா தமஸ்தந் ந திவா ந ராத்ரிர் ந ஸந்நசாஸச்சிவ ஏவ கேவல: ।

என்னும் சுருதிக்குச் சிவாசாரியர் "பகல் இராத்திரி இல்லாதவர் எவரோ, அவர் சிவம்" என்று எழுதிய வழுவைச் சந்நியாசியார் அங்கீகரித்துத் தாமும் வழுவுடைப்பட்டவராயினர். "எப்போது இருள் உளதாய்ப் பகலுமின்றி இரவுமின்றிச் சத்துமின்றி அசத்துமின்றி இருந்ததோ, அப்போது சிவன் ஒருவரே இருந்தார்" என்பதே அச்சுருதிப் பொருளாம்.

(௩௮) ஆதிசைவராவார் கானீனர் குண்டகர் கோளகரல்லர்.

பர்த்தா மரித்த பிற்பாடு, கோளர் ஜனித்தமையினாலன்றோ,

மாத்ருபநீத: ।

"தாயாரால் உபநயனஞ் செய்யப்பட்டவர்" என்று சிவரகசியத்திலும், தேவீதாரணா "உமது தாய் கைம்மை" என்று சங்கரவிஜயத்து அ-ஆம் அத்தியாயத்திலும் கூறப்பட்டிருக்கின்றது. சந்நியாசியார் கூறியவாறு, கோளகர் ஆதிசைவராய்ப் போவாராயின், அக்கோளர் யாதுபற்றி ஆதிசைவராய்ப் போந்திலர்? இந்நாளையிலேனும் பத்து வருஷங்களுக்கு முன்னேனும் விவாகமில்லாத ரஜஸ்வலையாகிய எந்த விப்பிரகன்னியிடத்தில் ஜார

புருஷனுக்கு எவன் ஜனித்தது ஆதிசைவனாயினன் என்றும், அந்தக் கோளகன், எந்தக் குண்டகன் ஆதிசைவனாயினன் என்றும் அவர் பெயர் முதலியவற்றோடு எழுதி உறுதிப்படுத்துவாராயினன்றோ, இவர் எழுதியவை மெய்யென அங்கீகரிக்கப்படும். அங்ஙனம் பிற்காலத்திலே ஆதிசைவரானவர்களுள் ஒருவரையேனும் குறிப்பிட்டுக் கூறச் சந்நியாசியார் வன்மையுடையரா? சிருஷ்டிகாலத்தில் இருந்த பார்ப்பினிகள் மாத்திரம் பதிவிரதத்தன்மை நீங்கிச் சோரநாயகரோடு சேர்ந்து ஆதிசைவரைத் தோற்றுவித்திருப்பாராக, இக்காலத்துள்ள பார்ப்பினிகள் மாத்திரம் பதிவிரதா தர்மம் அணுத்துணையேனும் நீங்காது இருக்கின்றார்களா? ஆதிசைவரைத் தூஷிக்கப்போய்ச் சந்நியாசியார் தம் குலத்தினிகளையே தூஷித்தவராய் முடிந்தார். இவர் தேளுக்குப் பயந்து பாம்பின் வாய்ப்பட்டவராயினார். அந்தோ! சிற்சில வருஷங்களுக்கு முன்னே நடுக்காவேரி. கு. ஸ்ரீநிவாசதீக்ஷிதர் என்பார் சிற்சில சாதிகள் கோயிலினுள்ளே பிரவேசிக்கலாம் என்று வைத்தியநாததீக்ஷிதம் என்னும் ஸ்மிருதிமுக்தாபலத்திலே புதுச் சுலோகம் படைத்து வைதிகத்துக்கும் லௌகிகத்துக்கும் மாறுபாடு புகுத்தி அச்சிட்டுவிட்டாராம். வைத்தியநாததீக்ஷிதரோ மற்றியாரோ எட்டுற்கிடந்த அந்த ஸ்மிருதிமுக்தாபலத்துள்ளே ஆதிசைவர்களைத் தூஷித்துச் சுலோகம் படைத்துப் புகுத்திவைத்தார். இந்தக் கற்பனைச் சுலோகங்கள் வேதோபப்பிருங்கணபுராணாகமங்களுக்கு முன்னர்ச் சபையிலே நிலைநிறுத்தக் காட்ட வன்மையுடையனவா?

(௩௧) ஒரு வஸ்துவிற் சகுணம் நிர்க்குணம் என்னும் இரண்டும் உளவாம் எனல்.

சுவேதாசுவதரத்து ௬-ஆம் அத்தியாயத்து ௨, ௧௧-ஆம் மந்திரங்களிற் "குணீ" (குணீ) என்றும், "குணேசர்" (குணேச:) என்றும், ௧௧-ஆம் மந்திரத்தில் "நிர்க்குணர்" (நிர்குண:) என்றும் சிவபெருமான் குணமுடையராகவும் நிர்க்குணராகவும் கூறப்பட, சங்கரசங்கிதையும் தக்ஷகாண்டத்து ௧-ஆம் அத்தியாயத்து ௨௨-ஆம் சுலோகத்தில்,

அபி ஸகுணஸம்பன்னோ நிர்குணோ ஹி மஹேச்வர:|

"சிவபெருமான் (ஹேயகுணமில்லாமையின்) நிர்க்குணராயினும், (சச்சிதாநந்தாதி) சகல (மங்கள) குணசம்பன்னர்" என்று கூறப்பட்டிருத்தலின், நிர்க்குணம் சகுணம் என்னும் எதிர்மறை உடன்பாட்டுக் குணங்கள் எங்ஙனம் ஓர் வஸ்துவில் நிகழுமென ஆக்ஷேபித்தவர் தவறுண்டனர்; (சத்துவ ரஜஸ் தமசு என்னும் மூன்று) ஹேயகுணங்கள் இல்லாமையையே நிர்க்குணம் என்பது

[illegible]

என்னும் [illegible] வாக்கியத்தில் [illegible], "குணீ" ([illegible]) "குணேசர்" ([illegible]) என்பன "அபக்ஷபாப்மத்துவாதி (சர்வஞ்ஞதாதி) குணங்களையுடைய [illegible] என்றும், நிர்க்குணம் என்பது

[illegible]

"ஏதத்துவாதி குணமிலாதவர்" என்றும் [illegible] பொருள் செய்தலின்மையால் [illegible] குணங்களைத் [illegible] மை நிர்க்குண [illegible] மிக்கதே [illegible] யத்தும தோஷம யாதுமின்மையுமே.

[illegible]

"(சர்வஞ்ஞதாதி குணங்களின் வேறுபாடாக) [illegible] பிரம மென்றது [illegible] முழும குணமுமாயுள்ளார்" என [illegible] வார். மேலேகண்ட [illegible] பொருள்களை ஆராய்த்திலே காலத்தைப்போக்கி [illegible] ராயின், கட்டட [illegible] தமது [illegible] மறுக்கலை யுடைத்து இவர் வந்து வேண்டும்! [illegible] தோஷங்களினும் [illegible] வாமையுந் [illegible] ததங்கள் [illegible] அறிந்திலர்.

(௪௦) வைதிகத்திற் கூறப்பட்ட [illegible] கலைகள் வைதிகசைவத்திற் கூறப்பட்ட [illegible] தத்துவங்களுட்பட்டன.

பிரசிரோபநிஷத்து ௪ ஆம் பிரச்னத்து ௮ ஆம மந்திரத்திலே ஞானேந்திரியம் ஐந்தும், கர்மேந்திரியம ஐந்தும், [illegible] ஐந்தும், பூதாதி ஐந்தும், அந்தக்கரணம் நான்குமாகிய இருபத்துநான்கு ஆன்மதத்துவமும், மந்திரோபநிஷத்து ௧-ஆம அத்தியாயத்து ௭ ஆம மந்திரத்திலே வித்தியாதத்துவம் ஏழும, பிருகசாபாலோபநிஷத்து [illegible] ரன்காவது [illegible] னத்து ௧௯-ஆம மந்திரத்திற் சிவதத்துவம் ஐந்தும பெறப்படலானும, வாயுசங்கிதை பூருவபாகத்து ௨௫-ஆம அத்தியாயத்து

[illegible]

சுலோகத்திற் (பரப்பிரகிருதியாகிய) மகாமாயை, (சூக்ஷ்ம) மாயை, (தூலப்பிரகிருதியாகிய) மூக்குண ([illegible]

மும்மாயைகள் பெறப்படலானும், சூதசங்கிதை சூதகீதை உ-ஆம் அத்தி யாயத்து ௩, ௪, ௫-ஆம் சுலோகங்களாற் பெறப்பட்ட முப்பத்தாறு தத்து வங்களும் மூலப்பிரகிருதிக்கு மேற்படச் செல்லாமையானும், இவ்வுண்மை "வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்பட வினவிடையின் ௧௧, ௩உ-ஆம் பக்கங்களால் அறியப்படலானும், யஞ்ஞவைபவகண்டத்து ௧௪-ஆம் அத்தியாயத்து உ௬, உஎ-ஆஞ் சுலோகங்களிற் காணப்படும் நிவிர்த்தி கலை, பிரதிஷ்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை என்னும் ஐங்கலைகளும் முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐம்பூதங்களில் நிலையுறுவன என்று கூறப்படலானும்,

வஹாரணகூ௦ வஸிவத்ர‌‌ேதெ வூய ॥

என்னும் தைத்திரீய ஆரணியக மந்திரத்துக்கு வியாசமுனிவர் அருளிய அறு பது சுலோகவியாக்கியானத்தினுல் வைதிக சைவத்திற் கூறப்படும் நிவிர்த்தி கலை பிருதிவி தத்துவத்துக்கு வியாபகமாகவும், பிரதிஷ்டாகலை அப்பு முதலிய இருபத்து மூன்று தத்துவங்களுக்கு வியாபகமாகவும், வித்தியாகலை புருஷ தத்துவமுதற் சூக்குமப்பிரகிருதி இறுதியாகிய ஏழு தத்துவங்களுக்கு வியா பகமாகவும், சாந்திகலை சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் என்னும் முத் தத்துவங்களுக்கு வியாபகமாகவும், சாந்தியதீதகலை சத்திதத்துவம் சிவதத் துவம் என்னும் இரண்டுக்கும் வியாபகமாகவும் கூறப்படலான், வைதிகத் திற் கூறப்பட்ட நிவிர்த்தியாதி பஞ்சகலைகளினும் வைதிக சைவத்தில் மேலே கண்டவாறு கூறப்பட்ட நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகள் வியாபகமாய் மே லோங்கி நின்றன என்றும் தெளியப்படும்.

(௪௧) விஷ்ணுவினது பரமபதம் வேறு; சிவனாது பரமபதம் வேறு.

விஷ்ணு புராணங்களிற் காரணப்பிரமமாகச் சொல்லப்பட்ட விஷ்ணு வினுடைய பரமபதஸ்தானம் மூலப்பிரகிருதிப் பாற்பட்டதேயாம்; இவ்வுண் மையைத் தத்துவப்பட வினவிடையின் ௪எ-ஆம் இலக்கத்திற் காண்க; சிவ புராணங்களிற் காரணப்பிரமமாகக் கூறப்படும் சிவபெருமானுடைய பரம பதஸ்தானம் சாந்தியாதீதகலைப் பாலது. ஆகலின், சிவன் விஷ்ணு என்னும் இருவகைக் காரணப் பிரமங்களுக்கும் பேதம் இல்லை என்று இரண்டையும் ஒன்றுய்க் கலக்க நேர்ந்த சந்நியாசியார் கருத்து மலையாளத்திற் பாகம்பண் ணப்படும் அவியல் போலாயிற்று. ஆகலின், அவ்விரு பிரமங்களும் பெய ரினாலும் விஷயத்தினாலும் வெவ்வேறும்.

(௪உ) வைதிகத்தின் மேலாயது வைதிக சைவம்.

வைதிகத்திற் சொல்லப்பட்ட ஆன்மப்பிரமத்துக்கு மேல் எத்தனையோ படி தத்துவங்கள் உயரப்பெற்று, அவற்றுக்கு மேல் வியாபகமாயுள்ளார் வைதிக சைவப் பரம்பொருளாகிய சிவபெருமானுமாதலின், "ஆகமிகள் வேதமார்க்கத்திலே வந்துதான் பூரணமாகிய போகமும் மோக்ஷமும் அடையவேண்டியிருக்கின்றதென்று" கூறும் சந்நியாசியாரது அஞ்ஞானவுரை புறவாழியிற்போய் ஒடுங்கிற்று.

யோऽதீத்ய ஸபதக்ரமாந் வேதாந் ஶிக்ஷாத்யங்கஸமந்விதாந் ।
புராண ந்யாய மீமாம்ஸா தர்மஶாஸ்த்ராணி ஸர்வஶ: ।
ஸர்வாகமார்த்த தத்த்வஜ்ஞ: ஸமயாந்தர தத்த்வவித் ।
பதிம் பாஶம் பஶுஞ்சைவ தத்த்வதோ லக்ஷணாந்விதாந் ।
ஜ்ஞாத்வா ஜ்ஞாதாரமேநந்து ஜ்ஞாதாரம் ஜ்ஞேய மவ்யயம் ।
ஜ்ஞாநஞ்ச ஸ்வாத்மநிஷ்டஞ்ச ஶைவமேகம் விஷயம் ததா ।
ஜ்ஞாத்ருஜ்ஞாநாதித்ரயம் விஹாய த்வத்வைதநிஷ்டோ ந்ருப: ।
ஸ ஜீவந்நேவ முக்த: ஸ்யாத் ஶோகக்ஷயம் ஸுநிஶ்சித: ।

"சிக்ஷைமுதலிய ஷடங்கங்களையும், பதக்கிரமங்களோடு நான்கு வேதங்களையும், பதினெண் புராணங்களையும், நியாய மீமாஞ்சா தருமசாஸ்திரங்களையுங் கற்றுச் சகல ஆகமார்த்த தத்துவஞ்ஞனாய், மற்றைச் சமயசாஸ்திரங்களின் தத்துவங்களை அறிந்தவனாய், பதி பாசம் பசு என்னும் திரிபதார்த்தங்களின் இலக்ஷணங்களை அறிந்தவனாய், அந்த ஞானத்தினாலேதானே அகம் என்னும் பதத்தாற் சுட்டப்படும் ஆன்மாவாகிய ஞாதிருவும், ஞேயப் பொருளாம் சிவமும், (தன்னறிவில் விளங்கும் ஞானமாம்) சிவஞானமும் என்னும் மூன்றையும் அறிந்து, (அம்மூன்றின் பகுப்பிறவாதிறந்து அத்துவித) நிஷ்டையுறுபவன் எவனோ அவனே சீவன் முக்தன்" என்னும் ஸ்காந்தபுராண சங்கரசங்கிதைச் சுலோகங்களானும், வைதிகத்திற் சிறந்தது வைதிகசைவம் என்பதும், வைதிகத்தினின்று சைவத்துக்கு வந்துதான் மோக்ஷம் அடையலாம் என்பதும் பிரமாண பூருவமாக நிரூபிக்கப்பட்டமையால், வைதிகத்தைமாத்திரம் சிறந்ததெனக் கூறி மூலப்பிரகிருதிவரையில் நிறுத்திக் கூறுஞ் சூதசங்கிதா சுலோகப்பொருள்கள் பிருதிவியாதி சிவ தத்துவாந்தமாகிய ஷட்திரிம்சத் தத்துவாதீத சிவபரம்பொருளை வியாபகமாக நிறுத்திக் கூறிய சங்கரசங்கிதாசுலோகப் பொருட்கு முன் நிற்கமாட்டாவாய் வலி ஒழிந்தனவாம்.

(௩௩) பாசுபத விரதம் யாதென்பது.

யஜ்ஞவைபவகாண்டத்து ௧௪ ஆம் அத்தியாயத்திலுள்ள

அதர்வசிரஸி ஸம்ப்ரோக்தைர் மந்த்ரை ர்பஸ்ம ஸமாதாய |
பாதாதி கேசபர்யந்தம் தேஹம் ஸம்யக் ப்ரோக்ஷ்ய நீயமித்ஸ |

என்றிருக்கும் இரண்டு சுலோகங்களிலே, அதர்வசிரசிற் கூறப்பட்ட மந்திரங்களால் விபூதியை எடுத்துப் பாதாதி கேசாந்தம் தேகத்தில் உத்தூளனம் பண்ணுவதே (பாசுபத) விரதம் என்றும், இந்த விரதத்தை அதர்வசிரசு விரதம் என்றும், முண்டகோபநிடதம் சிரோவிரதம் என்றும், சுவேதாசுவதரமும் கைவல்லியமும் அத்தியாசிரமம் என்றும், சில உபநிடதங்கள் சாம்பவம் என்றும், சில உபநிடதங்கள் ஐசுவரம் என்றும் கூறுகின்றன என்று காணப்படுகின்றது. வாயுசங்கிதை பூர்வபாகத்து ௨௯-ஆம் அத்தியாயத்தில்

வ்ரதம் பாசுபதம் ப்ரோக்தம் அதர்வசிரஸி ஸ்ம்ருதம் |
வ்ரதம் தத்ரோபஸ்ப்ருஷ்டம் நைஷ்டிகம் ஸம்ப்ரகீர்த்திதம் |
மோக்ஷார்த்தி அத்யாச்ரமீ ஸோ பி மஹாபாசுபதோ பவேத் |

“வைதிக பாசுபதவிரதம் அதர்வசிரசிற் சொல்லப்பட்டது, இவ்விரதத்தை அநுஷ்டிப்பவன் நைஷ்டிகன் எனப்படுவன், அவன் அத்தியாசிரமி என்றும் மகாபாசுபதன் என்றுங் கூறப்படுவன்” என்றும் அறியப்படுகின்றது. வாயுசங்கிதையில் விதிப்பிரகாரம் விரஜாக்கினிகொண்டு அக்கினிவளர்த்து, சைவாகமத்திற் கூறப்பட்ட நிருவாணதீக்ஷையைப்போலத் தத்துவ சோதனை முதலிய செய்து தீக்ஷை செய்யுமாறு கூறப்பட்டிருக்கின்றது. சூதசங்கிதையில் அக்கினி முதலிய ஆறு மந்திரங்கொண்டு சர்வாங்கோத்தூளனமாத்திரஞ் செய்தல் கூறப்பட்டிருக்கின்றதன்றி, விரஜாதீக்ஷை எனப்படும் பாசுபததீக்ஷை செய்யப்படுங்காலம், அக்கினி வளர்க்குமாறு, தத்துவசோதனை புரியுமாறு, தீக்ஷிக்குமாறு முதலிய ஒன்றும் காணப்படவில்லை. வைதிக பாசுபதவிரதமாவது யாதெனிற் சுருக்கிக் கூறுதும்.

அதர்வசிரசிலே கூறப்பட்ட பாசுபதவிரதம் சித்திராபௌர்ணமி முதலியவாகக் குறிக்கப்பட்ட புண்ணியகாலங்களிலே சிவாலய முதலிய புண்ணிய ஸ்தானங்களிலே செய்யப்படல்வேண்டும். பௌர்ணமைக்கு முற்பட்ட திரயோதசியில் முமுக்ஷுவானவன் ஸ்நானஞ்செய்து நித்தியகர்மமுடித்து, குருவை வழிபட்டுப் பூசித்து, வெள்ளைவஸ்திரந் தரித்து, விபூதியிட்டு, தர்ப்பையின்மீது கிழக்கு நோக்கியேனும் வடக்கு நோக்கியேனுமிருந்து, கையிலே தருப்பைகொண்டு பிராணாயாமஞ் செய்து, சிவபிரானையும் சிவபிராட்டியாரையும் மனசினாலே தியானித்து, சிவப்பிரீயர்த்தமேனும், பன்னிருவருஷமே

னும், ஆறு வருஷமேனும், மூன்று வருஷமேனும், ஒரு வருஷமேனும், ஆறு மாசமேனும், மூன்று மாசமேனும், ஒரு மாசமேனும், பன்னிரு தினமேனும், ஆறு தினமேனும், மூன்று தினமேனும், ஒரு தினமேனும் அநுஷ்டிப்பதாகச் சங்கற்பித்து, நெய் சமித்து அன்னம் என்பனகொண்டு மூலமந்திரமுச்சரித்து ஆகுதி செய்து, அதன்பின்னர்ப் பஞ்சபூத முதல் நாத தத்துவமிறுதியாயுள்ள தத்துவங்கள் எனது சரீரத்திலே சுத்தமாகுக என விரஜாமந்திரங்களினால் ஓமித்து, கையிற் கோமயத்தை எடுத்துப் பிண்டஞ் செய்து, அதனை அபிமந்திரித்து, அக்கினியில் வைத்து, தான் அவிசுண்டு, அதனை ஓர் தினம் காத்து, சதுர்த்தசிகாலையின் முதற்றினத்திற் செய்தது போலச் செய்து, நிராகாரனாய் அத்தினத்தைக் கழித்து, பின்னர்ப் பூரணையிற் கிரியைகளை முடித்து, ஓமத்தின் இறுதியிலே உருத்திராக்கினியை ஒடுக்கி, விபூதியைச் சாவதானமாய் எடுத்து, சடையுடையனாயேனும், முண்டிதனாயேனும், ஏகசடையுடையனாயேனும் ஸ்நானஞ் செய்து, இலச்சை ஒழிந்தவனாயின் திகம்பரனாயேனும், காஷாயவஸ்திரம் தரித்தவனாயேனும், சர்மாம்பரமுடையனாயேனும், கந்தை வஸ்திரமுடையனாயேனும், ஒற்றை வஸ்திரமுடையனாயேனும், வற்கலையுடையனாயேனும், தண்டமுடையனாயேனும், மேகலையுடையனாயேனுமாகி, பாத சுத்தி செய்து, ஆசமித்து, சகளீகரணஞ் செய்து, விரஜாக்கினியிலுண்டாகிய விபூதியை "அக்கினிரிதிபஸ்ம" என்றற்றொடக்கத்த ஆறு அதர்வண மந்திரங்கொண்டு தன் அங்கங்களிற் பூசி, பின் பாதாதி கேசாந்தம் பூசி, பின்னர்க் கிரமமாக விபூதியை எடுத்துப் பிரணவத்தையேனும் சிவபஞ்சாக்கரத்தையேனும் உரைத்துச் சர்வாங்கோத்தூளனஞ் செய்து, அதன்பின்னர்த் "திரியாயுஷம்" என்றற்றொடக்கத்த மந்திரத்தை உச்சரித்துத் திரிபுண்டரத்தை இட்டு, சிவபாவனையுற்றுச் சிவயோகம் புரிந்து சிவலிங்கார்ச்சனை செய்க ;- விதிப்படி அங்ஙனம் மகாதேவரை அர்ச்சித்து, செபித்து, பின்னர்க் குருவையும் விரதிகளையும் பூசித்து, சிவபக்தர் முதலாயினோரையும் தீனர்களையும் போசனாதிகளினாலே திருப்தி செய்வித்து, தான் பல மூலங்களையேனும் பாலையேனும் உண்க ; இன்றேற் பிச்சையெடுத்து ஓர் போது நத்தத்திற் போசனஞ் செய்து, எப்பொழுதும் வெறுந்தரையிற் படுக்கப் பயில்க; இன்றேல் விபூதியிற் படுக்க; இன்றேல் திருணத்திலேனும், கந்தைத் துணியிலேனும், மான் றோலிலேனும் படுக்க. இவற்றின் விரிவையெல்லாம் சிவபுராண வாயுசங்கிதை பூருவபாகத்து உ௬-ஆம் அத்தியாயத்தினும் கைலாசசங்கிதையினும் காண்க.

(௩௪) இராமர் கிருஷ்ணர் முதலாயினோர் வைதிகசைவரென்பது.

தண்டகாரணியத்திலே அகஸ்தியர் இராமருக்கும், இமாசலத்திலே உபமன்னியு ஸ்ரீகிருஷ்ணருக்கும் வைதிக பாசுபத விரஜாதீக்ஷை செய்யப்பட்டதென்று முறையே சிவகீதையினும் அநுசாசனிபருவத்து கச-ஆம் அத்தியாயத்தினும் கூறப்படுகின்றது. மேலும், கிருஷ்ணர் பாசுபதோபதேச தீக்ஷை பெற்றமை வாயுசங்கிதை உத்தரபாகத்து உ-ஆம் அத்தியாயத்தினும் ஸ்காந்தபுராண சங்கரசங்கிதை உபதேசகாண்டத்து அ0-ஆம் அத்தியாயத்து சாரு. சாச-ஆம சுலோகங்களினும், கூர்மபுராண பூருவபாகத்து உரு-ஆம் அத்தியாயத்தினும், ஸ்காந்த சம்பவ சிதம்பரமான்மியத்து இருபத்துநான்காம அத்தியாயத்து ருச, ருரு-ஆம் சுலோகங்களினும், சுவேதாசுவதரோபநிடதத்துற கூறப்பட்ட மகாபாசுபதோத்தமராகிய சுவேதாசுவதரர் சுசீலராஜாவுக்குத் தீக்ஷை செய்தமை கூர்மபுராண பூருவபாகத்து கச-ஆம அத்தியாயத்தினும், சவுரபுராணத்து உள-ஆம் அத்தியாயத்தினும், பிரபாகரன் உபதேசிக்கப்பட்டமை ஸ்காநதபுராண சனற்குமாரசங்கிதை கஉ, கரு-ஆம் அத்தியாயங்களினும் கூறப்பட்டுள்ளன. "அரசனையடைந்திடாரெனிலெவரெவராக்கமுமினிது போறுமால்" என்றவாறு, சந்நியாசியார் வடக்குத் தெற்குக்கிழக்கு மேற்கொன்றும் அறியாதவன் பேசுவதுபோலச் சிவபுராணமுதலிய நூல்கள் ஒன்றும் பாராது, மிகக் கீழ்ப்படியினின்று பேசும் சூதசங்கிதையை ஓர் மகாப்பிரமாணமாகக்கொண்டு வைதிக சைவர்க்கெல்லாம் புத்திபுகட்டப் புகுந்தமையாம். "கண்டனம் இன்று யாம் கலியின் வண்ணமே!"

(சரு) விரஜாதீக்ஷை சிவதீக்ஷையே.

ஊஹாநீம் ௐ ஹஷாஹ்ய ப்ரவரெ ந்ஹாத்ஹா நஃ |
ஶிவதீக்ஷாவ்யஹிவ ஸ்ரீத்தா ஶிவா ஹஶிஹாபநாஅ|

'இப்பொழுது எனது பக்த சிரேஷ்டரும் மகாத்துமாவும் சிவாகமஞ்ஞருமாகிய உபமன்னியு வாயிலாக அவர்க்கு (கிருஷ்ணர்க்கு) சிவதீக்ஷை முற்றியது" என்று சங்கரசங்கிதை கூறுமாற்றால், விரஜாதீக்ஷையானது சிவதீக்ஷை எனப்படும் என்பது பெறப்பட்டது.

ஶிரோவ்ரதமிதஂவ்யாதஂ ௐந உபநிஷத்ஸு |
வைதிகீ விரஜாதீக்ஷாவ்யாமேதயா வாவ்நாஶிநீ |
ஶைவஸம்ஸ்காரதீக்ஷேதி கதிதெயனயா ஹஶெ|

'உபநிடதங்களிலே இந்தப் பாசுபதவிரதம் சிரோவிரதம் எனப்படும்; இது பாவத்தைப் போக்கவல்ல வைதிக விரஜாதீக்ஷை எனப்படும்; இது சிவாக

மங்களிலே மந்திர சம்ஸ்காரதீக்ஷை என்று கூறப்படும்" என்று ஸ்காந்த புராண காளிகாகண்டத்திற் கூறப்படுகின்றது.

மேலே கூறிய "விரஜாதீக்ஷையும் வேறு; சிவாகமத்திற் கூறப்படும் தீக்ஷையும் வேறு; வேதத்திற் கூறப்படுகின்ற மந்திரங்களே வைதிகமந்திரங்கள் என்றும், ஆகமத்திற் கூறப்படும் மந்திரங்கள் ஆபாசமந்திரங்கள்" என்றும் கூறும் சன்னியாசியார் சிவபுராணங்கள் வாயிலாக வைதிகபாசுபததீக்ஷையையும் சிவாகமதீக்ஷையையும் ஒன்றென்று வியாசமுனிவரும் சூதமுனிவரும் கூறும் கூற்றுக்களை எப்பிரமாணங்கொண்டு தகர்க்கவல்லுநரோ? கூறுவாராக. இவரது பிரமாணமல்லாத பொய்யுரைகள் அப்பிராமாண்ணியங்களாம்.

சிவாகமத்திற் கூறப்பட்ட மந்திரசம்ஸ்காரதீக்ஷை யானது நிருவாண தீக்ஷையேயாம். வைதிக பாசுபததீக்ஷை பெற்றவர்களே உபநிஷதங்கள் படிக்கற்பாலர் என்பது

தேஷாமேவைதாம் ப்ரஹ்மவித்யாம் வதேத ஶிரோவ்ரதம் விதி வத்யைஸ்து சீர்ணம்॥

முண்டகோபநிடதத்திலும்

* அத்யாஶ்ரமிப்ய: பரமம் பவித்ரம் ப்ரோவாச ஸம்யக்ருஷிஸங்கஜுஷ்டம்॥

"பாசுபத தீக்ஷை பெற்றவர்க்கே பிரமத்தை உபதேசித்தனர்" என்பது சுவேதாசுவதரத்திலும் அறியப்படுவனவேயாக, இக்காலத்துள்ளோர் அவ்வைதிக பாசுபத தீக்ஷைபெறாது மறக்கவிட்டு, இப்போது வாளா விபூதியேனும், கோபியேனும், நாமமேனும், விதிபிறழ்ந்து வரைப்பூமடலை வெய்யிலில் உலர்த்தி நெருப்பிற் கருக்கி மஞ்சளும் நீரும் இட்டு உரைத்தேனும், அரிசியைக் கருக வறுத்துக் கற்கண்டுப் பாகிற் கலந்தேனும ஆக்கப்படும அவைதிக கரிப்பொட்டேனும் இட்டுக்கொண்டு உபநிடதத்தை அத்தியயனஞ் செய்கின்றார்கள். தாங்கள் வைதிக பாசுபததீக்ஷையை அநுஷ்டியாது விடுத்த குற்றத்தைத் தம்மீதேற்றாது வைதிகபாசுபததீக்ஷையினின்று வேறுபடாத நிருவாணதீக்ஷை பெற்றுச் சிவலிங்காராதனஞ் செய்யும் சிவப்பிராமணர்கள் மீதேற்றித் தங்கள் குழூஉக்கள் அதிகப் பட்டிருத்தல் காரணமாகவும், பெரும்பான்மையும் உத்தியோகம் தமக்கிருத்தல் காரணமாகவும், அவர்களை வைது நிந்தித்துப் புறக்கணித்தல் சிவபிரானுக்குப் பொறுக்குமா? பொறுக்காது! பொறுக்காது!! தப்பாது தண்டம் வந்து நேரும்.

---

* ஞானகாண்டமாகிய உபநிடதவித்தியாவிஷயத்திற் காணப்படும் சிரோவிரதம் என்றதைக் கர்மகாண்டத்துக்காக்கித் தீசசட்டி என்றும், அத்தியாசிரமம் என்றதற்குப் பரமகம்ச சந்நியாசி என்றும் கோள சங்கரர் எழுதினமை தவறுமென்க.

இந்தப் பாசுபதநிலைகூ ஸ்ரீநீலகண்ட சைவபாஷ்யத்து (௩., ௩.,௫௩.) அங்காவபத்தாதிகரணத்திலும், (௩. ௪. ௪அ) பாசுபதவிரதாதிகரணத்திலுஞ் சூசிக்கப்பட்டிருக்கின்றது.

(௪௬) பாசுபதம் இருதிறப்படும் என்பது.

பாசுபதம் அவைதிக பாசுபதம் வைதிகபாசுபதம்என இருதிறப்படும் என்று மேலே கூறினோமன்றோ. அவை எவை என்பது வருமாறு:—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

“இரகசியத்திலும் இரகசியமாய்ச் சூக்குமமாய் முக்தியின் பொருட்டு வேதசாரமாயுள்ள சிரௌத பாசுபதம் என்னால் (சிவனால்) ஆக்கப்பட்டது எனவும், வேதாப்பியாசத்தில் விருப்பமுடைய அறிஞன் பசுபதியாகிய சிவபிரானைத் தியானிக்க எனவும், இந்தப் பாசுபதயோகம் முமூட்சுக்களாற் சேவிக்கற்பாலதொன்றும் எனவும், வேதவிருத்தமாய் ருத்திரரால் இயற்றப்பட்ட வாமம், பாசுபதம், சோமம், லாகுளம், பைரவம் என்னும் வேதபாகிய சமயங்கள் முமூட்சுக்களாற் சேவிக்கற்பாலன அன்றும்” எனவும் வைதிக பாசுபதம் அவைதிக பாசுபதம் என்னும் இரண்டும் கூர்மபுராண உத்தரபாகத்து ௩அ-ஆம் அத்தியாயத்திற் பிரித்து விளக்கப்பட்டன. ஈண்டு வைதிக பாசுபதம் என்றதிற் காணப்படும் பாசுபத சப்தமானது காமிகாதி ஆகமங்களை உணர்த்திய இவ்வுண்மை

[illegible]
[illegible]
[illegible]

அதிவருணாச்சிரம ஸ்ரீசிவாக்கிரயோகீந்திரசுவாமிகள் உரைத்த உரையாலும் அறியப்படும். ஆகலின், அவைதிக பாசுபதாகமங்களினின்று வேறுபட்டுச் சிறந்துள்ளன காமிகாதி ஆகமங்களேயாம்.

(௪௭) சந்நியாசியார் கூறிய கடவல்லி சுருதிப் பொருள் தவறென்பது.

வச்சிரகண்டம்.

𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌂 𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃 |

"அந்த விஷ்ணுவினது பரமபதத்தைப் பெரியோர் சதாகாலமும் பார்க்கின்றார்" என்று இருக்குவேதத்து ௧-ஆம் மண்டலத்து ௨௨-ஆம் சூக்தத்து ௨௦-ஆம் மந்திரத்திற் கண்ட இந்த விஷ்ணு என்னும் பதம் எவரைச் சுட்டியதாம் என ஆராயின்,

𑌶𑌿𑌵𑍋𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑍋𑌰𑍁𑌦𑍍𑌰𑍋𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃 |
𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍈𑌦𑍍𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 |

"சிவன், மகேசுவரன், உருத்திரன், விஷ்ணு, பிதாமகர், சம்சாரவைத்தியர், சர்வஞ்ஞர், பரமாத்துமா" என்னும் சிவபிரானது நாமாஷ்டகங்களுள் விஷ்ணு என்னும் நாமம் படிக்கப்படுதலால் அது சிவபிரான் மேலதேயாம் என்பது வாயுசங்கிதை பூருவபாக ௨௮-ஆம் அத்தியாயத்து ௨௨-ஆம் சுலோகத்திற் பெறப்படலானும்,

𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 𑌭𑍂𑌮𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌶𑌰𑍀𑌰𑌾𑌦𑌿 𑌘𑌟𑌾𑌦𑌿 𑌚 |
𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌶𑌿𑌵𑌸𑍍𑌤𑍇𑌨 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌃 |

"சிவதத்துவமுதற் பிருதிவிதத்துவமீறாகச் சரீராதிகளையும் கடாதிகளையும் வியாபித்து நிற்கின்றமையாற் சிவபிரான் விஷ்ணு" எனப்படுவார் என்று வாயுசங்கிதை பூருவபாகத்து ௨௮-ஆம் அத்தியாயத்து ௩௯-ஆம் சுலோகத்தால் அறியப்படலானும் வாசுதேவருடைய வியாபகம் சிவதத்துவ வித்தியாதத்துவங்களிலிலாது மூலப்பிரகிருதி வரையிலுண்மையான், அவர்க்கு விஷ்ணு என்னும் பெயர் வாஸ்தவமாய்ச் செல்லாது உபசாரமாத்திரையினாற் செல்லுமாம் என்க.

மேலே உரைத்த விஷ்ணு என்னும் பதம் விஷ்ணுவுக்கு முக்கிய விருத்தியினாற் செல்லாது என்பதுணர்த்தற்கே கடவல்லியுபநிடதம் (௩. ௯)

𑌸𑍋𑌽𑌧𑍍𑌵𑌨𑌃 𑌪𑌾𑌰𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍 |

"அவன் (அறிவித) அத்துவாவின் கரைக்கண்ணதாகிய சிவனாது பரமாகாய பரமபதத்தை அடைகின்றான்" என்று அத்துவாவை விதந்து இடம் வரையறுத்துக் கூறினமையானும்,

𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚 𑌪𑌦𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚 𑌵𑌰𑍍𑌣𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚𑍇𑌤𑌿 𑌶𑌬𑍍𑌦𑌿𑌤𑌾𑌃 |
𑌭𑍁𑌵𑌨𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌧𑍍𑌵𑌾 𑌕𑌲𑌾𑌧𑍍𑌵𑌾 𑌅𑌰𑍍𑌥𑌗𑌾𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 |

"மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா என்னும் மூன்றும் சப்தாத்துவாக்கள் என்றும், புவனாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என்

னும் மூன்றும் அர்த்தாத்துவாக்கள்" என்றும் வாயுசங்கிதை பூருவபாகத்து உடு-ஆம் அத்தியாயத்து கய-ஆம் சுலோகம் கூறுமாற்றானும்,

ஶிவதத்வாதிஹ்ருத்யந்தஸ்தத்வாத்வா ஸமுதாஹ்ருத꞉ ।

"சிவதத்துவமுதற் பிருதிவி தத்துவம் இறுதியாயுள்ள தத்துவமுப்பத்தாறும் தத்துவாத்துவா" எனப்படும் என்று வாயுசங்கிதை உத்தரபாகத்து கடு-ஆம் அத்தியாயத்து சு-ஆம் சுலோகம் கூறுமாற்றானும், இவ்வறுவித அத்துவாவும் தத்துவ முப்பத்தாறும விஷ்ணுபுராணங்களிற் காணப்படாமையானும், வைஷ்ணவபாஷ்யகாரரும் கேரளசங்கரரும் உபப்பிருங்கணங்களுக்கு மாறுபட அத்துவா என்பதற்குச் சம்சாரகதி என்று பொருள் கூறினமையானும்,

ப்ரதிஷ்டாகலாரூபம் ஸ்திதிசக்ரம் ப்ரதிஷ்டிதம் ।
ஜநார்தநாதிஷ்டிதஞ்ச பரமம் பதமுச்யதே ।
யத்தேவபதம் ப்ராப்ய விஷ்ணோர்பதம் ப்ரயாந்தி ந ।

"பிரதிஷ்டாகலாரூபம ஸ்திதிசக்கரம் என்றும், இதனை அதிஷ்டிப்பவர் விஷ்ணு என்றும், இது பரமபதம் எனப்படும் என்றும், விஷ்ணுபாதத்தைச் சேவிப்பவர்கள் இந்தப் பதமே அடையற்பாலர்" என்றும் சைவபுராண கைலாசசங்கிதை கய-ஆம் அததியாயம் கூறலானும், பிரதிஷ்டாகலை மூலப்பிரகிருதிப்பாற்பட்டதென அறியப்படலானும்,

ஸதம் ப்ரகாரமமலம் நித்யம்வ்யாபகமக்ஷயம் ।
ஸமஸ்தஹேயரஹிதம் விஷ்ணாக்யம் பரமம் பதம் ।

"இந்தப் பிரகாரம் அமலமும், நித்தியமும், வியாபகமும், அழியாததும், தீங்கியாதுமிலாததுமாயுள்ளது வைஷ்ணவபரமபதம்" என்று விஷ்ணுபுராணம் கூறுமாற்றானும், விஷ்ணுவினுடைய பரமபதம் கவுணவிருத்தியினுல் மூலப்பிரகிருதிப்பாற்பட்டதாய் முடிந்தது. மேலே கடவல்லியும் வாயுசங்கிதோபப்பிருங்கணமும் கூறியவாறு

ஸோऽத்வந꞉ பாரமாப்நோதி மமைவ பரமம் பதம் ।

"அத்துவாவின் கரைக்கண்ணதாகிய என்னுடைய பரமபதத்தையே அடைகின்றான்" என்று ஸ்ரீராமர்க்குச் சிவபிரான் உபதேசித்ததாகச் சிவகீதை கஉ-ஆம் அத்தியாயத்திற் கூறப்படலானும்,

யோகிநாமம்ருதம் ஸ்தாநம் வ்யோமாக்யம் பரமம் பதம் ।

"யோகிகளுடைய அமிர்தமாகிய ஸ்தானம் ஆகாயம் எனப் பெயரிய பரமபதம்" என்று கூர்மபுராணம் கூறுமாற்றானும்,

𑌯𑌸𑍍𑌯 𑌸𑌾 𑌪𑌰𑌮𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌾𑌕𑌾𑌶𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌾।

"எவர்க்குப் பரமமாகிய சக்திதேவி உளரோ, அவா ஆகாயம் எனப்படு வர்" என்று கூர்மபுராண உத்தரபாகத்து ௩௧-ஆம் அத்தியாயங் கூறலா னும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

"சாந்தியதீதகலா ரூபமானது அநுக்கிரக சக்கரம், இது சதாசிவரால் அதிஷ் டிக்கப்பட்ட பரமபதம்; பிரணவத்திருத்திய அறிவுடையராய்ப் பாவிக்கும் சதாசிவோபாசகர்களாகிய துறவிகள் அடையும் (துரிய) பதம் இதுவே; இவ்வுபாசகர்கள் பிரமசொரூபியாகிய சிவனாரோடு மிகு விரிவாகிய போகங் களைத் துய்க்கின்றார்" என்று கைலாசசங்கிதை ௧௦-ஆம் அத்தியாயங் கூறு மாற்றானும்,

[illegible]

"இந்தத் துரிய (பதம்) எனப்பெயர்படைத்த அத்துவாதீதமானது திருவரண மாகிய பரமபதம்" என்று வாயுசங்கிதை உத்தரபாகத்து உ௭-ஆம் அத்தியா யத்து அ௨-ஆம் சுலோகம் கூறுமாற்றானும்,

[illegible]
[illegible]

"பால் கறந்து கலசத்தினுள்ளே வீழும் அத்துணைப் போதேனும், வில்லி னின்று பாணம் வீழும் அத்துணைப் போதேனும், இமைகொட்டும் துணையே னும் ஒருக்காற் சிவனரது பரமாகாய பரமபதத்தை (ஒருவன் உள்ளக்கண் ணாற்) பார்ப்பானுயின், அவன் புநர்ச்சென்மம் அடையமாட்டான்" என நிசுவாசகாரிகாகமமும் சுருதிக்கியைந்து கூறுமாற்றானும், அறுவித அத்து வாவின் கரைக்கண்ணதாகிய சிவனரது பரமாகாயபதத்தையே இருக்கு வேதமுதலிய வேதங்களும், கடவல்லியுபநிடதமும், உபப்பிருங்கணங்களும் முக்கிய விருத்தியினால் உணர்த்தி நின்றன. அங்ஙனமாகவும் "திரிவிதபரிச் சேத சூன்னியமான பிரமத்தினுடைய ஸ்வரூபத்தையடைகின்றான் என்றும், நித்திய முக்த சுவ்பாவமாகிய பிரமம் சொரூபமாகிய தன்னிடத்திலே கற் பிதமாகிய அவித்தை தத்பிரயுக்த திருசியங்கள் ஞானத்தினால் உச்சேதத்

தை அடைந்து போகின்றதென்று அபிப்பிராயம்" என்றும் மந்திரம் ஓர் புறமும் அர்த்தம் ஓர் புறமுமாக வேறுபடச் சந்நியாசியார் அநர்த்தம் வரைந்தார், பிழைபட்டார்.

(சஅ) சூதசங்கிதையில் நிருவாணதீக்ஷை கூறப்பட்டமை.

இந்த அத்துவாக்கள் சாதாரணம், அசாதாரணம், சாதாரணாசாதாரணம் என மூத்திறப்படும். சத்திநிபாதமுற்ற சீடனுடைய சரீரத்துற்ற சாதாரணாசாதாரண அத்துவாக்கள் நிருவாணதீக்ஷையில் ஆசாரியராற் சோதிக்கப்படும். இதனையே வாயுசங்கிதை,

ஸம்ஸ்காரஃ க்ரியதே தேநஷடத்வ ஶுத்திரிதீர்யதே ।

"அவராற் சம்ஸ்காரமானது ஷடத்துவசோதனை என்று சொல்லப்படுகின்றது" என்று கூறலானும்,

பஶ்சாத் குரூபதிஷ்டேந மார்கேணைவ ப்ரயத்நதஃ ।
க்ருதேந ஆசார்யேணைவ அருளாளர் சிவஜாதிபீஜாத்தமாஃ

"பின்னர்க் குரு சொன்ன மார்க்கத்தினாலே தான் பாசச்சேதம் செய்ய வேண்டும்; துவிஜோத்தமர்களே! அருளாளராகிய ஆசாரியராலே (அங்ஙனம்) செய்யப்பட்டவிடத்து" என்று சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டத்து ருச-ஆம் அத்தியாயத்து கச-ஆஞ் சுலோகம் கூறலானும், இச்சூத சங்கிதா சுலோகத்தைப் பொருள் சொல்லி விளக்கப்போகுங்கால்,

ஸூத்ரம் மூலேந பத்நீயாத் முமுக்ஷோஃ ஶிகாக்ரகே ।
தத் ஸூத்ரம் தக்ஷிணாங்கே பாதாங்குஷ்டாந்தமாநயேத் ।

"மூலமந்திரத்தினாலே முமுட்சுவாகிய சீடனுடைய சிகையின் நுனியிலே சூத்திரத்தைக் கட்டவேண்டியது; அந்தச் சூத்திரத்தைத் தக்ஷிணபாகத்திலே பாதாங்குஷ்டம் வரையும் செல்லவிடவேண்டியது" என்றற்றொடக்கத்த சிவாகமத்து மூன்று சுலோகங்களை வித்தியாரணியர் உதகரித்திருக்கின்றமையாலும், நிருவாணதீக்ஷை செய்யுமாறு வைதிகர்க்குள் இல்லாமையாலும், சூதசங்கிதையிலே குரு எனவும் காருணிக ஆசாரியர் எனவும் புகழப்பட்டவர் சந்நியாசியாரால் இழித்துரைக்கப்பட்ட ஆதிசைவ சிவாசாரியரேயாம். சிவகீதை, வாயுசங்கிதை, கைலாசசங்கிதை, சனற்குமாரசங்கிதை என்பவைகளிற் கூறப்பட்ட பிரகாரம் வைதிகபாசுபததீக்ஷை பெறுமனும், அது மட்டோ! விபூதி பூசாமலும், அதுமட்டோ! அவைதிகமாகிய கரிப்பொட்

டிட்டும், அதுமட்டோ! வெறு நெற்றியோடும் உபநிஷதங்களை உபதிட்டுவித்தி குமாருகப் படிக்கும் இக்காலத்துப் பிராமணர் முழுமட்சுவாகிய சீடனுடைய பாசச்சேதம் பண்ணுதற்கு ஆசாரியராய் வருதல் ஓர்போதும் கூடாதாம் என்க. சிவாகமங்களைச் சூத்திரர்தாமும் கேட்கப்படாதென்று தவிர்க்கும் இரசந்யாசியார்தாமா வைதிக பாசுபததீக்ஷைபின் முடிவுக்கு மாறுபடாது போதிக்கும் சிவாகமத்திற் கூறப்பட்ட நிருவாணதீக்ஷையை அங்கீகரிப் பார்! இந்த நிருவாணதீக்ஷையைப் பொருட்படுத்தாது விடுதலோடமையாது சந்யாசியார் அதற்குத் தூஷணதுராக்கிரம புரிந்து அதிபாதகத்துக்கு ஆளாயினும் ஆவாவார். வைதிக சூதசங்கிதைபினுள்ளே சந்நியாசியாரு டைய விரோதிகளாகிய சிவாகமப் பிரதிபாதித சிவாசாரியர்கள் புகுந்து கொண்டார்களே! இதற்குச் சமாதானம் சந்நியாசியார்தாம் கூறவேண்டி யது; இவர் இனிச் சூதசங்கிதையைப் பிரமாணமாக ஓர்போதும் அங்கீகரி யார்.

(௪௯) இதிகாசபுராணங்களினுஞ் சிறந்தன சிவாகமங் கள்.

மேலே கடவல்லி மந்திரத்திற் கண்ட அத்துவா சப்தகத்துக்குப் பொ ருள் செய்யுங்கால், அதனை ஆறத்துவா என்றும், மந்திரம் பதம் வர்ணம் புவ னம் தத்துவம் கலை என்றும் சிறிது விரித்துச் சில புராணங்களும், இவற் றினுஞ் சிறிது சுதித்து மற்றோர் புராணமும் விரித்துக் கூறுமாயினும், சிவாகமங்களே அத்துவாவைப் புராணங்களினும் மிக விரித்துக் கூறுவன வாயின. மிருகேந்திராகமம் கஙு-ஆவதில் அத்துவாபிரகரணத்தை ௨௦௦- சுலோகங்கொண்டும், சுப்பிரபேதாகமம் அத்துவவிதிப்படலத்தை ௨௫௦- சுலோகங்கொண்டும், சுவச்சந்தபைரவாகமம் முதலியவும் அங்ஙனம் மிகமிக விரித்தும் கூறியிருத்தல் காண்க. இதுபற்றியே புராணங்கள் சிவாகமங்களிற் சிறந்து விரித்துச் சுருதியர்த்தங்கள் கூற வன்மையுடையன அன்றென்று கொண்டன்றே,

ஐதிஹாஸ புராணாப்⁴யாம் வேதம் ஸமுபப்³ரும்ஹயேத்।

"இதிகாச புராணங்களால் (சுருதிகள்) மிகு பிரயாசையோடு (சிற்சிலவே) உபப்பிருங்கணஞ் செய்யப்படும்" என்று வியாசர் கூறினர்.

(௫௦) (சூதாசாரியர்) சிவாகமப் பிரகாரம் சாட்சுஷி தீக்ஷை செய்தமை.

ஸோஹித்வா நாஹ பூ⁴க்ஷா விலோகநேநைவ தேஜஸா।

என்னும் சிவமான்மியகண்டத்து க-ஆம் அத்தியாயத்து கூ-ஆஞ் சுலோகத்துக்குப் பொருள் செய்யுங்கால், வித்தியாரணியர் தீபிகையில் "முனிவர்கள் புராணசங்கிதைகளைக் கேட்பதற்கு முக்கியாதிகார சித்தியின் பொருட்டுப் பரமசிவத்தியானத்தை முன்னிட்டுச் செய்யும் அவலோகனமாகிய சாட்சுஷி தீக்ஷையைச் (சூதர்) செய்தார்" என்று கூறி,

அக்ஷிணீ ஸம்மீல்ய தத்த்வம் த்யாத்வா சிஷ்யம் ஸமீக்ஷதே।
பசோ: பாசவிமோக்ஷாய தீக்ஷைஷா சாக்ஷுஷீ மதா।

"கண்ணை மூடி மெய்ப்பொருளைத் தியானித்து (ஆசாரியர்) சீடனைப் பார்க்கின்றார்; பசுவினின்று பாசத்தை நீக்கும்பொருட்டுள்ள இந்தத் தீக்ஷை சாட்சுஷி தீக்ஷை என அறியப்படும்" என்றற்றொடக்கத்த இரு சுலோகங்களைச் சிவாகமத்தினின்று பெயர்த்து எழுதி உதகரித்து விளக்கினர். ஆகவே, சந்நியாசியாருடைய தனி வைதிகமானது சிவாகமமின்றி நடைபெறமாட்டாதென்று அறிந்திருந்தும், ஞானவதி கிரியாவதிப்பிரகாரம் தீக்ஷை செய்யும் சிவாசாரியர்களைத் தூஷிக்கத்தலைப்பட்டார். சூதர்தாமே சூத்திரராயிருந்தும் முனிவர்க்கெல்லாம் சாட்சுஷி தீக்ஷை செய்திருப்பாராக, "சூத்திரன் ஞானியாயிருப்பின் சூத்திரனேனும் பிராமணனேனும் உபதேசம் பெறும்பொருட்டு அவனை நணுகப்படாது" என்று ஆஞ்ஞை செய்த சந்நியாசியார் கூற்றுப் பதர்வார்த்தை என்றே ஒதுக்கப்படும்.

(௫௧) உபாசனை மூவகைத்தெனல்.

த்ரிவிதா பாவநா ப்ரஹ்மந் ப்ரோச்யமாநா நிபோத மே।
ஏகா மத்விஷயா தத்ர த்விதீயா வ்யக்தஸம்ச்ரயா।
அந்யா ச பாவநா ப்ராஹ்மீ விஜ்ஞேயா ஸா குணாதிகா।
ஆஸாமந்யதமாம் பாவநாம் பாவயேத் புத:।

"[இந்திரத்தியும்நர் கூர்மரை (நாராயணரை) நோக்கி, சுவாமி] மூவிதபாவனைகளையும் எனக்கு அருளுக" என்று வேண்ட "(நாராயணர்) முதலாவது பாவனை என் விஷயம் (சகுணவிஷயம்), இரண்டாவது பாவனை அவ்வியக்தம் (நிர்க்குணம்) பற்றியது, மூன்றாவது பாவனை முக்குணங்களைக் கடந்த பிராம்மிபாவனை; இம்மூன்று பாவனைகளுள் ஒன்றை அறிஞன் பாவிக்க" என்றும்,

அசக்த: ஸம்ச்ரயேதாத்யாமித்யேஷா வைதிகீ ச்ருதி:।

"அசக்தன் (சகுணபாவனையாகிய) முதலாவது பாவனையையே ஆசிரயிக்க என வைதிக சுருதி கூறிற்று" என்றும் கூர்மர் இந்திரத்தியும்நர்க்கு மூவித பாவனைகளைத் தொகுத்துக் கூறி, முதலாவது பாவனை இன்னதென உரைத்தனர்.

[illegible]

"அசக்தன் உருத்திரரையும் நாராயணரையும் பிரமாவையும் வழிபடுக" என்று கூர்மபுராணத்து இறுதி அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது.

[illegible]

"மூலப்பிரகிருதிக்கு (தமசுக்கு) மேலாயும், சோதியாயும், அக்ஷரமாயும் சச்சிதானந்தமாயும், அவ்வியக்தமாயும் பரத்துக்குமேல் அதிபரமாயும், பரதத்துவமுமாயுள்ளது பிரமம்; அதின் ஐசுவரியம் விபூதி எனப்படும்; காரியம் உலகம, காரணம் சுத்தமும் அக்ஷரமுமாகிய அவ்வியக்தம்; சர்வ பூதங்களுக்கும் அந்தரியாமியாகிய பரமேசுவரன் நான்; சிருஷ்டி திதி சங்காரம் என்னுடைய கிருத்தியமாம்; (குருவுபதேசத்தினுலே) இவ்வாய்மையை உள்ளவாறு அறிந்து கன்மயோகத்தினுல் எக்காலமும் வழிபடுக" என்று கூர்மபுராணத்து க-ஆம் அத்தியாயத்தில் இரண்டாவது பாவனையாகிய நிர்க்குணேபாசனை கூறப்பட்டது. இது அக்ஷரபாவனை எனவும், நிர்ப்பீஜயோகம் எனவும படும்.

[illegible]

"விகற்பம் ஒழிந்த தத்துவமே பரம் எனப்படும்" எனச் சிவபுராணத்தினும்

[illegible]

"போக்தாவும், அக்ஷரமும், புத்தமுமாயுள்ள சாட்சியை அறிஞர்கள் பிரகிருதிக்கு மேலுளதாகக் கூறுகின்றனர்; இவ்வான்மா தனியாயும், சுவச்சமாயும், சுத்தமாயும், சூக்குமமாயும், சநாதனமாயும், சர்வாந்தரியாமியாயும், சின்மாத்திரமாயும் மூலப்பிரகிருதிக்கு மேலாயும் உள்ளது" எனக் கூர்மபுராணத்துச் சாங்கியயோகம் உரைத்த அத்தியாயத்திலும்

[illegible]

“(அகம் [illegible] பதத்திறைற் குறிக்கப்பட்ட) ஆன்மா மணிகளின் நூல்போலத் தொடர்ச்சியாய்ச் சர்வசரீரங்களுக்குள்ளிருநது நியாமகனுய்ப பிரகாசிககுங்கால் அந்தரியாமி எனப்படுவன்” என ஏகான்மவாத சாவசாரோபநிடதத்தினும்,

[illegible]

“நானே சுத்தான்மா, நானே எப்போதும் நான், நான்தான் நித்தியான்மா, நான்தான் தற்பரன், நான்தான் அநதரியாமி, நானே பரமேசுவரன் என இந்தப் பிரகாரம் (நிருபசரிதமாய்) எக்காலமும பாவிக்க” என ரிபுகீதையினும் கூறப்படலான், இநத இரணடாவது பாவனை ஏகான்மவாதிகளுக்குரிய நிர்க்குணேபாசனை என்பது அறியபபடும. பிரமகீதை ரு-ஆம அததியாயதது கஉ அ-ஆஞ சுலோகததிலே,

[illegible]

“இதுதான் வேதார்த்தம் இதற்கு மேலானது இலலை, (இதோ) ஒழுகக் காய்ச்சிய மழுவைப பிடிக்கின்றேன், சததியநதான் சநதேகமிலலை; பரமாஸ்திகர்களே” என்று பிரமாவானவர முமமுறை கூறிச சததியம பண்ணிஞர என்று காணப்படுகின்றது. இதனை மெயபபடுததுமபொருட்டுச் சிவபெருமானும் உமையமமையாரும பிரசன்னமாயினுர என்றும ஆணடுக கூறபபடுகின்றது.

[illegible]

“(ஏகான்மவாத) ஆசாரியர் செய்தஉபதேசத்தினுல் எய்தும் பிரமசாக்ஷாத்காரமும் அவித்தியா நிவிர்த்தியும் கூறபபட்டன” என்று வித்தியாரணியர் முடித்துக் கூறும சாக்ஷாத்காரம இந்த நிர்க்குணபாவனையினுலேயாமாதலினும், இந்த (அக்ஷரமும அவ்வியக்தமுமாய) நிர்க்குணபாவனையினும் மூன்ருவதாகக் கூறப்பட்ட பாவனையாகிய அத்தியாசிரமயோகம் உயர்நததாமாதலினும், இது சாரூப்பிய நிலையில் முற்றுவதேயாக, ஞானபாதத்தினுற் பெறப்படும் போக்கு மீட்சியில்லாமுத்தி சிவாத்நஞான போதத்தாற் பெறற்

வச்சிரதண்டம்.

பாலதாமாதலினாலும், ஸூதசங்கிதை கூறிமுடித்த பிரம சாக்ஷாத்காரம் ஆன்மப்பிரமமேயாமாதலினாலும், சத்தியம்பண்ணிக் கூறப்பட்ட இரண்டாவதில் முடிந்ததில்லையன்றென்றும், பிரமாவைக் கள்ளச் சத்தியத்துக்கு ஆளாக்கினவர் புராணங்களுள்ளே லளிதமொழிகளாற் செறிக்கப்பட்ட ஸூதசங்கிதையை எண்ணிப் பதினெட்டுத்தரம் படித்த அக்கோரனத்தாரேயாம் என்றும் ஓர்ந்து உண்மை கடைப்பிடிக்க. அங்ஙனம் மாண்டூக்யோபநிடதத்துட் புகுத்தப்பட்ட கவுடபாதகாரிகையும் பொருட்படுத்தப் படுவதன்று.

> த்வக்சாவசேஷாதிவ்ரதவேஷ [illegible] ॥
> ஸந்ந்யஸ்ய ஸர்வகர்மாணி வைராக்யோ [illegible] ॥
> ஶ்ரீருத்ராக்ஷத்ரிபுண்ட்ர [illegible] ॥
> ஸர்வாத்மா [illegible] ॥
> ஸ்வாத்மா [illegible] ॥

"புத்திராதியரிடத்துள்ள பற்றை அறுத்தொழித்து வைராக்கியனாய், [illegible] கிரகனாய், சர்வகர்மங்களும் ஒழிந்து தரித்த வைராக்கியமுடையனாய், பரமைசுவரியம் பூண்டவன் (பாசபாதபோகநெறியராய்) ஆன்மாவிலே [illegible] பராசத்தியோடு பரமான்மாவாகிய சிவபெருமானைக் கண்டு, பின்னர்த் [illegible] பரமான்மாவாயுள்ளவரிலே உலகமெல்லாம் [illegible], இங்ஙனம் அக்ஷரபாவனை [illegible] (பிரகிருதிஞானாதீதராக) எய்தும் இந்த இறுதியாகிய பிராம்மிபாவனையை அடைகின்ற பரமபோக நிலையிலே ஏகராகிய சிவபெருமானைக் காண்கின்றார்" எனக் கூறும் [illegible] வது பாவனையை விதந்து கூறிற்று.

> நகர்மணா நப்ரஜயா [illegible] ॥

"(சிரௌத ஸ்மார்த்தக்) கிரியையினாலாவது, [illegible] யுடைமையினாலாவது, பொருளுடைமையினாலாவது அப்பிரமவித்தையை கிட்டாது, பின் இம் மூன்றையும் பரித்தியாகம் செய்தலினால் சிவத்துவம் அடைந்தார் பெரியோர்" என உமையாரோடு கூடிய சிவபெருமானது பாவனை [illegible] அத்தியாசிரம கைவல்லியோபநிடதம் கூறுமாற்றானும்,

> ஸிவே [illegible] ஶ்ரௌத ஸ்மார்த்த [illegible] ॥
> விரக்தாநாம் [illegible] ॥

"அநேக சென்மங்களில் முற்றிய வைதிகஸ்மார்த்த கன்மங்களையுடையராய், அதனாற் பற்றற்றவராய், அறிவுடையராய் எய்தினோர்க்கே சிவபெருமான் அருள்பாலிக்கின்றார்" என வாயுசங்கிதை கூறுமாற்றானும் மூன்றாவது பாவனை வலியுறுத்தப்படும்.

(நஉ) யோகி முத்திறப்படுவனெனல்.

சகுணபாவனை, அக்ஷரபாவனை, பிராம்மிபாவனை என்னும் மூன்றும் முறையே பவுதிகயோகம், சாங்கியயோகம், அத்தியாசிரமயோகம் என மூவகைப்படும். இவ்வுண்மை,

[illegible]
[illegible]

"யோகி பவுதிக யோகியும், சாங்கிய யோகியும், அத்தியாசிரம யோகியும் என மூவகைப்படுவன் என்றும், (கூர்மபுராணத்து க-ஆம் அத்தியாயத்திலே) உபதேசிக்கப்பட்ட நாராயண விஷயமாகிய முதலாவது சகுணபாவனை பவுதிகயோகம் என்றும், அவ்வியக்த (அக்ஷர) பாவனை சாங்கியயோகம் (நிர்க்குணயோகம்) என்றும், மூன்றாவதாகிய இறுதிப் பிராம்மிபாவனை (பரமேசுவரபாவனை) (இப்புஸ்தகத்து ௩௦ ஆம் பிரிவிற் கூறப்பட்டவாறு முக்கிய உபநிடதங்களினுல் முடிவாகக் கூறப்படும் பரமயோகமாகிய) அத்தியாசிரம யோகம் என்றும் கூறினமை கூர்மபுராண இரண்டாவது அத்தியாய சுலோகங்களான் உணர்க.

[illegible]
[illegible]

"சாங்கியமானது வேதாந்த விசாரம் எனவும், யோகம் நிர்க்குணப்பிரமோபாசனை" எனவும் சித்தாந்த லேசசங்கிரகத்திற் கூறப்பட்டது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

"ஸ்ரீ கூர்மமூர்த்தியினுலே எந்த அத்தியாசிரமிக்குரிய பாவனுவிஷயம் சொல்லப்பட்டதோ, அது சங்கரரைப்பற்றியதாய், சகுணவிஷயிணியாய்த் திவ்ய ஸ்தானத்தை (மகாசிவலோகத்தை) கொடுப்பதாகிய மூன்ருவது பாவனையாம்; மற்றிரு பாவனைகள் எவையாமெனில், அவை விஷ்ணுவோடும் (கமலக்கண்ணரோடும்), ஆதிசக்தியுடனும் இசைந்தனவாம்; இந்த நாராயண பாவனை (சகுணபாவனை), அக்ஷரபாவனை (ஆதிசக்திபற்றிய நிர்க்குணபாவனை) என்னும் இவ்விரண்டும் கிரமபலமுடையனவாய், பவுதிகயோகத்தையும் சாங்கிய யோகத்தையும்பற்றி, அந்த அத்தியாசிரமபாவனையை அடைவிப்பனவாயின" என்று பெரியோரும் பணித்தார்.

[illegible]
[illegible]

வ நாவ்யவ்ர திவ்ஸாய நவ ஸிவக்ஞஜ்ஞ தியெர் தத்யோ மஹாவ நாயா: வஸ ஸெ நாஸிவ்யஷா நவ்ராவஷிரப த்தா|*

"ஆகலின், வெகுகாலம் நாராயணவுபாசனை செய்த இந்திரத்தியும்னர்க்குச் சகல துவைதமும் நீங்கிய சிவனுக்கு அபின்னமாகிய நிர்க்குணப்பிரம ஞான மாய் மத்திய அதிகாரிக்குரிய யோகமாயுள்ள இரண்டாவது பாவனைப் பிர விருத்திசாதன பூர்வமாக எய்தும் மூன்றாவதாகிய உத்தமயோகபாவனைக் குச் சிவனாது திவ்யஸ்தானமாகிய சிவலோகப்பிராப்தியே (பயனாகக்) கூறப் பட்டது."

ஸாஂக்யாத் யோகஃ வாஞ்சராத்ரஂ வெதாஃ வாஶுபதஂ தயா|

என்னும் பாரத வாக்கியத்தினால், (நிரீச்சுர) சாங்கியத்தினும் சிறந்தது யோ கம் என்றும், யோகத்தினுஞ் சிறந்தது பாஞ்சராத்திரம் என்றும், பாஞ்ச ராத்திரத்தினுஞ் சிறந்தது வைதிகம் என்றும், வைதிகத்தினுஞ் சிறந்தது (வைதிக பாசுபதம்) என்றும் பாரதம் நிறுத்திய முறையானே அறியப்பட லான், கூர்மபுராணத்திற் கூறப்பட்டவாறு பாஞ்சராத்திராகமப் பிரமம், பாசு பதாகமப் பிரமம் என்னும் இரண்டிக்கும் மத்தியிற் போந்தது வைதிகப்பிரம மாம். ஆகவே, பாஞ்சராத்திரம் சகுணமாக, பாசுபதமும் சகுணமாக நடுக் கணுற்றது சந்நியாசியாரது மாயாவாத நிர்க்குணப் பிரமமாம் என்க. இந்த ஆன்மப்பிரமத்தையே பரப்பிரமம் என்றும், சிவம் என்றும், முடிந்த நிலை என்றும் கூறி † மாயாவாதிகள் தடுமாறுகின்றார்கள். இஃது தெளிவாய பிர காசமுடைய ஸ்படிகத்தை மயக்கத்தினால் தெளிவாய பிரகாசமுடைய வை ரத்தினுஞ் சிறந்ததென ஒருவர் கோடல்போலாம். இது ஆன்மப்பிரமநிலை என்று கொண்டே கொற்றவன் குடியார் "தாம்பிரமங் கண்டவர் போற் றம்மைக்கண்டாங்கதுவே நான் பிரமமென்பவர்பானண்ணாதே" என்றும் தாயுமானவர் "யாங்களே கடவுளென்றிடும்பாதகத்தவரும்" என்றுங் கூறி னர். சந்நியாசியார் கூர்மபுராணத்தினும் பாரதத்தினும் கூறப்பட்டவாறு இரு சகுணங்கட்கும் நடுவிலகப்பட்டுப் போய ஆன்மப்பிரமத்தை வன்

* பழைய மூல ஏட்டில் இங்ஙனம் காணப்படுவதேயாக, அது பின்னானை யில் ஏகான்மவாதிகளால் தமது கொள்கைக்கு வாய்ப்ப வழுவுறத் திரிக்கப்பட்டுப் போயிற்று.

† ஆன்மா சேஷிக்குமாறு வந்தியாபுத்திரனைப் போலும் மாயையின்பாலன வாய உலகையும் சீவனையும் விசாரிப்பவராதலினாலும், வாதிப்பவராதலினாலும் ஏகான்மவாதிகளுக்கு மாயாவாதிகள் என்னும் மற்றோர் பெயர் காரணப் பெயராய்ப் போந்தது. இதற்குப் பிரமாணம் தஸாதஷாவிசாரயெசு என்றற்றொடக்கத்த பைங்கலோபநிடதச் சுருதியும் ஸஷாவிசாரயெதஸாசு என்னும் பஞ்சதசிச் சுலோகமுமேயாம். மாயாவாதம் என்னும் பெயர் ஏகான்மவாதப் பெயரினுஞ் வாய்ப் புடைத்தாகிய சிறந்த பெயராயிற்று.

மையுரையிற்சொல் மெய்ப்பிரமாணத்தையும் தூஷணங்களையும் விடுத்துச் சுருதி யுபப்பிருங்கணப் பிரமாணங்கொண்டு மீட்பாராக. அங்ஙனம் மீட்டற்குமுன், திருச்செங்கோட்டு விவேகதிவாகரன் பத்திரிகையில் விளம்பி௵ ஆனி௴ ௧௩ ஆந் தேதிக்குச் சரியாகிய ௧௮௯௮—ஆம் ஆண்டு ஜூலை௴ ௨௧-ஆந் தேதி தொடுத்து நாம் எழுதிய "மாயாவாதத்தைச் செயித்துயர்த்திய சைவசித்தாந்த வெற்றிக்கோடியை" யும், ௧௮௯௯௵ ஏப்பிரல் ௴ ௪-ஆந் தேதி தொடுத்து அப்பத்திரிகையிற் "சூதசங்கிதையிலே மாயாவாதியார் சாற்றிய சோரணையின் அறுவை நியாயமிறங்கி இட்டு உடைத்துப் பொய்க்குவிக்" என்னும் விஷயத்தையும் சந்நியாசியார் படித்துணர்ந்து சேரவேண்டும்.

(௫௭) பஞ்சான்மவாதிகள் முத்திஸ்தானம்.

நிர்க்குணோபாசகர்கள் (நிர்க்குணோபாசகர்கள்) இங்கே லயம் அடையற்பாலரென்றலைஷ்ணவர் நு.

[illegible]
[illegible]

"ஏகான்மவாதிகள் பிரதானமென்றக கடந்து புருஷதத்துவசித்தர் என அறியப்படுகின்றனர்" என்று மகோபப்பிருங்கணம் கூறுகின்றது.

(௫௮) அத்தியாசிரமிகள் முத்திஸ்தானம்.

அத்தியாசிரமிகளாகிய யோகிகட்கு முத்திக்கிடமாய ஸ்தானம் பிரமலோகம் எனப்படும் சிவலோகமாம். இந்தப் பிரமலோகசப்தம் சாந்தோக்கியத்து அ. ச. ௩-இற்றும், அ. ௧௫. ௧-இனும், பிருகதாரணியத்து சு. ௩. ௩௩-இனும், ௫. சு. ௧-இனும், அ. உ. ௧௫-இனும், முண்டகோபநிடதத்து ௩. உ. சு-இனும், பிரசினோபநிடதத்து ௧. ௧௬-இனும், ௫. ௫-இனும், சிவலோகத்தை உணர்த்தும் *சுவர்க்கலோகசப்தம அதர்வசிரசினும், பிருகதாரணியத்து சு. ச. அ-இனும், ஐதரேயோபநிடதத்து ச. சு-இனும், ௫. ச-இனும், கேநோபநிடதத்து ௩ எ-இனும, கடோபநிடதத்து ௧. ௧உ-இனும் பிரமதாமசப்தம் முண்டகோபநிடதத்து ௩. உ. ௧-இனும், ௩. உ. ச-இனுங் காணப்படுகின்றன.

வேதாந்த சூத்திரத்துக்கு ஆதாரமாய்நின்ற உபநிடதமனைத்தும் யோக பரியந்தம் பேசுமென்று வியாசமுனிவர் கூறியதாகக் காணப்படலானும்,

*சந்நியாசியாராற் றமது முற்காபுஸ்தகத்து ௨௫-ஆம் பக்கத்தில் எடுத்தாளப்பட்ட சுவர்க்கலோகம் சிவலோகத்தின்பாற்று.

மேலே குறிக்கப்பட்ட இடங்களிற் காணப்படும் பிரமலோகம் என்பதற்குப் "பிரமத்தைப் பார்ப்பது" என்று பொருள் கோடல் பொருந்தாகை அவ் வேதாந்த சூத்திரத்துக்கு மூலமாய் நில்லாத சர்வசாரமுதலிய மாயாவா தோபநிடதங்களும், கேரளசங்கரராற் பதினெட்டுத்தரம் படித்து அங்கமாக புகட்டப்பட்ட கட்டுச்சுலோகங்களும், அவராற் புதிதாகப் படைத்துப் புகட்டப்பட்ட பிரமகீதையும் பொருட்படுத்தப்படமாட்டாவாம்.

(௫௫) கேரளசங்கரர் சுருதியைத் திரிவுபடுத்தினமை.

ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி (பிருகதாரணியம். ௪. ௪. ௬)இற் காணப்படும் இச்சுருதியானது

ந தஸ்மாத் ப்ராணா உத்க்ராமந்தி|

"அவனை விடுத்துப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை" எனது மாத்தியந்தின சாகையுடையார் உணர்த்தியவாறு பொருட்படுத்தப்படுமாதலினால், வித்து வான் விஷயமாகாது அவித்துவான் விஷயமே கூறப்பட்ட பிருககாரணி யத்து ௫. ௨. ௧௧-இற்,

அத்ரைவ ஸமவநீயந்தே | (அத்திரைவசமவநீயந்தே)

என்று காணப்படுஞ் சுருதியைச் சங்கரர்

அத்ரைவ ஸமவலீயந்தே| (அத்திரைவசமவலீயந்தே)

என்று தமது ௪. ௨. ௧௫-ஆஞ் சூத்திரபாஷ்யத்தில் மாற்றிவைத்தமை முழு துந் தவறு. இது முக்காலுஞ் சத்தியமென்று சந்நியாசியார் யோசித்துப் படித்துணர்ந்து, ஏகான்மவாதிகளுக்கு இங்கு லயமாதற்கு இடம் கொடுக் குஞ் சுருதி முக்கிய உபநிடதங்களுள்ளும் பிரமசூத்திரத்துள்ளும் இல்லை யென்றே அறிந்துகொள்வாராக.

(௫௬) பிரமசூத்திரத்து முதற் சூத்திரப் பிரமம் சகுணப்பிரமம் என்பது.

வேதாந்த சூத்திரத்து முதற்கட் கூறப்பட்ட பிரமம் சிருஷ்டியாதி கிருத்தியங்கட்குக் காரணமாகக் கூறப்படலான், அந்தப் பிரமம் சந்நியாசி யார் கருத்துப் பிரகாரம் நிர்க்குணப் பிரமமாகாது சகுணப் பிரமமாய், முற்றினமையானும், அச்சகுணப்பிரமத்தை உபாசித்தலான் எய்தும் பயன் சாந்தோக்கியத்து இறுதியிற் பிரமலோக (சிவலோகப்) பிராப்தி கூறுகின்ற மந்திரத்தை ஆதாரமாகக்கொண்டு கிளர்ந்த

ஆநாவூதீஜ்ஞாக |

என்னும் பிரம சூத்திரத்து இறுதிச் சூத்திரத்தினலறியப்படுமாதலினலும், அப்பிரமலோகம் சிவசாரூப்பியமுற்றவர்க்கு எய்தும் என்பது பல சுருதிகளால்வலியுறுத்தப்படுமாதலினலும், நிர்க்குணப்பிரமநிலை முக்கிய வேதப்பிரதிபாதிதமாகிய வைதிக பாசுபதயோகப் பிரமத்தினும் தாழ்ந்த நிலைக்கண்ணதேயாம்.

(நள) உபநிஷதப் பிரமம் சகுணமென்பது.

ஸுஹுணா விவஸ்ழிதா |

"சர்வஞ்ஞதையுடைய பிரமத்தினேடு" என்று தைத்திரீயோபநிடதம் உ. க-இனும்,

ஆகாஸஶரீரம் ஸுஹு| (ஆகாசசரீரம் பிரம்ம)

என்று தைத்திரீயோபநிடதம் க. சு. உ. இற் கூற, கூர்மபுராணம் உத்தரபாகத்து நக-ஆம் அத்தியாயத்தில்

யஸ்யாஹாரோதெவீஶக்திராகாஶஸம்ஜ்ஞிதா|

என்று உபப்பிருங்கணஞ் செய்யுமாற்றன், ஆகாய பராசத்தியைச் சரீரமாகவுடையது பிரமம் என்றும், அங்ஙனம் சங்கரசங்கிதை தக்ஷகாண்டம் கஉ-ஆம் அத்தியாயத்து உகூ-ஆஞ சுலோகத்தில்,

ஜ்ஞாநமூர்த்திர்மஹாதேவஸ்ஸச்சிதாநந்தலக்ஷணஃ ஸுதஃ|
நாஸ்தித்ஸ்ய ஶரீரஞ்சாந்யா ஶக்திமவ்யயாம்|

"ஞானமூர்த்தியாகிய மகாதேவர் சச்சிதானந்தகுணமுடையர்; அவர்க்கு அவ்வியயமாகிய சத்தியைவிட்டுச் சரீரமில்லை" என்றும், பிரசினோபநிடதம் ௪. கo-இனும், முண்டகோபநிடதம் க. க. கூ-இனும், மைத்திராயணோபநிடதம் எ. க-இனும் சர்வஞ்ஞர் என்றும், சுவேதாசுவதரோபநிடதம் சு. அ-இற்

பராஸ்யஶக்திஃ |

"அவரது பராசத்தி" என்றும், கைலாசசங்கிதை அ. கக. கo-இல்

யஸ்யாஹாஸஃ பராஶக்திஶ்சாஷ்டா தேநாஹஸா |
நிஜ்ஜாணாஸ்ஸுதெணைவ நிஜ்ஜுஷ்ஜாஷிஷஶிவா |

வச்சிரதண்டம்.

"சிவபெருமானுக்குப் பராசத்தியார் பாவகம்பிரயம். மனோ பசுக்களுக்குரிய ஆமயமிலாமையால் (இன்றேல் தேயகுணமாதி விகாதி குணமின்மையால்) நிர்க்குணராயும், (பாசகலைகளின்மையால்) நிஷ்களராயும், (சர்வஞ்ஞாதி) குணங்களினுல் ஆவரிக்கப்படாச் சிவையாயுமுள்ளார்" என்றும்,

ஶக்தயோऽஸ்ய ஜகத்ஸர்வம் ஶக்திமாம்ஸ்து மஹேஶ்வர:,

"அவரது பிரபஞ்சமனைத்தும் சத்திகளாம் என்றும், சத்திமான் மகேசுவரன்" என்றும், பிருகதாரணியோபநிடதம் ச. ரு. கச-இல்

அவிநாஶீ வா அரே அயமாத்மா அநுச்சித்திதர்மா |

"இந்தப் பரமான்மா நாசமிலாததும் சேதிக்கப்படாததுமாகிய குணத்தை யுடையது" என்றும் காணப்படுகின்றது. சாந்தோக்கியோபநிடதத்து அஷ்டமப் பிரபாடகத்து க-ஆம் கண்டத்து ரு-ஆம் மந்திரத்தில்

ஏஷ ஆத்மாऽபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர்விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: |

"இந்தப் பரமான்மா பாவமிலாதவர் (சர்வஞ்ஞர்), ஜரைமிலாதவர், மரணமிலாதவர், சோகமிலாதவர், பசியிலாதவர், தாகமிலாதவர், சத்தியகாமர், சத்தியசங்கற்பர்" என்று கூற, சங்கரசங்கிதை உபதேசகாண்டத்துக் கூ0-ஆம அத்தியாயத்து சக-ஆம் சுலோகத்தினுல்

ஶ்ரூயந்தேऽபஹதபாப்மத்வாத்யஷ்டௌ ஶங்கரஸ்ய தே |

அபகதபாப்மத்துவாதிகள் (சர்வஞ்ஞாதிகள்) எண் குணங்கள் என அறியப்படுகின்றது. இன்னும் அளவிறந்த குணங்களோடு இயைந்த *சவிசேஷ சுருதிகள் அங்ஙனம் உண்மையானும், சர்வசாரமுதலிய மாயாவாதோபநிடதங்களல்லாத ஈசகேநாதி முக்கிய உபநிடதங்களிற் பிரதிபாதிக்கப்பட்ட பிரமம் சவிசேஷப் பிரமமாம் என்க.

(ரு அ) வேதாந்த சூத்திரங்கள் சகுணப்பிரமத்தின்பாலன என்பது.

தத்பரம் ப்ரஹ்மஸூத்ராணாம் தாத்பர்யம் ஸகுணே ஶிவே |

"பிரம சூத்திரம் எனப்படும் வேதாந்த சூத்திரங்களின் தாற்பரியம் சகுண சிவத்திலேயாம்" என்று தீக்ஷிதயோகியார் கூறியவாறு, பிரமமீமாஞ்சை க. உ. உ-ஆஞ் சூத்திரத்தில்

விவக்ஷிதகுணோபபத்தேஶ்ச |

"உரைக்கப்பட்ட (சத்திய சங்கற்பத்துவ சர்வகாமத்துவ) குணங்கள் பொருத்தமாதலினால்" என்றும், க. உ. கஉ-இல்

ஸாவிஶிஷ்டாஹியா நாதேவஶ |

"அவர் ஆனந்த விசிஷ்டகுணமுடையராகவே கூறப்படலானும்" என்றும் க. உ. கரு-இல்

*தந்ந்யாயஸாமாந்யாத் |

"(ஆனந்த குண விசிஷ்டமுடையராகக் கூறப்படும்) அந்த நியாயத்தினால் அவர் பிரமம்" என்றும், க. உ. கசு-இல்

அந்தர்யாம்யதிதைவாதிஷு ததர்மவ்யபதேஶாத் |

"தேவர்களினும் உலகமுதலியவைகளினும் அந்தரியாமியாய் இருப்பவர் அவரே; அவர் குணங்கள் கூறப்படலான்" என்றும், க. உ. உஉ-இல்,

அத்ருஶ்யத்வாதிகுணகோ தர்மோக்தேः |

"பிரத்தியக்ஷமாகாமை முதலிய குணங்களையுடையவர் (சிவபெருமான்); அவர் குணங்கள் கூறப்பட்டமையின்" என்றும், உ. க. ௩௬-இல்,

ஸர்வோபேதா ச தத்தர்ஶநாத் |

"சர்வகுணங்களும் அவர்க்கிசைதலானும்" என்றும், ௩. ௩. கக-இல்,

ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய |

"பிரதானப் பொருளாகிய பிரமத்துக்கு ஆனந்தாதி குணங்கள்" என்றும், இன்னும் அநேக சூத்திரங்கள் சவிசேஷப்பிரமத்தின் பாலனவாகச் சிவாகமத்துக்கு மாறுபடாது கூறப்பட்டவிடத்தும், போசனகாலத்தில் லவணம் புளி முதலியவற்றோடு கூடிய பதார்த்தச் சுவைகளின் நூனாதிக்கியம் பார்த்தறிய வல்லவராயிருந்தும், சந்நியாசியார் சுருதிகளும் இவற்றை ஆதாரமாகக்கொண்ட வேதாந்த சூத்திரமும் சவிசேஷப் பிரமத்தின்பாலன என்று அறியமாட்டாது போனமை ஆச்சரியந்தான். ஆகலின், சந்நியாசியார் "வேதாந்தமானது சங்கரனைச் சாக்ஷாத் நிர்விசேஷாத்துவய சொரூபமாகச் சொல்கின்றதென்றும், சைவாகமம் அங்ஙனம் சொல்லவில்லை" என்றும் எழுதியது தவறுண்டு போயிற்று. சந்நியாசியார் கருதிய வேதாந்தம் சர்வஞ்ஞர்முதலிய மாயாவாதோபநிடதங்களின் பாலனவாம். இந்த மாயா

*இந்தச சூத்திரம் தம கருத்துக்கிசைய வலிக்கப்படாதென்று கண்டுபோலும், அதனைத் தமது பாஷ்யத்தினின்று தொலைத்துவிட்டார் கேரளசங்கரர்.

வாத வேதாந்தம் ஈசகேநாதி உபநிடதங்களாற் கூறப்படவில்லை. இவ்விரு திறத்துஉபநிடதங்களும் வைஷ்ணவருடைய நாராயணம் சுபாலமுதலிய உபநிடதங்கள் போல வேறுபாடுடையனவாம்.

(௬௯) சர்வசாரோபநிடதாதிகளிற்றான் கடாகாசாதிப் பிரயோகம் உளதெனல்.

சான்டுவிச் (Sandwich), நீயூசிலாந்து (Newzealand) முதலிய தீவாந்தரங்களில் இருகாற் பசுக்களாகிய மனிதரைக் கொன்று பொசுக்கித் தின்னும் மனுஷர் உளர். மனுஷரைக் கொன்று தின்னும் வழக்கம் அத்தீவுகளிலே உளதாமாறு போல, புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே அங்ஙனம் கொன்று தின்னும் வழக்கமின்றே. அத்தீவுகளில் உள்ள அத்தீய வழக்கத்தைப் பரதகண்டத்திற் புகுத்துதல் முடியாத காரியமே. அங்ஙனம் ஒருவன் அத்துர்வழக்கத்தை ஏற்படுத்த முயல்வானேல், அவன் உடனே அரசினராற் சிரச்சேதம் பண்ணப்படுவானன்றே. சர்வசாரம், நிராலம்பம், தேஜோவிந்து, சாண்டில்லியமுதலிய உபநிடதங்களிலே சீவேசுவரைக் கற்பிதராய்க்கொண்டு சாதிக்குமாறு கூறப்பட்டிருக்கின்றது. ஈச, கேந, கட, பிரசின, முண்டக, மாண்டூக்கிய, தைத்திரீய, ஐதரேய, பிருகதாரணிய, சாந்தோக்கிய, சுவேதாசுவதர, காலாக்கினிருத்திர, பஸ்மஜாபால, பிருகஜ்ஜாபால, சரப, கௌஷீதகிப்பிராம்மண, கைவல்லிய, தைத்திரீய ஆரணியக, அதர்வசிரசு, அதர்வசிகை முதலிய உபநிடதங்கள் சீவேசுவரரைக் கற்பிதமென்று ஒரிடத்துங் கூறவில்லை. சாந்தோக்கியத்தில்

நஜீவொ ம்ரியதெ |

"சீவன் (பசு) அழிவதில்லை" என்றும், கடவல்லியினும், சுவேதாசுவதரத்தினும்

நிதொ்யாநித்யாநாஞ்சேதநசேதநாநாம் |

"நித்திய பதார்த்தங்களுள்ளே நித்தியரும், சேதனபதார்த்தங்களுளனே சேதனரும்" என்றும் காணப்படலான், பசுக்களும், பதியாகிய சிவபிரானும், பாசமும் நித்திய பதார்த்தங்கள் எனப்பெறப்பட்டன. பிரமந்தானே அஞ்ஞானத்தினாற் சீவான்மா ஆகின்றதெனக் கொள்ளின், அது மேலே எடுத்துரைக்கப்பட்ட அநேக சுருதிகளுக்கு விரோதமாம் என்ப.

ப்ரஹ்மண ஹ்வாஜ்ஞாநாஜ்ஜீவஹ்ாவக்ஷூணே நவஹுஹுருதிவிரோயாதி தொஷ வ்யவஸ்திதா |

என்றார் பிறரும்.

(௬0) உபநிஷதப்பிரமம் சகுணமென்பது.

உபநிடதங்களிலே நித்திய பதார்த்தம் எனப்படும் பாசமும், பசுவாகிய ஆன்மாவும், பதியாகிய சிவபெருமானும் இதிகாசபுராணங்களிற் கண்டவாறு பற்பல பரியாய நாமங்களினாற் கூறப்படுவதுண்டு.

௧. [illegible] |

"வித்தையையும் (பசுவையும்), அவித்தையையும் (பாசத்தையும்) ஆளும் ஈசுரர் (பதி) வேறு" என்றும்,

௨. [illegible] |

"பிரதானமாகிய க்ஷரத்தையும் (பாசத்தையும்), ஆன்மாவையும் (பசுவையும்), தேவர் (பதி) ஒருவர் ஆளுகின்றார்" என்றும,

௩. [illegible] |

ஆன்மாவையும் (பசுவையும்), செலுத்துபவரையும் (பதியையும்) வேறு என நினைந்து" என்றும்,

௪. [illegible] |

"பிரியா நண்பினோடு இரு அழகிய பட்சிகள் (பசுவும் பதியும்)" என்றும்,

௫. [illegible] |

"பரமும் (பதியும்), அபரமும் (பசுவும்) ஆகிய இரு பிரமங்களும் அறியற்பாலன" என்றும்,

௬. [illegible] |

"பிறவாதவராகிய அறிஞனும் அஞ்ஞனுமாம் இருவரும் முறையே ஈசனும் (பதியும்), அநீசனும் (பசுவுமாம்) என்றும்,

௭. [illegible] |

"அவர் (பதி) சனங்களுள்ளே (பசுக்களுள்ளே) பிரவேசித்து, அவைகளை ஆளுபவராயினர்" என்றும்,

௮. [illegible] |

"பிரதானம் (பாசம்), ஆன்மா (பசு) என்னும் இரண்டுக்கும் பதி சர்வஞ்ஞதாதி குணங்களையுடைய ஈசர்" என்றும்,

௯. [illegible] |

"இந்தப் பசுக்களைப் பசுக்களுக்குப பதியாயினுர் ஆளுகின்றர்" என்றும்,

௧0. ய ஆத்மநி திஷ்டந் |

"எவர் (பதி) ஆன்மாவில் (பசுவில்) நிலைத்து" என்றும் கூறுவனவாய சுருதிகளெல்லாம் ஆகமங்களைப் போலத் துவைதபரமாயிருக்கின்றனவே. சந்நியாசியார் மாயாவாத சர்வசாரமுதலிய உபநிடதங்களைப் படித்துப் பார்த்தபின், கற்பனை, அத்தியாசம், ஆரோபம், மித்தை, கடாகாசமடாகாசம், அநிர்வசநீயம், வந்தியாபுத்திரன், ககனாரவிந்தம், ஸ்தாணு புருஷன் முதலிய காணப்படாத இந்த உபநிடதங்களுள்ளே கடாகாச மடாகாசக் குறளிவித்தையை மாயாவாதோபநிடதங்களினின்று பெயர்த்துக் கொணர்ந்து புகட்டி இவர் மூலபுருஷர் பசுபதிகளைக் கொன்றற்போலவே, அச்சந்நியாசியாரும் அச்சிவேசுவரரைக் கொல்லப் பார்ப்பாரா? சிவேசுவரரைக் கற்பனை என்று சொல்லித் தவிர்க்கும் வழக்கம் வேதாந்த சூத்திரத்துக்கு ஆதாரமாய்நின்ற ஈசகேநாதி உபநிடதங்களில் இல்லை. அங்ஙனம் புகுத்தில், அது சிவத்துரோகமாய் முடியும். ஆகலின், "வைதிகன் என்றல் அத்துவிதிகள்; ஆகமிகள் என்றல் துவைதிகள் மறக்காதே! மறக்காதே!" என்று வேதாந்தமும் ஆகமாந்தமும் வேறென்ற எண்ணத்தோடு சந்நியாசியார் எழுதியது ஓர் போதும் பொருந்தாது! பொருந்தாது!! மேலே உதகரித்த துவைத வாக்கியங்கள் அடங்கிய சுருதிகள் காணப்படும் ஈசகேநாதி உபநிடதங்களெல்லாம் சிவாகமங்களைப் போலத் துவைதம் என்று கொண்டு, அவர் இனிமேல் அம்முக்கிய உபநிடதங்களைப் பரிசிக்காதிருப்பாராக. இங்ஙனம் வேதாந்த சூத்திரத்தில் துவைத வாக்கிய சூத்திரங்களே உள்ளன. அவை எவை என்று சந்நியாசியாரே ஆராய்ந்து அறிந்து கொள்வார். ஆகலின்,

பேதவ்யபதேசாச்சாந்ய: |

"அதிகர், (சிவேசுவரர்க்கு) பேதங் கூறப்படலான்" என்னும் ஓர் வேதாந்த சூத்திரத்தை மாத்திரம் உதகரித்திருக்கின்றேம்; கண்டுகொள்வாராக. இந்தத் துவிதவாக்கிய சூத்திரங்களுள்ளேனும் உபநிஷத்துக்களுள்ளேனும் கடாகாசமடாகாசத்தைக் கொணர்ந்து புகுத்திச் சிவேசுவரரைக் கற்பிதராக்கவொட்டேம்! சங்கரர் பேத சுருதிகளைத் தகர்த்து அபேதமாக்குதற்குக் கொணரும் குடங்களை உடைத்துவிட்டேம். அக்கடாகாயங்களை அந்தச் சர்வசாரமுதலிய மாயாவாதோபநிடத எல்லைக்குள்ளே வைத்துப் போலி மோக்ஷவிச்சையுடையார்க்கு விளையாட்டுக் காட்டுவாராக.

(௬௧) சம்ஸ்கிருத பாண்டித்தியமுடைய ஐரோப்பிய பண்டிதர்கள் சங்கரர் செய்த சூத்திரபாஷ்யம் தவறுண்டதெனல்.

இருக்குவேதத்தைச் சாயணாசாரியர் பாஷ்யத்தோடு திருத்தி இந்தியாவிலுள்ள சமஸ்தப பிராமண பண்டிதர்களெல்லாம் சரி என அங்கீகரிக்குமாறு அச்சிட்டுச் சமஸ்கிருத பாஷாப பாண்டித்தியம் மிகுதியும் நிரம்பப்பெற்ற மோக்ஷமூல (Max Muller) பண்டிதரும், திபோ (Thebaut) பண்டிதரும் பிரமசூத்திரங்களைச் சங்கரபாஷ்யத்தோடு ஒத்துப் பார்த்தபின் சூத்திரங்களுக்குச் சங்கரர் எழுதிய பாஷ்யம் பொருத்தமில்லை என்றும், இராமாநுஜர் எழுதியது ஒருபிரகாரம் பொருத்தமுடையதென்றும் கூறினமையின், இராமாநுஜபாஷ்யத்துக்கு மூலமாய்நின்ற ஸ்ரீநீலகண்டசிவாசாரியரருளிய பாஷ்யமே சத்தியார்த்தபாஷ்யமாம். இந்நாளையிலேதான் நீலகண்டபாஷ்யம் அச்சிடப்பட்டு ஜர்மன் பண்டிதர்கையில் எட்டியிருக்கின்றது. அதனைப் படித்துணர்ந்த அத்தேசத்துப் பண்டிதர்கள் சங்கரபாஷ்யத்தை இதுவரையும் சத்தியம் என அங்கீகரித்த இன்ன இன்ன பண்டிதர் நீலகண்டபாஷ்யத்தைப் பார்த்தார்கள் இல்லையே! என்று வருத்தமுறுகின்றார்கள் என ஆங்கிலேய சமாசாரபத்திரிகையினால் அறியப்படுகின்றது.

(சுஉ) ஸ்காந்தபுராணத்திற் சிவாகமாதி விஷயங்கள் புகழப்படுமாறு.

ஸ்ருதிஸார ஸமுத்தூதம் ஸுதாரஸம் ப்ரவக்ஷ்யாமி |

"வேதமாகிய கிரியின் மத்தியிலே அமிர்தம் பிரவாகிக்கின்றது," (அதிற் சிறிது எடுத்து இந்த ஸ்காந்தபுராணத்தைச் சொல்கின்றேன்) என்று ஸ்காந்தபுராணசங்கரசங்கிதையிலே கூறப்படலான், சங்கரசங்கிதையில் வேதத்திற் கூறப்பட்ட விஷயங்களே கூறப்பட்டன என்று பெறப்பட்டு, அச்சங்கரசங்கிதையிலே சிவாகம சிவாசாரிய திராவிடபாஷா விஷயங்கள் முதலிய புகழ்ந்துரைக்கப்பட்டவாய்க் காணப்படலான், அச்சிவாகம சிவாசாரிய விஷயமனைத்தும் வேதோக்தமாயன்றோ முடிந்தது. முடியவே, வேதப்பிரதிபாதிதமாகிய சிவாகமாதிதூஷணங்களைச் சந்நியாசியார் வரைந்து வேதநிந்தகருமாயினார்; அஃதன்றி வேதபாகியருமாயினார். ஆகமத்துக்கு வைஷ்ணவாகமந்தான் பொருளென்று சந்நியாசியார் கூறியவாறு கூறின், அது பொருந்தாது; வைஷ்ணவாகமப்பொருள்கள் அப்புராணத்திற் கூறப்படாமையின். அங்ஙனம் அவர் கூறியவாறு இலாகுளாகமமுமன்று, இலாகுளாகமவிஷயம் அப்புராணத்திற் காணப்படாமையின். இங்ஙனம் முன்பின் ஆலோசனையின்றி எழுதிச்சந்நியாசியார் பற்பல இடங்களில் அகப்பட்டுப் போயினார்.

(சுஈ) சிவாசாரியர்கள் தம்மொத்த வருணத்தாரோடு அயிலவேண்டும் எனல்.

ஶிவபக்தைஸ்ஸதாசாரைஶ் ஶுத்தஶைவதபோதநை꞉
ஸவர்ணைராதிஶைவஸ்து புஞ்ஜீதாந்நம் ஸஹாதிபி꞉|

“சிவபக்தர்களும், சதாசாரமுடையவர்களும், சுத்தசைவதபோதனர்களும், ஒத்த வருணத்தவருமாயுள்ளாரோடு ஆதிசைவர் எப்போதும் ஒரே பங்தியில் அன்னம் புசிக்க” என்று சகலாகமசாரசங்கிரகம் கூறுகின்றமையின், சிவாசாரியர்கள் மற்றைச்சிவதீக்ஷைபெறாத பிராமணர்களோடு கலவாது, தீக்ஷைபெற்ற தம்மவரோடேயிருந்து உண்ணல்வேண்டும் என்பது பெறப்படலான், ஆதிசைவர்களோடு ஒரே பங்தியில் இருந்து மற்றைப் பிராமணர் உண்ணப்படாதென்று சந்நியாசியார் இகழ்வுபோலத் தூஷித்துக் கூறினும், அது சாஸ்திரசம்மத மாகவே முடிந்தது.

(௬௪) சந்நியாசியார் பிராமணர்களைத் தூஷித்தமை.

பிராமணர்களை அங்கங்கே புகழ்ந்தும், சூத்திரர்களை அங்கங்கே இகழ்ந்தும் போந்த சந்நியாசியார் தமது முற்கரபுஸ்தகத்து ௬௨ ஆம் பக்கத்தில் அநாவசியகமாய்ப் பிராமணர்களைத் தூஷித்தார். இது இவர்க்கு இயற்கையேதான்.

(௬௫) தேவலகர்.

தேவலகன் என்னும் பதம் மனுஸ்மிருதி, ஸ்மிருதிமுக்தாபலம், சிவபுராணம், சிவாகமம் என்பவற்றிற் காணப்படுகின்றது. தேவலகன் என்பது தெய்வத்தைப் பூசிப்பவன் மேற்று.

தேவார்சநபரோ யஸ்து பரார்த்தம் வித்தகாங்க்ஷயா|
சதுர்வேதயுதோ விப்ரஸ்ஸ சண்டாளஸமோ பவேத்|

“எந்த விப்பிரன் தேவார்ச்சனை செய்பவனாய்ப் பொருளாசையினால் பரார்த்தபூசை புரிகின்றானோ, நான்கு வேதங்களை உணர்ந்த அவன் சண்டாளனுக்குச் சமமாவன்” என்றும்,

கர்மதேவலகா꞉ கேசித் கல்பதேவலகா꞉ பரே|
ஶுத்ததேவலகாஸ்த்வந்யே த்ரயோ தேவலகா꞉ ஸ்ம்ருதா꞉|

“அந்தத் தேவலகராவார் கர்மதேவலகர், கற்பதேவலகர்; சுத்ததேவலகர் என முத்திறப்படுவர்” என்றும்,

அர்த்தார்த்தீ காமநிர்தேஶீ யோ தேவம் பூஜயேத்ஸதா|
கர்ம தேவலகோ நாம ஸர்வ கர்ம பஹிஷ்க்ருத꞉|

“பொருளாசையுடையனுய்க் காலவரையறை செய்துகொண்டு எவன் தெய்

வங்கைப் பசிக்கின்றாரோ அவன் கர்மதேவலகன் எனப்பட்டுச் சர்வகர்மங்களினின்றும் நீக்கப்படுகின்றான்" என்றும்,

[illegible] |
[illegible] |

பாஞ்சராத்திரநெறிப்படி தீக்ஷையோடியைந்தவனாகிய அர்ச்சகன [illegible] அபயசித்தானேனும் கற்பதேவலகன் எனப்படுகின்றான்" என்றும்,

[illegible] |
[illegible] |

"(அவைதிக) ஆகமத்திற் கூறப்பட்ட நெறிப்படி உருத்திரனையும் காளியையும் பூசித்துச் சிவனஞ் செய்கின்றவன் சுத்ததேவலகன் எனப்பட்டுச் சர்வகர்மங்களினின்றும் நீக்கப்படுகின்றான்" என்றும் ஸ்மிருதி முக்தா பலத்திற் காணப்படுகின்றது. ஈண்டு முக்தாபலத்திற் குறிக்கப்பட்ட சுலோகங்களுள் ஒன்றேனும் ஆதிசைவரைக் குறித்திலது.

[illegible]
[illegible]|

"நியமமின்றி ஆன்மார்த்த பரார்த்த [illegible] தேவலகனாகான்" என்றும்,

[illegible]|

"மகா இருஷியாகிய சிவபெருமானால் அருளப்பட்ட ஆகமநெறிப்படி பூசிப்பவனுக்குத் தேவலகத்தும் எய்தாது" என்றும் மற்றோர் ஏகான்மவாத சிவானந்த யதீசுரர் கூறியிருத்தலான், காலவரையறையின்றிச் சர்வமானியங் கொண்டும், சிவாகமநெறிகொண்டும் பூசிக்கும் சிவத்துவிஜரைத் தேவலகத்துவம் பற்றாது.

ஈண்டு அவைதிக சாக்தாகம நெறிகொண்டு பூசிக்கப்படும் காளியோடு உருத்திரரும் காணப்படுதலின், இடமும் இனமும்பற்றி அவ்வுருத்திரர் அவைதிகாகம நெறிகொண்டு பூசிக்கப்படுபவராதல் பெறப்பட்டது.

மேலும்,

[illegible] |
[illegible]

"சிவதீக்ஷைசெய்யப்பட்ட விப்பிரன் பொருள் காரணமாக மூன்று வருஷம் பூசிப்பானுயின், அவன் தேவலகனுவான்" என்று சகலாகமசார [illegible] மும், அங்ஙனம்

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாமென்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே.

என்று திருமூலர் திருமந்திரமும் கூறுமாற்றானும், ஊணுப் பரார்த்தபூசை செய்பவனுசக் குறிக்கப்பட்டார் சிவதீக்ஷைபெற்ற விப்பிரனுகிய (ஆதிசைவனுகாத) மகாசைவப்பிராமண. ணம்பச் சகலாகம சாரசங்கிரகமும் திருமந்திரமும் ஆதிசைவனைத் தேவலகன் என்று கூறியவன்று.

வ்ருத்த்யர்த்தம் பூஜயேத்தேவம் லோகஸ்யஹிதகாரக꞉ |
ஷண்மாஸம் யோத்விஜோ லோகே தேவலகஸ்ஸ்ம்ருத꞉ |

"உலகத்துக்கு இதஞ் செய்பவனுய் விருத்திக்காக எந்தத் துவிஜன் ஆறு மாசம் பூசிக்கின்றனோ, அவன் தேவலகன் எனப்படுவான்" என்று சிவபுராணம் கூறுமாற்றானும தேவலகன் என்றது ஆதிசைவரைக் குறித்ததன்று.

அபிஷிக்தாஸ் சதுர்திக்ஷு ஸிவேந பரமாத்மநா |
த்ரிபுண்ட்ரம் ச ததா கார்யம் ஸ்நாநம் கார்யம் ஸதா ஸந்த்யா ஸுதைஸ்ஸ꞉ |
பஸ்மஸ்நாநம் ச கர்த்தவ்யம் காயத்ரீம் ச ததீயகாம் |

(சுதர்சனர் என்னும் சிவாசாரியருடைய குமாரராகிய நான்கு வடுக்களும்) பரமான்மாவாகிய சிவனுல் திக்குகளில் அபிஷேகிக்கப்பட்டார்கள்; அவர்கள் எக்காலமும் இனிமையோடு ஸ்நானஞ் செய்து, (விபூதிதரித்து) வர்த்துளமாகிய திலகம் இட்டு, சைவசந்தியாவந்தனம் செய்யற்பாலா; (இதற்குமுன்) அது சம்பந்தமாகிய காயத்திரியும் (வைதிகசந்தியாவந்தனமும் செயற்பாற்று).

தாந்யம் பலம் ச வஸ்த்ரம் ச க்ருதம் தைலம் ஸமஸ்தகம் |
தத்ஸர்வம் க்ராஹ்யம் யுஷ்மாபிர்ந தோஷாய பவேத்ததந்
ஸாதும் வாப்ய ஸாதும் வா பரித்யாஜ்யோ ந வை த்விஜ꞉ |

" தானியம், பழம், வஸ்திரம், நெய், எண்ணெய் என எதேது உண்டோ அதது எல்லாம் (சிவத்துவிஜராகிய) உம்மாற் கிரகிக்கற்பாலன; பின் அதனுற் றோஷமெய்தாது; நல்லனுயிருந்தாலும் தீயனுயிருந்தாலும்வடு (எனப்படுகின்ற சிவத்துவிஜனைக்) கைவிடற்க" என்று சிவன் திருவாக்காகச் சிவபுராணம் கூறுமாற்றானும், தேவலகத்துவம் ஆதிசைவர்க்கு எய்தாது, பின்

அந்த தீக்ஷைபெற்றவரும் பெறுதவருமாகிய விப்பிரரையும், பாஞ்சராத்திர ஆசாரியரையும்பற்றி நின்றது.

(௬௬) வைதிக சைவத்திற் கூறப்பட்ட சதாசிவர் மகேசுவரர் என்போர் வைதிகத்திற் கூறப்பட்ட மூலப்பிரகிருதிக்கு மேற்பட்டவர்.

சங்கியாசியாரால் ௬௫-ஆம் பக்கத்திலே கூறப்பட்ட பிரமா விஷ்ணு உருத்திரர் ஈசுவரர் சதாசிவர் என்னும் ஐவரும் மூலப் பிரகிருதிப்பாற்பட்டவர்கள்; வைதிகத்திற் சிறந்த வைதிகசைவத்திற் கூறப்பட்ட ஈசுரர் சதாசிவராயினோர் மூலப்பிரகிருதிக்கு மேற்பட்ட வித்தியாதத்துவ சிவதத்துவங்களின் பாற்பட்டவரேயாம்.

(௬௭) சிராத்தத்து ஸ்கந்தர் கணேசர்.

சிராத்தத்தில் விஷ்ணு வர்ணமில்லாமற் சிராத்தம் பண்ணப்படாதென்று வற்புறுத்தும் சங்கியாசியார்க்கு விஷ்ணுவின் மருகர்களாகிய கணபதி சுப்பிரமணியர் என்போரை வரித்தலில் எய்தும் பொறுமையேனோ? மாதுலராகிய விஷ்ணுவை வரித்தாற் குற்றமின்றோ? நன்று! நன்று!!

கணபதி சுப்பிரமணியர் என்னும் இருவரையும் "பிரம இந்திராதி தேவர்களாலும் பூசிக்கப்பட்டவர்களென்றும், ஆனந்த சொரூபிகளென்றும், பசிதாகமில்லாதவர்களென்றும், நித்தியதிருப்தர்களென்றும், தேவாதி தேவ மகாதேவரின் செல்வக் குமாரர்" என்றும் பிருதிபும் புகழும் சங்கியாசியார் கருத்தை ஆராயின், அது மாமியார் ஒருத்தி தனது வீட்டுக்கு வந்த மருமகனைக் குறித்துத்தன் மருமகன் சாப்பிடுவது மிகச் சிறிது என்று கூறுமைமையை நிகர்க்கும். அவள் அங்ஙனம் கூறினமை அரைப்படி அரிசி அன்னம் அயிலக்கூடிய மருகனை விசம்படி அரிசி சமைத்துத் திருப்திப்படுத்தி அவனைத் தன் வீட்டில் இருக்கவொட்டாது ஓட்டிவிடுதற்காம். விஷ்ணுவையே பெரிதும் புகழும் இயற்கை பூண்ட சங்கியாசியார் அவ்விஷ்ணுவைப் பொருட்படுத்தாது கணபதி சுப்பிரமணியரைச் செல்வக்குமாரர் என்றும், நித்தியதிருப்தர்களென்றும் புகழ்ந்தமை சுப்பிரமணியபக்தியில் மேம்பட்ட சிவதீக்ஷைபெற்ற சைவப்பிராமணர்கள் சிராத்தத்தில் சுப்பிரமணியரும் விநாயகரும் நித்தியதிருப்தர்களும் செல்வக்குமாரர்களுமாயிருத்தலான் அவர்களைச் சிராத்தத்தில் வரித்துச் சிரமப்படுத்துவது எற்றுக்கென்று அவ்விருவரையும் தவிர்த்து விஷ்ணுவையே வரிக்க நேர்ந்துவிடும், அதனால் தமது கருத்து முற்றிவிடும் என்றும் உள்ளே நினைந்து சங்கியாசியார் அங்ஙனம் எமக்கனர். ஈசுரர் சதாசிவர் என்போரை மூலப்பிரகிருதி மாயாசபளிதராகக் கற்பனையாக்கிக் கொள்ளும் சங்கியாசியார் கணபதி சுப்பிரமணியர்

என்போரைச் சற்பிதசகார் குமாரர்கள் என்று கொள்ளவரேயெனினும், இவர் அவ்விருவரையும் போற்றவந்தது வஞ்சகத்தினலன்றி வாஸ்தவத்தினலன்று. இலட்சுமியை மார்பிற்கொண்டமையால் விஷ்ணுவானவர், சங்கநிதி பதுமநிதிச் செல்வமாதுலரும், நித்தியதிருப்தருமாகமாட்டாரோ? இவரை இங்கே அவர் புகழாது விட்டகாரணம் யாதோ?

(௬௮) சிவபிரானினின்று யாரும் உதிக்கலாம் என்றமை.

ஆதிசைவர் சிவபிரான் முகத்தினின்று சுப்பிரமணியர் முதலாயினோர் போலச் சமமாக உதிக்கலாமோ என்று ஆக்ஷேபிக்கும் சந்நியாசியாரை ஜடரூப சப்தஜாலத்தையுடைய வேதம் பிரமாமுகத்தினின்று சேதனராகிய பிராமணர் பிராமணஸ்திரீகளோடு சமமாக உதிக்கலாமோ? என்னும் வினவைக் கடாவி அவர் கூற்றை அடக்குவாம்.

(௬௯) தீக்ஷிதயோகியாரது ஆனந்தலகரி முதலியவற்றிற் பிரக்ஷிப்தவாக்கியங்கள் எய்தினமை.

அப்பயதீக்ஷிதர் வைதிக சைவத்தின் பொருட்டு எழுதிவைத்த ஆனந்தலகரி, சிவாத்துவைதநிர்ணய முதலாகிய நூல்கள் பிரக்ஷிப்தவாக்கியங்களாற் கேடுற்றுச் சைவர்களாற் பரிசிக்கற்கு யோக்கியமதை இழந்து கிடக்கின்றன.

(௭௦) சந்நியாசியார் வித்தியாஸ்தானங்களென்று அங்கீகரித்த பிரமாணங்கள் வாயிலாகச் சிவாகமங்களும் சிவாசாரியர்களும் ஸ்தாபிக்கப்படல்.

இதிகாசபுராணங்களைச் சந்நியாசியார் உபப்பிருங்கணங்கள் என்றும், வித்தியாஸ்தானங்களுட்பட்டன என்றும் முற்கரபத்திரிகையின ௭௯-ஆம் பக்கத்திற் கூறுமாற்றால், இவர் புராணத்தை அங்கீகரித்தவராய்ப் பெறப்பட்டார். புராணத்தை அங்கீகரிக்கவே, அதிற் புகழ்ந்து கூறப்பட்டவைகளையும் அங்கீகரித்தவராயினர்.

ஸர்வஜ்ஞ: பரிபூர்ணஸ்ச ஸிவோஜ்ஞேய: ஸிவாகமே |

“சர்வஞ்ஞரும் பரிபூரணருமாகிய சிவபெருமான் சிவாகமத்தில் அறியற்பாலர்” என்று வாயுசங்கிதை உத்தரபாகத்து கஉ-ஆம் அத்தியாயத்து உக-ஆஞ் சுலோகத்தினும்,

ஸாங்க்யயோக பாஸுபதஜ்ஞாநாநி தத்வார்த்தவிச்ச காநிசித் |
ஸிவாகமஸ்ய ஸாஸ்த்ராணி தேஷாம் ஏகைகம் அர்த்தவிசேஷகம் ஸர்வம் |

"சாங்கிய யோகத்தில் (ஏகான்மவாதத்தில்) பிரசித்தமாயுள்ள தத்துவங்கள் *சிலவே என்றும், சிவசாஸ்திரங்களிற் (சிவாகமங்களிற்) பிரசித்தமாயுள்ளன மற்றைய முழுத் தத்துவங்களுமாம்" என்று வாயுசங்கிதை பூருவபாகத்து உ௫-ஆம் அத்தியாயத்திலும் கூறப்படலாலும்,

ஶிவம் ஶிவாக³மம் தி³வ்யம் ஸமிஜ்ஜயே ஶிவஸூனவே |
ஸாநுஶ்ரீஶைவஜ்ஞாநஸ்ய ஶிவஜ்ஞாநஸ்ய புஸ்தகம் |
[illegible] ஶைவாசார்யோ ஹஸ்தாப்⁴யாம் ஶிஷ்யாய மோக்ஷகம் |

[illegible]ாம் சிவத்தைப் போலச் சிவ்ய சிவாசமத்தையும் குருவானவர் (சிவாசாரியரானவர்) பூசிக்க, பின்னர் அச்சிவாசாரியர் சிஷ்யனுக்கு விண்ணப்பித்தார சிவஞானபுஸ்தகத்தை (சிவாகமத்தை) தம்மிரு கரங்களாலும் சிஷ்யனுக்குக் கொடுக்க" என்று வாயுசங்கிதை உத்தரபாகத்து கஎ-ஆம் அத்தியாயத்து கரு, கசு-ஆம் சுலோகங்களில் உணர்த்தப்படலாலும்,

ஶிவாக³மோக்தம் யஜ்ஜ்ஞாநம் தஜ்ஜ்ஞாநமிதி சோச்யதே |
ஶ்ரீகண்டே²ந ஶிவேநோக்தம் ஶிவாயை ச ஶிவாக³ம꞉ |

"சிவாகமத்தில் எந்த ஞானம் சொல்லப்பட்டதோ, அது ஈண்டு ஞானம் எனக் கூறப்படுகின்றது; ஸ்ரீகண்டசிவபிரானால் உமாதேவியார் பொருட்டும் சிவாகமம் கூறப்பட்டது" என்று வாயுசங்கிதை உத்தரபாகத்து அ-ஆம் அத்தியாயத்து ௩அ-ஆஞ் சுலோகத்திற் கூறப்படலானும், சிவாகமம் முக்கியப் பிரமாணமாமாறு தெளியப்படும். சிவாகமத்திற் கூறப்பட்ட ஞானமே ஞானம் என்று வியாசர் கூறுமாற்றால், "ஆகமத்துக்கு ஞானசாதாரணதர்மமாகிய வித்தியாத்துவமே (ஞானத்துவமே) கிடையாது" என்னும் கூற்று போலிப் பொய்யுரையாமென மறுக்கப்பட்டவாறாயிற்று.

தத꞉ ஸ்நாத꞉ ஶிவாசார்ய꞉ ஶிஷ்யேண ஸஹ நித்யக꞉ |
ப்ரவிஶ்ய மண்ட³லம் ஶம்போ⁴꞉ பூர்வவத்பூஜயேச்சிவம் |

"நைத்திகராகிய சிவாசாரியரானவர் (ஆதிசைவர்) ஸ்நானஞ் செய்துகொண்டு சிஷ்யனோடு கூடச் சிவபெருமானது மண்டலத்தைப் பிரவேசித்து, முன்போலப் பூசையில் ஒழுகுக" என்றும்,

க்ருத்வா ஶிவாநலே ஹோமம் ப்ராக்³வதே³வ யதா²விதி⁴ |

"முன்போலச் சிவாக்கினியில் ஹோமஞ் செயற்பாற்று" என்றும் வாயுசங்கிதையானது உத்தரபாகத்து கரு-ஆம் அத்தியாயத்திலும் பிறவிடங்க

---

* இதனாலும் வைதிகத்திற் சிறந்தது சிவாகமம் என்பது பெறப்படும்.

ளினும் சிவாசாரியரைப் புகழ்ந்து கூறலானும், சிவாசாரியராகிய ஆதிசைவர் திருநாமத்தை அப்பிரசித்த நாமமென்று சந்நியாசியார் இகழ்ந்து கூறினமை ஆராய்ச்சிக் குறைவினாலாம்.

வெதெஷுஶிவஶாஸ்த்ரெஷு யத்ர யத்ர ஷடக்ஷரஃ |

“ஷடக்ஷரமானது வேதத்திலேனும் சிவாகமத்திலேனும் எங்கெங்கே (உள்ளதோ)” என்று லிங்கபுராண பூருவபாகத்து ௮௫-ஆம அத்தியாயத்து ௩௫-ஆம் சுலோகத்தினும்,

கௌரவாதெவஸம்ஜ்ஞேஷா ஶிவாசார்யஸ்ய ஸுவ்ரத |

“கவுரமாயிருத்தலினற் சிவாசாரியர்க்கு (ஆதிசைவர்க்கு) குரு என்னும் இப் பெயர் எய்திற்று, மற்றோர் பிரகாரத்தாலன்று” என்று லிங்கபுராண உத்தரபாகத்து ௨0-ஆம் அத்தியாயத்து ௧௬-ஆம் சுலோகத்தினும், பிறவிடங்களினும் சிவாகமசிவாசாரிய விஷயம் உத்கிருஷ்டத்தோடு காணப்படுகின்றது.

வெதாகமபுராணாதி ஸர்வஶாஸ்த்ரார்த்தகொவிதஃ |

“வேதாகமபுராணாதி சர்வசாஸ்திரார்த்தங்களை அறிந்த தத்துவஞானர்” என்று கூறும் சிவபுராண கைலாசசங்கிதை எ-ஆம் அத்தியாயத்து ௩௩-ஆம் சுலோகத்திலே, சூதாசாரியர் வேதத்தோடு ஆகமத்தை இயைபுத்துக் கூறினமையைச் சந்நியாசியார் கண்டு தெளிந்து பின் சிவாகமதூஷணஞ் செய்யாதிருப்பாராக.

குரும் ஶிவமிவாப்யர்ச்ய வஸ்த்ரபூஷணாதிபிஸ்ததஃ |

“குருவைச் (சிவாசாரியரை) சிவனைப் போலக் கொண்டு வஸ்திரபூஷணாதி மிருதிகொண்டு அர்ச்சித்து” என்று அக்கினிபுராணத்து ௧௬-ஆய அத்தியாயத்திற் கூறப்படுகின்றது.

......................ஸ்ருஜ்ஜாமெவ ச நாவமௌ |
ஸாமவெதீ தயாயவ வெதீகாமிககாரணௌ |
விமலொ மகுடஸ்ஸூக்ஷ்மவாதுலொ விஜயொ ஜநௌ |
தீவ ஸக்ஷு ஸ்யெவாயம் வீரஸ்ரீகிரணாவிச |
அஜிதஶ்ச ஸஹஸ்ரஶ்ச ஶம்பவ நிஶ்வாஸௌ ததஃ |
ததா விஜயநிஶ்வாஸௌ நார ஸ்வாயம்பு வொவ்யயௌ |
அநலொ ரௌரவஶ்சந்த்ரஜ்ஞாநா பிம்ப உதீரிதஃ |
ப்ரொத்கீதொ லலிதஸ்ஸித்தஸ்ஸந்தாநநாமவாந் |
ஶர்வொக்த பாரமெஸ்வர ஸம்ஸிதஃ |

[illegible]

"சிவனுரது ஆயிரத்தெட்டுத் திருநாமங்கள் கூறப்பட்டவிடத்து, ஸ்காந்த புராணசங்கரசங்கிதையைச் சார்ந்த உபதேசகாண்டத்து அஉ-ஆம் அத்தியாயத்திலே "இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் (எனனும் நான்கு வேதங்களும்); காமிகம், காரணம், விமலம், மகுடம், வாதுளம், சிந்தியம், யோகஜம், தீப்தம், சூட்சுமம், வீரம், கிரணம், அஜிதம், சகச்சிரம், அம்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், அனலம், ரௌரவம், சந்திரஞானம், பிமபம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தரம், பாரமேசுவரம் என்னும் இருபத்தெட்டாகமங்களும்; இருநூற்றேழு உபாகமங்களும்; சைவம, பவிஷ்யத், மார்க்கண்டேயம், லிங்கம், ஸ்காந்தம், வராகம், வாமனம், மற்சம், கூர்மம், பிரமாண்டம், பிராம்மம், பாத்துமம், காருடம், வைஷ்ணவம், நாரதீயம், பாகவதம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம் என்னும் பதினெண புராணங்களும் கூறப்பட்டிருக்கும் கிரமத்தைச் சந்நியாசியார் நோக்குங்கால், நான்கு வேதங்களுக்குப் பின் இருபத்தெட்டுச் சிவாகமங்களின் பெயரும், உபாகமங்களும, அவற்றின் பின்னர்ப் பதினெண் புராணங்களின் பெயரும், உபபுராணங்களும் நிறுத்தப்பட்டிருத்தல் அறியவல்லுநராவர். இவற்றல் வேதங்களோடு சிவாகமங்கள் ஒருங்கு சமத்துவமாய்ப் பிரதிபாதிகசுப்பட்டமையையும், சிவாகமங்கள் புராணங்களிற் சிறந்து நின்றமையையுங் கண்டு சந்நியாசியார் சிவாகமதூஷணஞ் செய்யாதிருப்பாராக.

[illegible]

"வேதாகமபுராணங்களும் நாநாவகையாகிய சாஸ்திரங்களும்" என்று உபதேசகாண்டத்து சுக-ஆம் அத்தியாயத்தினும்,

[illegible]

"தமக்கு நன்மையை விரும்புவோர் வேதாகமங்களிற் கூறப்பட்ட விதிகொண்டு சிவாசாரியர் அநுக்கிரகத்துடன் உபதேசம் பெற்றுச் சிவபிரானை லிங்கத்திற் பூசிக்க" என்று அடு-ஆம் அத்தியாயத்தினும்,

குமாரதந்த்ரவசநாத் தேவாதேவமேவ பூஜயந் |

"குமாரதந்திர(ஆகம)பத்ததிப்பிரகாரம் தேவராகிய சுப்பிரமணியப்பெருமானை (பிரம விஷ்ணு இந்திரன் முதலிய) தேவர்கள் பூசித்தார்கள்" என்று தேவகாண்டத்து க-ஆம அத்தியாயத்தினும்,

ஸநகாதிமுநீந்த்ரேப்யஸ்ஸ்ரீ பதிபசுபாசலக்ஷிதம் |
ரஹஸ்யம் ஆகமாந்தாக்யம் ஸித்தாந்தம் கதயந்ஸ்தித: |

சிவபெருமான் சநகாதி முனீந்திரர்க்குப் பதிபசுபாசம் என்னும் திரிபதார்த்தங்களோடியைந்ததாயும் இரகசியமாயுமுள்ள ஆகமாந்தம் எனப்படுகின்ற சித்தாந்தத்தை உபதேசித்துக்கொண்டிருந்தார்" என்று சம்பவகாண்டத்து ந-ஆம் அத்தியாயத்து நிக-ஆம் சுலோகத்திற் காணபபடலானும் ஆகமம் பிரமாணமாமாறு நன்கு தெளியப்படும்.

(எக) சிவத்துவிஜர்களே லோககுருமார்.

ததஸ்த்வாமர்த்தகோளாக்யபுஷ்பசந்தாநகா த்விஜா: |
முகுந்தேசார்ச்சகாஸ்தஸ்ய பதிமத்யாகதா: ஸ்ம ||

"ஆமர்த்தகிரி, கோளகிரி, புஷ்பகிரி, சந்தானகிரி என்னும் வமிசத்தைச் சார்ந்தவர்களும் முகுந்தேசுவர லிங்கப்பெருமானை அர்ச்சிப்பவர்களுமாகிய துவிஜர்கள் பாதையிலுள்ள இடமாதலின் அங்கே வந்தார்கள்" என்றும்,

இதி தஸ்ய வச: ச்ருத்வா ப்ராஹ கஸ்சிச்சிவத்விஜ: |
சிவார்ச்சகோஹம் ஸர்வஸ்ய குருரித்யபிதீரித: |
சிவதர்மீதி மாமாஹு: ஸர்வேத்ர நிவாஸிந: |

"இவ்வாறு அவனது வசனத்தைக் கேட்டு ஓர் சிவத்துவிஜர் உரைத்தார்; எங்ஙனமெனின், (கேளாய் புலவனே!) நான் சிவார்ச்சகன், நான் எவருக்கும் குரு என்று சொல்லப்படுபவன், இங்குள்ள யாவரும் என்னைச் சிவதருமி என்று சொல்வார்கள்" என்றும் உபதேசகாண்டத்து சஙி-ஆம் அத்தியாயத்திற் கூறப்பட்டவாறு, அசு-ஆம் அத்தியாயமும் ஆமர்த்தனகிரி முதலிய ஆசாரியஸ்தானங்களைச் சிவாகமத்திற் கூறப்பட்டமைக்கு வேறுபடாது எடுத்துக் கூறி, ஆதிசைவர்களைச் சிவத்துவிஜர் எனவும், சிவார்ச்சகர் எனவும், சிவவிப்பிரர் எனவும், சிவதருமி எனவும், குரு எனவும் கூறுதல் காண்க.

ததாதிசைவா வக்த்ர சிவவிப்ராஸ் சிவத்விஜா: |
ஸம்ஹிதாத்ரயோபேதா நியோகாயதநேஷு ச |
தம் த்ருஷ்டா சிவதாம் ச்ரேஷ்ட: கும்பஸம்ஹார ஸஹஸ்ரக: |

ராஷ்ட்ரேகஸ்மிந் ஸ்திதஸ் ஸைவ ஸ்ஸர்வ பவித்ரஸ்த்ரோ |

அவ்வேலையிற் சிவப்பிரியராகிய ஓர் சிவவிப்பிரர் (சிவப்பிராமணர்) அங்கு வந்தார்; இவர் அங்குள்ள அபிர்லேதசுவரர் எனப் பெயரிய சிவலிங்கப்பெருமானை நித்தியும் பூசிக்கின்றவர், பின்னர் அச்சற்குருவாகிய அப்பிராமணரைப் பார்த்துத் தபசிகளிற் சிறந்த அவ்வகஸ்திய மகாமுனிவர் கூறியதாவது: (ஓ சிவப்பிராமணரே!) நீர் புஷ்பகிரிவம்சத்திற் பிறந்த மகிமைபொருந்திய லோககுரு அன்றோ" என்று கூறினராக, உபதேசகாண்டத்து ௩௰-ஆம் அத்தியாயத்திற் கூறப்படலான், அகஸ்திய முனிவராலே சிவத்துவிஜர்கள் லோககுரு என்னும் நாமத்தோடு பிரதிஷ்டை செய்யப்பட்டார் என்று காணப்படுகின்றது.

சைவாகமத்தினர், ஏகான்மவாதமதத்தினர், வைஷ்ணவமதத்தினர், மத்துவமதத்தினர் என்னும் நான்கு முக்கியமதத்தினருள்ளே ஏகான்மவாதத்துக்கு மூலகுருவாகிய கேரளசங்கரர் லோககுரு எனவும் ஜகத்குரு எனவும் படுதல் ஸ்மார்த்தப்பிராமணர்களுக்கு மாத்திரமேயாக, பரதகண்டத்துள்ள அளவிறந்த சிவாலயங்களில் உறைந்தருளியிருக்கின்ற சிவலிங்கப்பெருமானை அர்ச்சிக்கும் சிவத்துவிஜர் எனப்படும் ஆதிசைவரிடத்திருந்தே விபூதிப்பிரசாத முதலிய சிவப்பிரசாதங்களைப் பெருமரியாதையும் பிராமணர் முதலிய எவ்வருணத்தாரும் பெற்றமையானும் பெற்றுவருகின்றமையானும் பெறப்போகின்றமையானும், சந்நியாசிகளும் சமதா ஏகான்மவாதத்தார் நூலாயப்பட்டதாகச் சிவாகமம் நிந்தவிடத்தும் சிவதரிசனத்தின் பொருட்டு வைதிகர்களைச் சிவாலயத்துக்குச் செல்லுமாறு ஏவுகின்றமையானும் வேதம்போலச் சிவாகமம் பரமப்பிரமாணமாதலோடு), சிவாசாரியர்களும் லோககுருமாராகப் போற்றற்பாலர் என்பது வேதபுராணாகம சம்மதமாய் முற்றியதென்க. ஸ்மார்த்தர்களால் லோககுரு என்று போற்றப்படும் கேரளசங்கரருக்கும் குருவாயினார் சிவத்துவிஜராம்: சிவலிங்கப்பெருமானைத் தீண்டிப் பூசிக்கும் அதிகாரமும் உரிமையும் அவ்வாதிசைவர்க்கன்றி மற்றெவர்க்குமின்றாமாதலின். இவர்கள் செய்த புண்ணியமே புண்ணியம்!!!

வேதாந் விபூதிம் ருத்ராக்ஷம் ஆகமாந் நவிதாம்ஸ்ததா |
ததா சிவபுராணாநி சிவஸம்ப்ரதாயகாநாந் |
விநிந்தயதி யோ மூர்க்கஸ்ஸ ஸிவத்ரோஹீஸ பாபிந: |
விநிந்தகஸ்ய திக்ஸேவத்ஸ ஸ்ரவணத்வயா |
வீக்ஷணம் ஸ்பர்சநஸ்ய தேநஸம்பாஷணத்வயா |
தஸ்மாத்த்ரவணாஞ்ச ஸ்ரீஸிவத்ரோஹஸ்ய பாபிந: |

*வேதங்களையும் விபூதியையும் உருத்திராக்ஷத்தையும் சிவாகமங்களையும் சி

வபுராணங்களையும் சிவசம்பந்தமுள்ள பிறவற்றையும் நிந்திக்கின்ற அறிவிலியானவன் சிவத்துரோகி எனப்படுவன்; அங்ஙனம் நிந்திப்பவனுக்குச் சமீபத்திருத்தல், (போய்) அவனைப் பார்த்தல், அவனைத் தீண்டுதல், அவனோடு பேசுதல், அவன் சொல்வதைக் கேட்டல் என்னும் இவைகளும் சிவத்துரோகம் எனப்படும்.”

ப்ராயச்சித்தம் ச்ருதௌ த்ருஷ்டம் ஸ்ம்ருதாவபி மஹைநஸாம் |
சிவத்ரோஹஸ்ய பாபஸ்ய ந க்வாபி த்ருஷ்டா நிஷ்க்ருதிஃ |

“ஸ்ருதியினும் ஸ்மிருதியினும் மகாபாதகங்களுக்கெல்லாம் பிராயச்சித்தம் கூறப்படுகின்றது, ஆனால், சிவத்துரோக சம்பந்தமாகிய பாவத்துக்குப் பிராயச்சித்தம் எவ்விடத்தும் காணப்படவில்லை” என்று உபதேசகாண்டத்து ௫௮-ஆம் அத்தியாயம் கூறுமாறுபோல, சிவாகமசிவாசாரிய தூஷணஞ் செய்த சந்நியாசியார்க்குப் பிராயச்சித்தம் ஓர் நூலினுங் காணப்படவில்லை என்பது சித்தமாயிற்று.

சந்நியாசியாரும் நாமும் பொதுப் பிரமாணமெனக் கொண்ட புராணங்கள் வாயிலாகவே, வைதிகத்திலுஞ் சிறந்தது வைதிக சைவம் என்றும், புராணத்திலுஞ் சிறந்தது காமிகாதி சிவாகமமென்றும், இது முக்கியப் பிரமாணமென்றும் நிரூபணஞ் செய்துவிட்டோமாகையால், சந்நியாசியார் முதலிய மற்றை வைதிகர் யாவரும் வைத்தியநாத தீக்ஷிதம் எனப் பெயரிய ஸ்மிருதிமுக்தாபலத்து ஜாதிநிர்ணய சங்கிரகத்தில் “பிராம்மணுக” என்றற்றொடக்கத்தனவாகப் போந்த சுலோகங்கள் பதிதாகப் படைத்துச் செலுத்தப்பட்டனவாம் என்றுணர்ந்துகொள்வாராக. மேலே கண்டவாறு பல பிரமாணங் கொண்டு நிரூபித்து ஸ்தாபனஞ் செய்யப்பட்ட வைதிக சிவாகமத்திற் கூறப்பட்டவாறு ஆதிசைவர் உற்பத்தி முதலியவற்றை அறிந்து உய்வாராக.

இனி அச்சிவாகமத்திற் கூறப்பட்ட பிரகாரம் சூத்திரராயினோரெல்லாம் சிவாசாரியரிடத்திலே தீக்ஷை பெற்று அநுஷ்டான முதலிய செய்து உய்வாராக. சந்நியாசியார் முற்கர புஸ்தகத்திற் கூறிய குளறுபடை யொன்றையும் பொருட்படுத்தாதிருப்பாராக.

(௭௨) பஞ்சாக்கினி வித்தை.

துறக்கம், மேகமண்டலம் (பர்ச்சன்னியம்), பிருதிவி, தந்தை, தாய் என்னும் ஐந்திடமும் அக்கினியாகவும், அவ்விடங்களில் எய்திய ஆன்மா ஆகுதியாகவும் வைத்துத் தியானித்தலே பஞ்சாக்கினிவித்தை. இது பிருகதாரணியோபநிடதத்து ௮-ஆம் அத்தியாயத்து ௨-ஆம் பிராம்மணத்தி

னும், சாத்தோக்கியோபநிடதத்து கூ-ஆம் பிரபாடகத்து ௪, ௫, ௬, ௭, அ-ஆங்கண்டங்களிலும் காணப்படுகின்றது. இதனை அறியாது சந்நியாசியார் ஒருதொன்றெழுதி விழுப்பட்டார்.

(எக) அத்துவிதம்.

தர்க்கம் படித்தவா போலப்புறத்தே காட்டி விஷயமொன்றையும் அவ்வியாப்தி அதிவியாப்தியாதிதோஷமெய்தாவண்ணம் தர்க்கரீதியாய் எழுத அறியாது மேலே கூறியவாறு பற்பல இடங்களில் அகப்பட்டுப்போய், அத்துவிதம் சிரேஷ்டம் என்று கூறுகின்ற சந்நியாசியார் பாணினி அஷ்டாத்தியாயத்து உ.உ.சு-ஆம் நஞ் (நஞ்) சூத்திரவியாக்கியானத்தில் அந்நஞ்ஞுக்குள்ள ஆறு அர்த்தங்களுள்ளே இரண்டாவதாகிய அபாவார்த்தம் (அபாவாத்தம்) ஏகான்மவாதிகளாற் சர்வசார முதலிய ஏகான்மவாதோப நிடதங்களிற் கொள்ளப்படுவதேயாக ஈசகேநாதிமுகத்திய சைவோபநிடதங்களுள் ஒன்றாகிய முண்டகோபநிடதத்து ௩.௧.௩-இற் காணப்படும

நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி ।

"(வித்துவான்) மலநீங்கினவனுய் (சைவபாஷ்யத்து 'அநந்தர் தத்' அவனுக்குச்சாமியமுண்மையானும என்னும ௧. ௩. ௨௧-ஆஞ சூத்திரவிதிப்படி) பரமசாமியத்தை அடைகின்றான்" என்னும் சுருதிக்கிணங்க

நஞிவயுக்தமந்யஸத்ருசாதிகரணே ததாஹ்யர்த்தகதி: ।

என்று பரிபாஷேந்துசேகரத்திற கண்டவாறு முதலாவதாகிய சாதிருசிய (சாமிய) அர்த்தப் பொருளே சிவாகமாத்துவிதிகளாற் கொள்ளப்பட்டதென்றுணர்ந்து, சுருதிக்கிணங்க நிற்கும சிவாகமாத்துவித முத்தியை இனித் தூஷியாதிருப்பாராக. பதஞ்சலிமகாபாஷ்யத்தினும் இந்தச் சாதிருசியப் பொருளொன்றே எடுத்துரைக்கப்பட்டமை காண்க.

(எச) திராவிடபாஷாப் பிரபந்தங்கள் (தேவார திருவாசகங்கள்) சூத்திரர்க்குக் கீழ்ப்பட்ட சாதியார் படிக்கவேண்டும் என்று தூஷித்தமை ஒவ்வாதென்றல்.

ரூற்கரபுஸ்தகத்து கசரு-ஆம் பக்கத்திலே பிராகிருத பாஷாப்பிரபந் சூத்திரரினும் கீழ்ப்பட்டவர்கள் படிக்கவேண்டுமென்று சந்நியாசியார் கூறுகின்றார். பிராகிருத பாஷாப் பிரபந்தமென்று இவர் கொண்டன திருவாசகங்களேயாம். சூத்திரரினும் கீழாகிய பள்ளர் பறையர் முதலானோர்களே அத்தேவார திருவாசகங்களைப் படிக்க வேண்டும் என்

று தூஷிக்கும் இவர் அறிவிலே எந்தத் தூர்வியாதி பற்றிற்றோ [illegible]! இங்ஙனம் தேவார திருவாசகங்களைத் தூஷிக்குமாற்றால், அச்சமயாசாரியர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகசுவாமிகள் என்னும் நால்வரையன்றோ தூஷித்தார். இந்நால்வரையும் தூஷிக்குமாற்றால் இந்நால்வரோடு பெரியபுராணத்தினும், சிவபக்தவிலாசத்தினும், அகஸ்தியசங்கிதையினும், சிவரகசியத்தினும் புகழப்பட்ட மற்றைய அறுபது நாயன்மாரையுஞ் சேர்த்துத் தூஷித்தாராயிற்று. அங்ஙனமாயின், சிவானந்தலகரியிற் சங்கரர் கண்ணப்ப நாயனாரை

> 𑌮𑌾𑌰𑍍𑌗𑌾𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌪𑌾𑌦𑍁𑌕𑌾 𑌪𑌶𑍁𑌪𑌤𑍇𑌰𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌕𑍂𑌰𑍍𑌚𑌾𑌯𑌤𑍇
> 𑌗𑌣𑍍𑌡𑍂𑌷𑌾𑌮𑍍𑌬𑍁𑌨𑌿𑌷𑍇𑌚𑌨𑌂 𑌪𑍁𑌰𑌰𑌿𑌪𑍋𑌰𑍍𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑌾𑌯𑌤𑍇।
> 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑍍𑌭𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑌾𑌂𑌸𑌶𑍇𑌷𑌕𑌬𑌲𑌂 𑌨𑌵𑍍𑌯𑍋𑌪𑌹𑌾𑌰𑌾𑌯𑌤𑍇
> 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 𑌕𑌿𑌂 𑌨 𑌕𑌰𑍋𑌤𑍍𑌯𑌹𑍋 𑌵𑌨𑌚𑌰𑍋 𑌭𑌕𑍍𑌤𑌾𑌵𑌤𑌂𑌸𑌾𑌯𑌤𑍇।

‘(காளகஸ்) ஈசுவரப்பெருமானுடைய அங்கத்திற்கு வழிகளில் இட்டு வழக்கப்படுத்தப்பட்ட (தேய்ந்த பழைய) செருப்பானது குச்சப் புற்போலாகின்றது; அந்தத் திரிபுரசங்காரர்க்குக் கொப்பளித்த ஜலத்தில் நனைதலானது திவ்ய (கங்கையின்) அபிஷேகம் போலாகின்றது; சிறிது சாப்பிட்டு எஞ்சிய மாமிசசேஷமாகிய கபளமானது நைவேத்தியம் போலாகின்றது; (கண்ணப்பநாயனாராகிய) வேடர் பக்தன்போலாகின்றான்; பக்தியானது எதைத்தான் செய்கின்றிலது!'' என்று போற்றினமையானும், சிவபுஜங்கத்திற் சங்கரர் இயற்பகைநாயனாரையும், சிறுத்தொண்டநாயனாரையும், சண்டேசுவரநாயனாரையும் சூசிப்பித்து,

> 𑌨 𑌶𑌕𑍍𑌨𑍋𑌮𑌿 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌪𑌰𑌦𑍍𑌰𑍋𑌹𑌲𑍇𑌶𑌂
> 𑌕𑌥𑌂 𑌪𑍍𑌰𑍀𑌯𑌸𑍇 𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌜𑌾𑌨𑍇 𑌗𑌿𑌰𑍀𑌶।
> 𑌤𑌦𑌾 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍋𑌽𑌸𑌿 𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌕𑌾𑌨𑍍𑌤𑌾
> 𑌸𑍁𑌤𑌦𑍍𑌰𑍋𑌹𑌿𑌣𑍋 𑌵𑌾 𑌪𑌿𑌤𑍃𑌦𑍍𑌰𑍋𑌹𑌿𑌣𑍋 𑌵𑌾।

துதித்தலானும், சவுந்தரியலகரியில் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை

> 𑌤𑌵 𑌸𑍍𑌤𑌨𑍍𑌯𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌧𑌰𑌣𑌿𑌧𑌰𑌕𑌨𑍍𑌯𑍇 𑌹𑍃𑌦𑌯𑌤𑌃
> 𑌪𑌯𑌃𑌪𑌾𑌰𑌾𑌵𑌾𑌰𑌃 𑌪𑌰𑌿𑌵𑌹𑌤𑌿 𑌸𑌾𑌰𑌸𑍍𑌵𑌤𑌮𑌿𑌵।
> 𑌦𑌯𑌾𑌵𑌤𑍍𑌯𑌾 𑌦𑌤𑍍𑌤𑌂 𑌦𑍍𑌰𑌵𑌿𑌡𑌶𑌿𑌶𑍁𑌰𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌯 𑌤𑌵 𑌯𑌤𑍍
> 𑌕𑌵𑍀𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑍌𑌢𑌾𑌨𑌾𑌮𑌜𑌨𑌿 𑌕𑌮𑌨𑍀𑌯𑌃 𑌕𑌵𑌯𑌿𑌤𑌾।

“பூதரகுமாரியே! உனது நெஞ்சினின்று உண்டாகிய முலைப்பாற் கடலானது சாரசுவதத்தைப் பெருக்குகின்றதென நினைக்கின்றேன்; தாயே! தயாவதி

[illegible] (பாலரை) [illegible] கவிப்பிள்ளை முதிர்ந்த அறிஞர்க்கு விரும்பற்பாலராகிய [illegible] என்று துதிக்கின்றார். ஆகவே, நம் உமையம்மையாருடைய முலைப்பாலை உண்டவர் ஸ்ரீ ஞானசம்பந்தர் என்பதும், சுப்பிரமணியரன்றென்பதும் திராவிடசிசு (தமிழ்ப் பிள்ளை) என்றமையாற் பெறப்படும். முதிர்ந்த கவிஞர்க்கு விரும்பற்பாலதாய கவிசெய்வோராயினர் என்றமையாற் சரியை கிரியாயோக ஞானபாதங்களினிற்கும் அறிவினையுடைய பெரியோர் பிதுதிபும் மோக்ஷத்துக்குச் சாதனமாக விரும்பிக்கொண்ட மகாமந்திர திராவிடப் பிரபந்தமாகிய தேவாரம் என்னுந்தமிழ்வேதத்தை அருளினர் என்பதும் பெறப்படுகின்றது. படவே, இச்சந்நியாசியாருடைய மூலபுருடரானவர் கண்ணப்பநாயனர், இயற்பகைநாயனர், சிறுத்தொண்டநாயனர், சண்டேசுவரநாயனர், திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் என்னும் ஐவரைத் துதிக்குமாற்றால், அம்மூலபுருடர் எஞ்சிய நாயன்மார் ஐம்பத்தொன்பதின்மரையும் துதித்தவாறாயிற்று. இவ்வைவருள்ளே திருஞானசம்பந்தமூர்த்திநாயனரும் சண்டேசுவரநாயனரும் ஜாதியிற்பிராமணர். சிறுத்தொண்ட நாயனர் மாமாத்திரப் பிராமணர். இயற்பகைநாயனர் வைசியர். கண்ணப்பநாயனர் வேடர். இவ்வைவரையும் மற்றைய நாயன்மாரையும் இந்நூல்சந்நியாசியார் தூஷிக்கின்றமையால், அந்நாயன்மாரைத் துதித்த தமது மூலபுருடராகிய கேரளசங்கரரையன்றோ தூஷித்தார். ஆகலின், சங்கராசாரிய சந்நியாசியார் பொருட்படுத்தாவிடினும், மற்றை வைதிகரெல்லாம சங்கரரைப் பொருட்படுத்துதலான், அச்சங்கரராற் பொருட்படுத்தப்பட்ட நாயன்மாரையும் வைதிகப் பிராமணரெல்லாம் பொருட்படுத்தியவாறாயிற்று. தமிழ் அக்ஷரமேனும், தமிழ் இலக்கணமேனும் அறியாத சந்நியாசியார்மாத்திரம் திராவிடப்பிரபந்தங்களைப் பொருட்படுத்தாமையாற் போதருமேதம் வைதிகப்பிராமணர்க்கேனும், வைதிகசைவர்க்கேனும் இன்றாம். தேவாரதிருவாசகங்களாகிய தமிழ்ப்பிரபந்தங்களை அருளுமாறு திருஞானசம்பந்தமூர்த்திநாயனர், சுந்தரமூர்த்திநாயனர், மாணிக்கவாசகசுவாமிகள் என்போரைப் பிராமணராகத் திருவவதாரஞ்செய்யச் சிவபிரான் அருளினமை முதிர்ந்த தென்மொழி வடமொழி உணர்ச்சியில் வல்ல பிராமணர்களும், வடமொழியக்ஷரமறியாதவரும், சுருதிப்பொருள் அறியாதவருமாகிய பிராமணர்களும் மற்றைய வருணத்தாரும் அருள்வாக்காகிய தேவார திருவாசகங்களை ஓதி உய்யச் செய்யும் பொருட்டேயாம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் மாணிக்கவாசகசுவாமிகள் என்னும் இருவரும் புகழ்ந்து பேசப்பட்ட ஆலாசிய மான்மியத்தைச் சந்நியாசியார் ஓர் முறையேனும், ஓர் காலத்தேனும், ஓரிடத்தேனும் பார்த்திருப்பாராகத் தோற்றவில்லை. அங்ஙனம் பார்த்திருப்பாராயின் அவ்விருவருருளிய தமிழ் வேதப்பிரபந்தங்களையும் அவர்களையும் தூஷித்திருக்கமாட்டாரன்றே.

கூன்பாண்டியன்காலத்துச் சமணர்களாற் பாண்டிநாடு மூடுண்டு போ

னபோது, சமணர் என்னும் பிறரை நிர்மூலமாக்கிச் [illegible] தது சிவபெருமானருளிய இருக்குவேதமுமன்று; யசுர்வேதமும மவேதமுமன்று; அதர்வணவேதமுமன்று; உபநிஷத்துக்களுமன் வேதோபநிடத இதிகாசபுராண ஆகமங்களின் சாரமாய்ப் போ வேதமாகிய ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானருளிய தேவாரமேயாம். அவ்வ னம் சைவஸ்தாபனஞ் செய்யப்படாதிருக்குமேல் சந்நியாசியார் வைதிக சந் நியாசியாராகாது, மயிர்பறிப்புண்ட புண்களையும் இடுக்கிய கடுக்கும், உடுத் தபாயும், முக்குடைச்சின்னமும், மயிர்ப்பீலிக்கற்றையுமுடையராயன்றோ இப்போது இந்நாட்டில் விளங்குவார்! இங்ஙனம் தமிழ்நாடு முழுமைக்கும் கைம்மாறில்லாது செய்த உபகாரத்தைச் சிறிதும் பொருட்படுத்தாது நிந்தித் து நன்றிகொன்ற சந்நியாசியார் வகுப்பினர்காம சூதசங்கிதையினும் கூர் மபுராணத்தினும் கூறப்பட்டவாறு கவுதமர் கொடுத்த அன்னத்தை அவர் ஆச்சிரமத்திற் பன்னிருவருஷமிருந்து தின்றுவிட்டு உடனே அவர்மீதுகோ வதைப் பழியேற்றி நன்றிகொன்றவர்போலும்! வடமொழி வேதங்கள் மட் டுநிகர்க்கும, பிராமணரொழிந்த பிறர் அத்தியயனஞ் செய்யில் விழுப்பே றுமாதலின். தென்மொழி வேதங்கள் பொதுநிகர்க்கும், பிராமணர்மு தலிய எவர் ஓதினும் விழுப்பேறுமையின்.

தேவார திருவாசக தமிழ்ப்பிரபந்தங்கொண்டு பற்பல அற்புதங்கள் செய்து ஸ்ரீஞானசம்பந்தர் முதலாயினோர் சைவசமயஸ்தாபனஞ் செய்யா து விடுவாராயின், ஈசாவாசியம், முண்டகம், காலாக்கினிருத்திரம், கைவல்லி யம், அதர்வசிரசு, சுவேதாசுவதரம், தைத்திரீயம், பிருகதாரணியம், பஸ்ம ஜாபாலம், பிருகச்சாபால முதலிய உபநிடதங்களிற் பிரதிபாதிக்கப்பட்ட விபூதி எங்கே? வேதசிவாகம புராணேதிகாசங்கள் எங்கே? சிவமந்திரமாகி ய ஸ்ரீபஞ்சாக்ஷரம் எங்கே? உலகமெல்லாம் சமணரும் பவுத்தருமாய் அ டர்ந்துவிட, ஸ்ரீஞானசம்பந்தமூர்த்திநாயனார் ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள் என்னும இருவரும் அவ்விருதிறத்தார் மதங்களையும் நிர்மூலஞ் செய்யாது விடுவாராயின், இச்சந்நியாசியாரது அக்கினிகோத்திர விபூதியும் சூதசங்கி தையும் மற்றைய நூல்களும தலையெடுக்கமாட்டாவாய் நசுக்குண்டு போ யிருக்குமன்றோ.

பாலைநிலத்தை நெய்தனிலமாகச் செய்தது எந்த வேதம்? என்புக்குயிர் கொடுத்தது எந்த வேதம்? ஓடம் கரையேறச்செய்தது எந்தவேதம்? உல வாக்கிழி பெறச்செய்தது எந்த வேதம்? வைகையாற்றில் திருவேட்டையெதி ரேறும்படி செய்தது எந்த வேதம்? ஆண்பனைகளைப் பெண்பனையாக்கியது எந்த வேதம்? வேதங்களாற் பூசித்துத் திருக்காப்பிடப்பெற்ற வேதாரணி யத்துத் திருக்கதவு திறந்தும் அடைத்தும் நிகழச்செய்தது எந்தவேதம்? முத்துப் பல்லக்கு முத்துக்குடை முத்துச் சின்ன முதலிய பெறும்படி செய் தது எந்த வேதம்? விஷத்தினால் இறந்தவனை உயிர்ப்பித்தது எந்த வேதம்?

புத்தநந்தி தலையில் இடிவிழுந்திறக்கச்செய்தது எந்த வேதம்? கொல்லவந்த யானையை விடுத்தவர்மேற் பாய்ந்து அவரைக் கொல்லுமாறு செய்தது எந்த வேதம்? சுண்ணாம்பறையிலே ஏழு நாள்வரையும் பூட்டப்பட்டிருந்தவரை இடையூறு ஒன்றும் எய்தாவண்ணம் ஆனந்தவெள்ளத்தில் அமிழ்ந்தி நிற்கச்செய்தது எந்த வேதம்? கல்லைத் தெப்பமாக்கிக் கரையேறச்செய்தது எந்த வேதம்? முதலைவாய்ப் பிள்ளையை உயிர்ப்பித்தது எந்தவேதம்? பேச வல்ல புத்தர்களையெல்லாம் ஊமையாக்கி, ஊமையாயிருந்த பெண்ணொருத்தியை ஊமைதீர்த்துப் பேசவைத்தது எந்த வேதம்? வடமொழிவேதமா? தென்மொழிவேதமா? சந்நியாசியாரொழிந்து பிறரெல்லாம் தமிழ் வேதமென்றே ஒரேமுறையில் ஒரேதொனியோடு அங்கீகரிப்பார். ஷண்முனிவரும் விடுத்த சாபம் பொய்ப்பதொழியினன்றோ வேதங்களிற் போலச்சிவாகமங்களினும் தமிழ் வேதங்களினும் சந்நியாசியார்க்குப் பற்றுண்டாகும்!!!

அகஸ்தியசங்கிதையிற் கண்டவாறு திரிபுரமெரித்த விரிசடைப்பெருமானும், குன்றமெறிந்த குமரப்பெருமானும் சங்கத்திருந்து வடமொழியையா தென்மொழியையா வளர்த்தார்கள்? தென்மொழியாகிய தமிழையே வளர்த்தார்கள். சிவபெருமானுக்குத் தென்மொழியிலே மிகப் பிரீதியுண்டென்பது சேரமான்பெருமாணாயனாருக்கு மதிமலிபுரிசை என்னும் திருமுகப்பாசுரத்தை வடமொழியில் அருளாது தமிழில் அருளினமையானும், தருமிக்குப் பொற்கிழி கொடுக்குமாறு கொங்குதேர்வாழ்க்கை என்று தமிழ்ப் பத்தியத்தை அங்ஙனம் அருளினமையானும், எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் பொருளிலக்கணம் யாப்பிலக்கணம் அணியிலக்கணம் என்னும் ஐந்தனுள்ளே அகப்பொருளிலக்கணம் அகப்படாமைகண்டு அத்திருவாலவாய்ச் சோமசுந்தரப்பெருமான் அன்பினைந்திணை என்னும் அறுபது சூத்திரங்கள் அடங்கிய களவியல் எனப்படும் அகப்பொருளிலக்கணத்தை அருளினமையானும், ஊமைப்பிள்ளையாய்த் திருவவதாரஞ்செய்த குமாரக்கடவுளைக் கொண்டு நக்கீரர் அவ்வகப்பொருளுக்குச் செய்த வியாக்கியானத்தைச் சரி என்று அங்கீகாரஞ்செய்ய அநுக்கிரகித்தமையானும் தெளியப்படும்.

த்ராவிடாக்யா மயா ஸ்ருஷ்டா பாஷா ஶம்புதயயா ப்ரபோ: |

“பிரபுவாகிய சிவபெருமானுடைய அருளினாலே(தமிழ்ப்பாஷையாகிய) திராவிடபாஷையை உண்டாக்கினேன்” என்று அகஸ்திய மகாமுனிவர் கூறியதாகச் சங்கர சங்கிதை உபதேசகாண்டத்து எகூ-ஆம் அத்தியாயத்திற் காணப்படுதலின் சிவபெருமானே அகஸ்தியர்க்குத் தமிழை உபதேசித்தார் என்பது பெறப்படுகின்றது. படவே, தமிழ்ப்பாஷையைத் தூஷித்த சந்நியாசியார்; திராவிடபாஷாசாரியராகிய அகஸ்தியமகாமுனிவரையன்றோ தூ

டித்தார்; அகஸ்தியமகாமுனிவரைமாத்திரமா? அகஸ்தியர்க்குத் தமிழ் அறி வுறுத்திய சிவபெருமானையுந் தூஷித்தார். சிவபெருமானைமாத்திரமா? தமி ழிலே அநேக ஞானசாஸ்திரங்களை அருளிய ஞானிகளையெல்லாந் தூஷித் தோராகி, சிவபெருமான் அகஸ்தியர் முதலாயினோர் கோபத்துக்குச் சந்நி யாசியார் ஆளாயினரே!! அந்தோ! அந்தோ!!

(எரு) துவந்துவசமாசம்.

காசிகாவிருத்தியில்

விப்ரதிஷிஉ ஞா நயிகாரணவாவி |

என்னும் உ. ச. கரு-ஆஞ் சூத்திரத்தின் கீழ் (காமெ க்ரோயௌ) "காமமுங் குரோதமும்" என்னும் உதாரணமும், சித்தாந்த கௌமுதியில் (நநுகவா ஜஜெ ஜ) 'நந்தகமும் பாஞ்சஜன்யமும்' என்னும் உதாரணமும் அபே தார்த்தத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கின்றவென்று சாமானியவியாகரணி யிடத்திற் சந்நியாசியார் கற்றிருப்பாராயின் (வெஉஶிவாமெயொ) "வேத மும்சிவாகமமும்" என்பது விப்பிரதிஷித்தார்த்தத்தில் (விரோதார்த்தத் தில்) உபயோகிக்கப்பட்டிருக்கின்றதென்று தமது வெள்ளறிவைஎ0-ஆம் பக் கத்தில் மாட்டுவாரா? மாட்டார்! மாட்டார்! இவர்தாமா சமஸ்தசாஸ்திரஞ் ஞராகிய ஸ்ரீநீலகண்டசிவாசாரியசுவாமிகளைக் கண்டிக்கவல்லவர்!

"ஆதிசைவமெனப் பெயர்கொண்ட குலத்தில் உதித்தவனுடைய முகத் தைத் தகர்க்குங் கோல்" எனப் பொருட்படுகின்ற சந்நியாசியாரது "ஆதிசை வநாமக கவுலேயக முகபங்கமுற்கரம்" என்னும் பத்திரிகையிலே ஆக்ஷேபத் துக்கு இடமாய்ப் பிறர்க்கு ஐயத்தை விளக்கற்பாலனவாய்க்கிடந்த விஷயங் கட்கெல்லாம் எம் சிற்றறிவுக்கெட்டியவாறு கண்டனம் எழுதி மற்றை அப் பிராமாண்ணிய தூர்த்த தூஷணங்களைப் பொருட் படுத்தாதுவிடுத்தேம்.

வச்சிரதண்டம்

முற்றியது.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
க	கரு	வெடி	வெடு
சா	உஉ	புத்தகர்	புத்தர்
கூ	கூச	லிங்காங்கா	சிவலிங்கா
கக	௬0	விரோர	விரோ
கச	உ	மான	மானது
ருசா	௬0	லானும்	லான்
எஅ	உ	துதிக்கின்றார்	துதித்தலானும் அறி யற் பாலராவர்.
"	௯ச	திரி	திரு

எ-ஆம் பக்கத்து அ-ஆம் வரியிற் "பவுத்தாகமம்" என்பது முதல் "உரைத்திரு க்கலாமே" என்பதிறுதியாய மூன்று வரிகளின் தாற்பரியம் சூதர் பவுத்தாகமத் தைச் சித்தாந்தமாய்க் கொண்டு புராணப்பிராமாண்யஞ் சாதித்திலர் என்பதாம்.

தாந்திரிகதுண்ட கண்டன கண்டனம்.

(க) தாந்திரிகதுண்ட கண்டன கண்டனம்.

சந்நியாசியார் முற்கரபத்திரிகையைப் பிரயோகித்துவிட, அதற்கு மறுப்பாக நாம் எழுதிய "வச்சிரதண்டம்" வெளிப்படுதற்குமுன் "தாந்திரிக துண்ட கண்டனம்" என்னும் மற்றோர் பத்திரிகையைப் பின்னரும் பிரயோகித்துவிட்டார். ஆகலின், அதனைத் "தாந்திரிக துண்ட கண்டன கண்டனம்" என்னும் பத்திரிகைகொண்டு கண்டித்து விடுவாம்.

(உ) சிவாகமதூஷணத்துக்குச் சமாதானம்.

நீலகண்டசிவாசாரியர் கூறியவாறு, வேதத்தையும் சிவாகமத்தையும் ஒன்றென்று சொல்வது கடத்தையும் சராவத்தையும் ஒன்றென்றும், வாயையும் அபானத்துவாரத்தையும் ஒன்றென்றுஞ் சொல்வது போலாம் என்று பதினைந்து உவமைகள் எடுத்துத் தூஷித்துச் சந்நியாசியார் வாயில் வந்தன வந்தன சாற்றி வடமொழியில் இருபது பக்கம் வரைந்துள்ளார். இதற்குச் சமாதானம் வச்சிரதண்டத்து உக-ஆம் பிரிவிற் காண்க. அவர் வடமொழியில் எழுதியவைகளைத் தமிழில் எழுதியிருப்பாரேல், இவர் அறிவுமிகச் சுருக்குமந்தன் என்று எவர்க்கும் பொள்ளெனப் புலப்பட்டுப் போகும். இவர் விடுத்த அப்பிராமாண்ணிய வாய்மொழிகள் பொருட்படுத்தப்படுவன அன்று.

இனி அவர் தமிழில் எழுதியவைகளை ஆராய்குவம். "வேதாகமதாரதம்மியம்" என்று ஸ்ரீமத் சத்தியோசாதசிவாசாரியரவர்கள் எழுதினமையால் வேதம் (தரம்) நிகிருஷ்டம் என்றும், ஆகமம் (தமம்) உற்கிருஷ்டம் என்றும் சந்நியாசியார் பொருள்கொள்ளக்கிடக்கின்றதென்கின்றார். அங்ஙனம் கூறிய சந்நியாசியார்க்கு எதுவரையில் வேதமும் சிவாகமமும் சமப்பட்டு நின்றன என்றும், எதுவரையில் அவை தரமும் தமமுமாய் நின்றன என்றும் முதற்கண்ணே ஆராய்ந்து காட்டுதும்.

(ங) ஸ்ரீ நீலகண்டசிவாசாரியர் கூறியவாறு வேதமும் சிவாகமமும் எதுவரையிற் சமமியமுற்றன என்பது.

க. "பிரஞ்ஞானம் பிரமம்" என் ஐதரேயமுதலிய உபநிடதங்களிற் பிரம சப்தம் காணப்படுமாறு போல

[illegible] |
[illegible] ||

"சச்சிதானந்த ரூபியாய், சேதனசேதனப் பிரபஞ்சத்துக்கு வேறாய், வியாபகராயுள்ள சிவபெருமான் பிரமசப்தத்தினாற் கூறப்படுகின்றார்" என்று அஜிதாகமத்திலும் மற்றைய ஆகமங்களிலும் காணப்படலாலும்;

உ. சத்தியோஜாதவாமதேவ அகோர தற்புருஷ ஈசானமென்னும் பஞ்சப் பிரமமந்திரங்கள் தைத்திரீய ஆரணியகத்து கO. கஎ. நரு, நசு நஎ ந நசு-ஆம் மந்திரங்களிற் காணப்படுமாறு போல,

[illegible] |
[illegible]

என்று வாதுளாகமத்துப் பிரமபேதத்திலும்,

ந. பிரணவம் ஓம் என்பன சாந்தோக்கியம் க. ரு, க.-ரு-இலும், சுவேதாசுவதரம் க. கந, கச-இனும், பிருகதாரணியத்து முதற்கண்ணும், மற்றைய உபநிடதங்களினும் காணப்படுமாறு போல,

[illegible] |
[illegible] ||

என்று வாதுளாதி ஆகமங்களிலும் காணப்படலாலும்,

ச. [illegible] |

இருஸ்வ தீர்க்கப் புலுதப் (பிராசாதம்), அதர்வசிகை முதலியவற்றிற் காணப்படுமாறு போல,

பிராசாத பேதங்கள் முழுமையும் வாதுளசுத்தாக்கியை முதலிய ஆகமங்களிற் காணப்படலாலும்,

ரு. பதி என்பது முண்டகம ௩. உ, ரு-இலும் பிறவிடங்களிலும் [illegible] யின் பரியாய மொழிகளாகிய [illegible] பிருகதாரணியம் [illegible], சுவேதாசுவதரம் சு. எ-இனும், ஈசானர்-கடவல்லி சு. [illegible] கஉ-இனும், சிவ:- மாண்டூக்கியம் எ, கஉ-இனும், சத்து:-சாந்தோக்கியம சு. உ. க-இனும், ஞன்:-சுவேதாசுவதரம க. சு-இனும்,

பசு என்பது அதர்வசிகையிலும், [illegible]

தாசுவதரம் க. கூ-இனும், ஆன்மா:-சுவேதாசுவதரம் க. கூ-இனும், சத்தியம்:-பிருகதாரணியம் ச. க. உ0-இனும், சம்பிரசாதன்:-சாந்தோக்கியம் அ ச-இனும், பிறவிடங்களினுங் காணப்படுமாறு போல,

வாஸ0 வஸஂஸேவதி ஜெ-ஹ்யஜி்ரவஷாகஸ-ஃ) தி்ருதிணா-ஃயசு |

என்று ஞானசித்தியாகமத்தினுங் காணபபடலானும்,

சு. (உத்தூளனதிரிபுண்டர)பஸ்மம்:- ஈசாவாசியம் கஎ-இனும், இதன் பரியாயமாகிய பூதி:- தைத் க. கக. கூ-இனும், விபூதி பசிதம் பஸ்மம் க்ஷாரம் இரக்ஷை என்னும் விபூதியின் நாமங்களும் பிறவும பிருகச்சாபாலத்தினும, காலாக்கினிருத்திராதி உபநிடதங்களினுங் காணப்படுமாறு போல, சுவா யம்புவம், சிந்தியவிசுவம், மதங்கமுதலிய ஆகமங்களிற் காணபபடுகின்றமை யா,

எ. உருத்திராக்ஷமகிமை உருததிராக்ஷஜாபாலோபநிடதத்திற் கா ணப்படுமாறு போல, வாதுளம் காலோத்தரமுதலிய ஆகமங்களிற் காணப படலானும்,

அ. ஶிவஃூ0ஹ ஜி்ருஸாஜ்யஸோஹஸஹ்ருஷ-ஃயெசு |

"சிவலிங்கத்தைத் திரிசந்தியினும் தினந்தோறும் அர்ச்சிக்க" என்று பஸ்ம ஜாபாலத்தினும்,

ஶிவஃூ0ஹாய நமஃ |

என்று தைத்திரிய ஆரணியகம க0. கஅ. கூச-இனும காணபபடுமாறு போல, அம்சுமான், காலோத்தராதிகளில் லிங்கலக்ஷணம் லிங்காராதன முத லியன விரித்துக் கூறப்படலானும்,

கூ. அகாரஂ ப்ரஹ்மாணஂநாபௌ | உகாரஂ விஷ்ணுஂஹ்ருதயெ | மகா ரஂ ருத்ரஂ ப்ரூமத்யெ | ஓங்காரஂ ஸர்வேஶ்வரஂ த்வாதஶாந்தெ |

"அகார வாச்சியராகிய பிரமனை நாபியினும், உகாரவாச்சியராகிய விஷ்ணு வை இருதயத்தினும், மகாரவாச்சியராகிய உருத்திரரைப் புருவமத்தியினும், ஓங்காரவாச்சியராகிய சர்வேசுவரரைத் துவாதசாந்தத்தினும் (தியானிக்க)" என்று திருசிம்மதாபினியுபநிடதம் கூறியவாறு,

[illegible] |

என்று சிவாகமமும் கூறுதலானும்,

க0. [illegible]

"பிரமலோகத்தை அடைகின்றான், மீளத் திரும்புவானல்லன்" என்று சாந்தோக்கியத்து அ. கரு. க-ஆம் மந்திரம் கூறிய பொருளை ஸ்ரீபாதராயண முனிவர்

அநாவ்ருத்தி: ஶப்தாத் ।

"(பிரமலோகத்தினின்று) திரும்பிவருதல் இன்றெனச் சுருதி கூறலின்" என்று வேதாந்த சூத்திரத்திற் (ச. ச. உஉ) கூறலானும், அங்ஙனம் இருபத்தெட்டு ஆகமங்களுள் ஒன்றாகிய சந்தான சர்வோத்தமாகமத்தைச் சார்ந்த சிவதருமோத்தரம்

ஸ்தாநஞ்சோமாபதேராத்யம் ஸூர்யகோடிஸமப்ரபம் ।
யேஸம்ப்ராப்தா: பரம் ஸ்தாநம் ஜ்ஞாநயோகரதா நரா: ।
நதேஷாம் புநராவ்ருத்திர்கோரஸம்ஸாரமண்டலே ।

"உமாபதியாருடைய முதலாவதாய ஸ்தானம் கோடிசூரியப்பிரகாசமுடையது; ஞானயோகத்தில் விருப்புடையர்களாய் எந்த மனிதர்கள் அந்த பரமஸ்தானத்தை அடைகின்றார்களோ, அவர்களுக்குக் கோரமாகிய சம்சார மண்டலத்திலே "மீளத்திரும்புதல் இல்லை" என்று கோமாத்திநிலைகப்பிரக்கியானத்திலே பிரமலோகமாகிய சிவலோகத்தை இச்சுருதி சூத்திரங்களுக்கு இசைந்து கூறலானும் வேதமும் சிவாகமமும் பொருளின்கண் பேதமிலவென்று கூறப்பட்டது.

(ஙு) வேதமும் ஆகமமும் தாரும் தமமுமாக நிற்குமாறு

க. யோகாந்தம் வேதஶிரஸோ வதந்தி ஶ்ருதிரீரிதா ।

யோகபரியந்தமே வேதசிரசுகள் கூறுமென்று ஸ்மிருதி கூறுகின்றமையால ஞானபாதம் சிவாகமத்தினுற் கூறக்கிடந்தது.

உ. சரியாதிநான்கு பாதங்களுள்ளே யோகத்தை உபநிடதங்கள் கூறி அந்த யோகத்துக்குப் பயன் பிரமலோகம் (சிவலோகம்) என்று கூறலான், ஞானபாதம் சிவாகமத்தினுற் கூறக்கிடந்தது.

ங. சிரவண மனன நிதித்தியாசன சமாதி என்னும நான்கனுள்ளே பிருகதாரணியோபநிடதம் நிதித்தியாசனவரையில மாத்திரம் உரைத்தலானமையால், சமாதி சிவாகமத்தினுற் கூறக்கிடந்தது.

ச. உபநிடதங்களுள்ளே சிறந்ததெனப்படும் மாண்டூக்கியோபநிடதம் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்னும் மூன்றுக்கும் மேலாகச் சிவபிரானை நான்காவதாகிய துரியநிலைக்கண்ணே வைத்துரைத்தலான், துரியாதீதம் சிவாகமத்தினுற் கூறக்கிடந்தது.

[illegible] மயான், அரியசிலக்குமேலுள்ள அதிகாரவர்க் [illegible] அவாகமத்திளுற் கூறக்கிடந்தது.

ரு. மஸாஉபஸ்மேத ஸவாந்நாமோந்ஷ்மஸ்ய ஸணோ விபஸ்சிதா |

"அவன் சர்வஞ்ஞதையுடைய பிரமத்தின் ஆனந்தத்தோடு வேட்ட போக மனைத்தையும் அய்க்கின்றான்" என்று தைததிரீயம உ. க-இனைம்

ஐக்ஷந் க்ரீடந்ரமமாணஃ ஸ்த்ரீபிர்வா யாநைர்வா ஜ்ஞாதிபிர்வா |

"பெண்களோடாயினும், யானங்களோடாயினும், ஞாதிகளோடாயினும் நகைத்துக் கிரீடித்து ரமித்துச் சரிக்கின்றான்" என்று சாந்தோக்கியோப நிடதத்து அ. கஉ. ங-இனும்,

தேஷாம் ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி |

"அவர்களுக்கு எல்லா உலகங்களினும் சுவதந்திரமுண்டு" என்று சாந்தோக் கியம் அ. ௭. ங-இனுமாகப் பிரமானந்தத்தோடு வேட்ட போகங்களை எய் துமென்று சிவசாரூப்பியம் எய்தினோர்க்குக் கூறுமப்பன வைதிக பாசுபத யோகபாத முக்திசோபானங்களும் கூறுமாற்றானும் ஞானபாதம் சிவாக மத்திளுற் கூறக்கிடந்தது.

எ. வேதஸாரமிதம் தந்த்ரம் |

"இந்த ஆகமம் வேதசாரம்" என்றும்

ஸித்தாந்தோ வேதஸாரத்வாத் |

"சித்தாந்தம் (ஆகமாந்தம்) வேதசாரமாயிருத்தலின்" என்றும் உபபிருங் கணங்கள் கூறுகின்றமையானும் 'ஓருமவேதாந்தமென்றுச்சியிற் பழுதத சாரங்கொண்ட சைவசித்தாந்தம்' என்று குமரகுருபரசுவாமிகளும், 'வேதாந் தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம்' என்று உமாபதிசிவாசாரியசுவாமிகளும் கூறுகின்றமையானும், வேதம் தாமும் ஆகமம் தாமுமாகக் கூறப்பட்டன வாம் என்று உண்மைகடைப்பிடிக்க.

(௪) சிவாகமம் சுருதிமுதலியவற்றாற் போற்றப்படுதல்.

வச்சிரதண்டத்து ௯௬; உக, ங-ஆம் பிரிவுகளிற் கூறப்பட்டவாறு சி வாகமம் சுருதி ஸ்மிருதி புராணங்களாற் இந்தவிடத்தும் சங்கியாசி யார் தமது கண்டனத்து ௬௧-ஆம் பக்கத்தில் ஆகமமானது சுருதி ஸ்மிருதி இதிகாசபுராணங்களால் விலக்கித் தள்ளப்பட்டதென்று வழுஉபபட எழுதி இட்டுண்டுபோயினர். சிவாகமம் பிராமணர்களாற் கிரகிக்கப்படாததா யும் கேவலம் பசுப் பிராயர்களாற் கிரகிக்கப்பட்டதாயுமுள்ளதென்று அவர்

க. [illegible] பிரமாணங்களாலும் [illegible] சாரியையும் [illegible] டப்பிராயர்கள் என்று [illegible] துக்கும் ஆளாயினர்.

(ரு) சந்தியாசியார் சிவாகமத்தைச் சகலப் பிராமாணிகம் என்றமை.

"பாலர்களுக்குந் தெரியக்கூடிய முன்பின் விரோதங்களை இவன் அறிய வில்லை" என்று தமது கண்டனபுஸ்தகத்து உ௲-ஆம் பக்கத்தில் சிந்தித்த சந்நியாசியார் "பிரமாணிகர்களாற் றிரஸ்கரிக்கப்படாததாயும் கேவலம் புசுப்பிராயர்களாற் றிரஸ்கரிக்கப்பட்டதாயுமுள்ளது சிவாகமம் என்று உக-ஆம் பக்கத்தில் எழுதிவிட்டு, அவர் பின்னர் உ௫-ஆம் பக்கத்திற் "சகலப் பிராமாணிகர்களாலும் அங்கீகரிக்கப்பட்ட சைவாகமம்" என்று தாம் எடுத்த விஷயத்துக்கு முன்னும் பின்னும் முரணுற வுரைந்து தாமே சிறு பாலர்களாலும் அறியக்கூடியவாறு தடுமாறிப்போயினர்.

(சு) மெய்யானது பொய்யினால் மறைக்கப்படமாட்டாது.

மெய்யை மறைத்துப் பொய்யை வேண்டுமென்று வலிந்து ஈர்த்துப் பேசிவருகின்றவன் ஒவ்வோர்போது அபுத்திபூர்வமாக மெய்யையே வெளிப்படுத்திவிடுகின்றான்; அதுபோல, ஆகமம் வித்தியாரணியர் முதலிய சமஸ்தப் பிராமாணிகர்களாலும் அங்கீகரிக்கப்பட்டதென்னும் உண்மையை மறைத்து அதனை யாண்டும் தூஷிக்கத் தலைப்பட்ட சந்நியாசியார் தமது வாயினாலே சிவாகமம் பிராமாணிகர் ஒருவராலன்று, மற்றைச் சகலப் பிராமாணிகர்களாலுமே அங்கீகரிக்கப்பட்டது என்று மெய்மையே வுரைந்து "நானும் அறியேன் அவளும் பொய்சொல்லாள்" என்ற முதுமொழிப்படி நமது கோட்பாட்டை மிகுதியும் பலப்படுத்திவிட்ட

(எ) இதிகாசபுராணங்களினுஞ் சிறந்து சுருதிகட்குப் பொருள் செய்ய வல்லன சிவாகமங்கள்.

வச்சிரதண்டத்து ௱௦, சகூ-ஆம் பிரிவுகளிற் கூறப்பட்டவாறு இதிகாசபுராணங்களினும் விரிவுறப் பொருட்படுத்தவல்லது சிவாகமம் என்று பெறப்படலான்

வி஭ெஹத்ருஜு ரூ டா செ தொ ஊ யொ வெ ஊ ஷி ஷ்யதி |

"அற்பகேள்வியினால் என்னை இவன் கொன்றுவிடுவான் என்று வேதம் பயப்படுகின்றது" என்னும் பிரமாணத்தினாற் சிவாகமத்தை அறியாதவன் வேதத்தைக் கொன்றவனேயாவன் என்பது நன்கு துணியப்பட்டவாறுமிற்

து, ஆகமங்களைப் பிராமணிகங்களாய பாதராயணாசாரியர் முதலியோரெல்லாம் அ
ருளிய திருவாக்குப்பிரகாரம் சிவாகம துஷணஞ் செய்த சந்நியாசியார் வே
தாஷணஞ் செய்தோராய், வேதத்தைக் கொன்றவராய், வேதபாகியராய்
முற்றுனா.

(அ) தேவாரமுதலியவே சுருதியர்த்தமுடைய வேதாந்தங்கள்

வேதாந்தங்களெல்லாம் ஸ்ரீஞானசம்பந்தர்முதலிய வைதிக சைவசமய ஸ்தாபனுசாரியர்கள் அருளிய திராவிடவேதங்களின்பாலனவேயாக, சந்நியாசியாரது குலகுரு முதலாயினோரெழுதிய பாஷ்யமெல்லாம் வேதநெறியிற் கோடினிற்றலால், அவரெல்லாம் வேதத்தைக் கோறல்செய்தவரேயாவர்.

முண்டகோபநிடதத்திற் கூறப்பட்டவாறு கன்மகாண்டம் பற்றிய இருக்காதி வேதங்கள் அபரவித்தையின் பாலனவே. (ஈசகேநாதி உபநிடத)பரவித்தையும் இவற்றின் பொருளை வியாசரருளியவாறு ஐயந்திரிபற உணர்த்தும் மகோபப்பிருங்கணங்களாகிய ஆகமாந்த சித்தாந்தங்களும் பரவித்தையின்பாலனவாம்.

"சிவாகமத்தில் வித்தியாத்துவம் கிடையாது" என்று எழுதினமைக்கு உத்தரம் வச்சிரதண்டத்து ௭0-ஆம் பக்கத்திற் காணப்படுகின்றது.

தத்ரா யா ஸம்ஹிதாப்ரோக்தா ஸாங்கரீவேதஸம்மதா |

"அவற்றுட் சங்கரசங்கிதை எனப்படுவது வேதசம்மதமாயது" என்று ஸ்காந்த சங்கரசங்கிதையானது சம்பவகாண்டத்திற் கூறலின், அச்சங்கரசங்கிதைபுட் சிறப்பித்துக் கூறப்பட்ட சிவாகமவிஷயம் சிவாசாரியவிஷயம் என்பன வியாசர் திருவாக்கினால் வேதசம்மதமென்று பெறப்படுவதேயாக, அச்சிவாசாரிய சிவாகமவிஷயங்கட்குச் சுருதித்துவம் கிடையாதென்று சந்நியாசியார் உரைத்த அப்பிராமாண்ணியப் போலி வாக்குகள் பதர்களாய்ப் பறந்துபோயின.

(௬) வேதசிவாகமோற்பத்தி.

காமிகாதி ஆகமங்கள் பரமசிவனுடைய (ஈசான) ஊர்த்துவமுகத்தினின்று உண்டாயின என்றும், தற்புருஷாதி நான்கு முகங்களினின்று இருக்காதி நான்கு வேதங்கள் தத்தஞ்சாகைகளோடு முறையே தோன்றியவென்றும் அகஸ்திய சங்கிதையின் வேதார்த்தோபதேசம் உரைத்த அத்தியாயத்திற் கூறப்படலானும், அங்ஙனம் பிறவிடங்களினும் சிவாகமங்கள் இருபத்தெட்டும் ஊர்த்துவமுகத்தினின்று பிறந்தன என்று கூறப்படலானும் வேதங்களினும் உற்கிருஷ்டமுடையன சிவாகமங்கள் என்று ஸ்ரீமத் சக்கியோ

சாத சிவாசாரியார் கூறியது தவறென்று காட்டுதற்குச் சந்நியாசியாருக்கு ஓர் பெரும் பிரமாணம் அகப்பட்டுப் போயிற்று, இப்பிரமாணத்தைக் கண்டாற் சந்நியாசியார் இனி விடுவாராதாமோர்! சிவாகமங்களையெல்லாம் ஒரு அமுக்காயே அமுக்கிவிடுவார், அவர் அச்சுலோகங்களைப் பிரமாணமாகக் காட்டி அடக்கவந்த அவர் வாயை ஓர் நொடிப்போதில் அடக்கிவிடுவாம்.

மேலே இருபத்தெட்டு ஆகமங்களும் ஊர்த்துவமுகமாகிய ஈசானமுகத்தினின்று தோன்றியவென்று கூறப்பட்டனவே. இப்போது சந்நியாசியார் "சத்தியோசாதமுகத்தினின்று காமிகாதி ஆகமங்கள் ஐந்தும், வாமதேவமுகத்தினின்று தீப்தாதி ஆகமங்கள் ஐந்தும், அகோரமுகத்தினின்று * ஆப்தி விஜயாதி ஆகமங்கள் ஐந்தும், தற்புருஷமுகத்தினின்று ரௌரவாதி ஆகமங்கள் ஐந்தும், ஈசானமுகத்தினின்று புரோற்கீதாதி ஆகமங்கள் எட்டுமாகச் சேர்ந்த இருபத்தெட்டும், தனித்தனியே சிவபெருமானது முகங்களினின்று தோற்றியவென்று அந்தசங்கையைப் பற்றி உதகரிக்கப்பட்ட சிவாகமசுலோகங்களைத் தமது கண்டனப்பத்திரிகையின் 25-ஆம் பக்கத்திலே வரைந்து சைவாகமங்கள் பரமசிவனது ஐம்முகங்களினின்றும் உண்டாயின என்று சிவாகமத்திற் சொல்லப்பட்டிருக்க, ஊர்த்துவமுகமாகிய ஈசானமுகத்தினின்று இருபத்தெட்டாகமங்கள் உண்டாயின என்று சொல்வது அத்தியந்த அசங்கதமென்றும், அது உன்மத்தப் பிரலாபமென்றும், சத்தியோசாதமுகத்தினின்று காமிகாதி ஆகமங்கள் ஐந்தும் உண்டாயின என்று சொல்லப்பட்டிருக்க ஊர்த்துவமுகத்தினின்று காமிகாதி ஆகமங்கள் உண்டாயின என்று கூறினமை மிகவும் அசங்கதமென்றும், பரமசிவன் ஐம்முகங்களினின்றும் இருபத்தெட்டாகமங்களுந் தோன்றிய என்று உற்பத்தி கூறி வேதங்களுக்கு உற்பத்தி சொல்லாதிருக்க அப்பரமசிவனது நான்கு முகங்களினின்றும் நான்கு வேதங்களும் பிறந்தன என்று கூறினமை அசங்கதமென்றும், இன்னும் அநேக விரோதங்கள் உண்டாகின்றன என்றும் சந்நியாசியார் ஆக்ஷேபிக்கின்றார். அவற்றுக்குச் சமாதானம் முன்னாகக் கூறுதும்.

ஸத்3யோ வாமாகோ4ரதத்புருஷேசாநஸஞ்ஜ்ஞிதம் |
ப்ரத்யேகம் பஞ்சவக்த்ராஸ்யுஸ்தேப்4யோ லௌகிகாதி3கா: |
பஞ்சவிம்ஶதி பே4தே3ந ஸ்ரோதோபே4தா3: ப்ரகீர்த்திதா: |

"சத்தியோஜாதம் வாமதேவம் அகோரம் தற்புருஷம் ஈசானம் என்னும் ஐந்துக்கும் தனித்தனி ஐம்முகங்கள் உண்டென்றும் அவைகளால் லௌகிகாதிகள் கூறப்பட்டன என்றும், அதனாற் ஸ்ரோதசுகள் இருபத்தைந்து பேதங்களாகக் கூறப்பட்டன" என்றும் காமிகாகமத்திற் கூறப்படலால், ஊர்த்

---

*விஜயாதி என்றதை ஆப்தி விஜயாதி என்று எழுதிச் சந்நியாசியார் வழுவினமையை 60-ஆம் பிரிவிற் காட்டுதும்.

[illegible] சமப்ந்கம்ரிய சக்கியோசாதமுதலிய ஐந்து சுரோத்சுகளி னின்று [illegible]கமங்களும் தோன்றிய என்று கொண்டே அதனை [illegible] காரணம்மம சத்தியோசாதாதி ஐம்முகங்களினின்று கா [illegible] முதலாயின உதித்தன என்று கூறியதாம் என் [illegible] மற்றைத் தற்புருஷாதி முகங்களினின்று தோ [illegible]யார் உணர்ந்து கொள்வாராக. சிவாகமப்பொரு [illegible] அறியாது சந்நியாசியார் சிவாகமசுலோகங்களிற் பூருவா [illegible]தம் உளதென்று ஆக்ஷேபிக்கப் போந்தமை விந்தையினும் விந் [illegible]! இவர் சிவாகமப்பொருள் அறியாது அவற்றை அருளிய சிவபிரா [illegible] சிவாகமங்களைப் பிரமாணமாககொண்ட வியாசர் சூதர் அகஸ்தியர் முதலாயினோரையும் தூஷிகது, சநநியாசியார் தாம் ஒருவரே மகாப் பிராஞ ஞ பிராம்மண சந்நியாசி என்றும் தம்மையொழிந்து பிறரெல்லாம் மூடமக் களென்றும் நினைந்து எழுதி அதிபாதக சிவத்துரோகத்துக்கிலக்காயினரே!! இவர் தமது மதக்கோட்பாட்டுக்குள் நில்லாது, யாது காரணத்தினாலோ "கிழக்கு மேற்கறியார் வழக்குப் பேசபபோந்தார்" என்றவாறு நெறிகோடிச் சிவாகம விஷயத்துட் புகுந்து தடுமாறுகின்றார்.

(௧0) சிவாகமப்பெயர்தானும் அறியாதவர் சந்நியாசி யார்.

சநநியாசியார தமது கண்டனபத்திரிகையின் உ௫-ஆம் பக்கத்தில் அகோர முகத்தினின்றும உண்டான "ஆப்தி விஜயாதி ஆகமங்கள் ஐந்து" என்றார். "ஆபதி விஜயம்" என ஓர் ஆகமம உளதாதலை யாண்டுக் கண்டனரோ? இவரை இங்ஙனம் ஏமாற்றியது இவர் குருவாகிய வித்தியாரணியராற் சிவாகமத்தினின்று உதகரிக்கபபட்டதாய்ச் சிவாகம மணம் வீசி, சிவாகமப்பெயர் தானும் அறியாத மகாராட்டிரராற் பூனா ஆனநதாசிரம அச்சியநதிரசாலையிற் பிழையுற அச்சியற்றப்பட்டதாய சூதசங்கிதாப பிரதியிற் கண்ட சுலோகமேயாம். அதுயாதெனின் யஞ்ஞவைபவ கண்டத்து உ0-ஆம் அத்தியாய சுலோகத்தின் கீழே காணற்பாலதாகிய

அகோரவக்த்ராதுத்பூதாஃ வஹாவி விஜயாதயஃ |

என்னும் பிழையிலாத சுலோகத்துக்குப பதிலாக,

அகோரவக்த்ராதுத்பூதாஃ வஹாzzவ்லு விஜயாதயஃ |

என்று பிழையுற அச்சிடப்பட்ட சுலோகமே. "குருடுங் குருடுங் குருட்டாட்டமாடிக் குழி விழுமாறே" என்றமைபோல்வது சிவாகமப்பெயர் அறியாத மகாராட்டிரரைத் தொடர்ந்த சந்நியாசியாருந் தடுமாறினமையாம். சிவாகமப்பெயர்தானும் அறியாத விவேக சந்நியாசியார்தாம் தமது பத்திரிகை

யின் கருசு-ஆம் பக்கத்தில் ஸ்ரீமத் சத்தியோஜாத சிவாசாரியரை விளிக்க "உன்னுடைய நாலு கடுதாசிகளிலுள்ள வாக்கியங்களுக்குமர்த்தம் சரி தஞ் சொல்லி ஒப்பித்தாற்போதும், உன்னை வேறு ஒரு பரீக்ஷையும் பண்ணும் பயப்படாதே" என்று மகாபண்டிதர்போலக் கண்டிக்குமுயன்றனர். 'பிரணவாதி மகாமந்திரங்களும், அகாராதி அக்ஷரங்களும், காமிகாதி ஆகமங்களும் திருவாலவாயுடையாருடைய உச்சிமுகமாகிய ஈசானத்தினின்றும் தோன்றின; இருபத்தொரு பேதமுடைய இருக்கு வேதம் கிழக்குமுகமாகிய தற்புருஷத்தினின்றும், நூற்றெரு பேதமுடைய யசுர்வேதம் தெற்குமுகமாகிய அகோரத்தினின்றும், ஆயிரம்பேதமுடைய சாமவேதம் வடக்கு முகமாகிய வாமதேவத்தினின்றும், ஒன்பது பேதமுடைய அதர்வவேதம் மேற்கு முகமாகிய சத்தியோசாதத்தினின்றும் தோன்றின" என்றும் அகஸ்தியசங்கிதை வேதார்த்தம் உரைத்த உ௨-ஆம் அத்தியாயத்திற் கூறப்படுவதேயாக,

[illegible] |
[illegible] |

'வேதமுதலிய சப்தஜாலமென எதுவுண்டோ, அதனையெல்லாம் பிரபுவானவர் (சிவபெருமான்) அருளினார்; இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்பன (சிவபெருமானுடைய) தற்புருஷமுதலிய முகங்களினின்று பிறந்தன" என்றும்,

[illegible] |
[illegible] |

(இருநூற்றேழு) உபாகமங்களோடு பத்தும் மேலே கூறிய பதினெட்டுமாகிய இருபத்தெட்டு மூல) ஆகமங்களும், ஷடங்கங்களோடு நான்கு வேதமும் ஊர்த்துவமுகத்திற்றோன்றிய என்றும் அசிதாகமம் கூறுகின்றது. காமிகாதி ஆகமங்கள் இருபத்தெட்டும் இருக்குமுதலிய நான்குவேதங்களும் ஊர்த்துவ முகத்தினின்று பிறந்தன என்று ஈண்டுக் கூறினமை மலைவாம்பிற எனின், ஆகாது, முகம் ஒன்றுக்கு ஐந்து முகங்கள் உளவாமென்று மேலே நிரூபிக்கப்பட்டமையின்- ஐந்து முகங்களையுடைய ஈசான ஊர்த்துவ முகத்தினின்று இருபத்தெட்டு ஆகமங்கள் தோற்றிய என்றும், தற்புருஷம் அகோரம்வாமம் சத்தியோசாதமென்னும் நாலு முகங்களுக்கும் தனித்தனி ஊர்த்துவ முகங்கள் உண்மையின், தற்புருஷத்துக்குள்ள ஊர்த்துவ முகத்தினின்று இருக்கு வேதமும், அகோர முகத்துக்குள்ள ஊர்த்துவ முகத்தினின்று யசுர் வேதமும், வாமத்துக்குள்ள ஊர்த்துவ முகத்தினின்று சாம வேதமும், சத்தியோஜாதத்துக்குள்ள ஊர்த்துவமுகத்தினின்று அதர்வ

வேதமும் பிறந்தன என்று சமாதானஞ் செய்யப்படுமாதலின்.

(கக) சிவாகமம் விரோதமுறக் கூறியதென்றமை கூடாது.

சிவாகமம் ஒன்றுக்கொன்று மாறுபடக் கூறிவிட்டதென்று பரிகசித்துக் கண்டிக்கப் பறந்துவந்த சந்நியாசியாரானவர் இருக்காதி வேதங்கள் பிரமத்தின சுவாசமென்று பிருகதாரணியமும், இருக்கு யசுர் சாமம் மூன்றும் காலத்தினின்று உதித்தன என்று கக. ருச-இல அதாவணவேதமும், கர்த்தாவானவர் மூவுலகங்களினுமமாந்து தேயு வாயு சூரியன் என்பவற்றை உண்டாக்கி இவற்றினின்று முறையே இருக்கு யசுர் சாமவேதங்களைக் கறந்தார் என்று மனுஸ்மிருதியும், வேதம் சுயம்பு என்று பூருவமீமாஞ்சையும் ஒன்றுக்கொன்று வேதோற்பத்தியில் விரோதமுறக் கூறினமைக்குச் சமாதானம் விடுப்பது கடமையாம்.

(கஉ) சிவசிருஷ்டியும் பிரமசிருஷ்டியும்

ஶிவஸ்ருஷ்டிர் ப்ரஹ்மஸ்ருஷ்டிர் த்விதா ஸ்ருஷ்டிரிஹோச்யதே |

என்னும் சிவாகமசுலோகத்தினால் "சிவசிருஷ்டி பிரமசிருஷ்டி எனச் சிருஷ்டி இருவகைப்படும்" என்றும்,

கௌஶிக: காஶ்யபஶ்சைவ பாரத்வாஜோ(அ)த கௌதம: |
அத்ரிர் வஸிஷ்டோ(அ)கஸ்த்யஶ்ச ஜாமதக்நிஶ்ச பார்கவ: |
ஆங்கிரஸோ மநுஶ்சைவ த்விதா ஸ்ருஷ்டிஸ்ததாபரா: |

கவுசிகர் காசியபர் பரத்துவாஜர் கவுதமர் அத்திரி வசிஷ்டர் அகஸ்தியர் ஜமதக்கினி பார்க்கவர் அங்கிரஸ மநு முதலாயினோர் இரு பிரகாரமாகக் கூறப்படுகின்றனர், இவர்கள் சிவசிருஷ்டர்களாயும் அஃதில்லாதவர்களாயும் (பிரமசிருஷ்டர்களாயும்) உள்ளார், சிவசிருஷ்டியைச் சார்ந்த கவுசிகர் முதலிய முனிவரெல்லாம் ஐம்முகங்களாலும் தீக்ஷிக்கப்பட்டவர்கள் என்றுங் கூறப்பட்டிருக்கின்றது. சிவசிருஷ்டியினும் பிரமசிருஷ்டியினும் கவுசிகர் முதலிய முனிவர் நாமங்கள் சமமாகக் காணப்படினும், அவர்கள் இருதிறப்படுவர் என்பது ஈண்டுக் கூறிய காமிகாகம சுலோகத்தால் உணரப்படும். படவே, துர்வாசரிலும் இருதிறத்தினர் உளர் என்று அறிந்துகொள்வாராக.

(கங) அகஸ்தியர் முதலாயினோர் தீக்ஷிக்கப்பட்டமை.

அகஸ்தியர் முதலாயினோர் எவ்வெந்த முகங்களினின்று தீக்ஷிக்கப்பட்டாரென்று சந்நியாசியார் வினவுகின்றார். அதற்குச் சமாதானம் வருமாறு

ஊர்த்வவக்த்ரேண தீக்ஷிதோ வ்யோமகோசர: |

வியோமகோசரராகிய அகஸ்தியர் ஊர்த்துவ முகத்தினின்று தீக்ஷிக்கப்பட்டார்; கவுதமர் தற்புருஷமுகத்தினின்றும், பரத்துவாஜர் அகோரமு

சத்தினின்றும், காசியபர் வாமதேவ முகத்தினின்றும், கௌசிகர் சத்யோஜாத முகத்தினின்றும் தீக்ஷிக்கப்பட்டார்.

ஸ்வம் நு தேவேஷு ப்ராஹ்மண:

"நீவிர் (சிவபெருமான்) தேவர்களுள்ளே பிராமணர் என்று சாமவேதிய பிரபுதப்பிராமணத்திற் கூறப்படுகின்றது.

ப்ராஹ்மணோऽஸ்ய முகமாஸீத் [illegible] (க்ஷேத்ர காண்டம், கக உரு)

[illegible] க்ஷத்ரியம் [illegible] (பாத்ம புராணம்)

"(தேவர்களுள்ளே) மகாதேவர் பிராமணர், விஷ்ணு க்ஷத்திரியர், பிரமர் வைசியர்" என்று புராணங்கள் கூறுகின்றன. [illegible] வைசியர் என்றும் "இவர் முகத்தினின்றும் உண்டாகிய பிராமணர் [illegible] வைசியர்" என்று கூற வேண்டுமென்க. [illegible] சந்நியாசியாமோ வைசியராகிய பிரமாவின் [illegible] தோன்றிய வைசியரை [illegible] கூற வேண்டுமோ? [illegible] போசியர் [illegible] அங்ஙனம் கூறியது [illegible] முகத்தினின்று தோன்றிய பிராமணரை வைசியரென்று [illegible] வைசியப்பிராமணரென்றே கூற வேண்டும். அங்ஙனம் கூறில் [illegible] வைசிய க்ஷத்திரியர், வைசிய வைசியர், வைசிய சூத்திரர் என்று கூறப்படும். பிரமாவானவர் தேவர்களுள்ளே வைசியரென்று [illegible] வைசியரன்று. அதனாற் [illegible] பிராமணராகிய சிவபெருமானது முகத்தினின்று தோன்றிய சைவத்துவிஜர் பிராமணப் பிராமணரேயாவர்.

(கச) சிவத்துவிஜர் சிவனது முகத்தினின்று தீக்ஷிக்கப்பட்டமை அவராற் றீக்ஷிக்கப்பட்டமை

வ்ருத்தா: [illegible] ஸ்ராவக்ஷேஜ்யாஸ்ச [illegible] |
யாவச்சைவம் ந [illegible] உபநயம் [illegible] ||

பெரியோராற பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் எனப்போர் விருத்தியினால் சூத்திரர்க்குச் சமானமானவர்கள் என்று அறியப்படுகின்றார்கள். [illegible] யும் உபநயனந் தரித்து வேதத்தோடு பிறக்கின்றார்களோ (வேதாசி [illegible] னஞ் செய்கின்றார்களோ) அதன் பின்னாத்தான் அவர்கள் துவி[illegible] (பிறப்பாளர்) எனப்படுகின்றார்கள் என்று சங்கஸ்மிருதி கூறு [illegible] யவே, சந்நியாசியார் முறகரபத்திரிகையின் கரு-ஆம் பக்கத்திலே உபநய னாதி சமஸ்கார சூன்யத்துவமாகிய கவுணசூத்திரத்துவமானது உபநயனமாகாத பிராமணப்பாலகரிடத்தில் உபநயனபரியந்தம் இருக்கின்றமை [illegible] றுமாறு, சாமானிய துவிஜர்க்குச் சூத்திரத்துவம் எய்தியது போலாகாமற

பிராமணராகிய சிவபெருமானது முகங்களினின்று தோன்றிய காலமுதல் வைதிக உபநயன சம்ஸ்காரத்தோடு செய்யப்படும் சைவ தீக்ஷாசம்ஸ்காரப ரியந்தம் பிராமணத்துவமான து

ஜந்மநா ப்ராஹ்மணோ ஜ்ஞேய: ஸம்ஸ்காரைர் த்விஜ உச்யதே |

"சென்மத்தினுற பிராமணன் என அறியற்பாற்று, (உபவீதாதி) சம்ஸ்காரங்களினுற் றுவிஜன் எனப்படுகின்றான்" என்று சைவஸ்மிருதி கூறியவாறு சிவத்துவிஜரை விட்டுநீங்காதிருக்கின்றதென்பது சித்திக்கமாறுபிற்று. அங்ஙனம்,

ஸ்ருஷ்ட்வா நந்தரமேவைதே தீக்ஷிதா: கௌசிகாதய: |
ஶிவேந த க-மௌஜாநா:சை ரவாஸாஓதீர்நிகாஜிஜா: |

(சிவபெருமானல்) கௌசிகர்முதலாயினேர் சிருஷ்டிக்கப்பட்டபிற்பாடே தீக்ஷிக்கப்பட்டார் என்று காமிகாகமமும் கூறுகின்றது.

(கரு) ஆதிசைவமென்றமைக்குக் காரணம்.

சிவபெருமானது ஊர்த்துவமுகத்தினின்று தீக்ஷிக்கப்பட்டவர் அகஸ்தியரென்று மேலே சிவாகமங்களோகம கூறினமையானும,

ஆதௌ ஶிவஸ்ஸ்வயம் ஸ்தித்யா ஆதிஶைவ இதீரித: |
ஶிவேந தீக்ஷிதாஸ்தே து ஶிவப்ராஹ்மணா: ஸ்ம்ருதா: |

"ஆதியிலே சிவன் நீயாய் இருக்கின்றார் என்றமைபற்றி ஆதிசைவர் எனப்படுகின்றார்" என்றும, "இவர்கள் சிவபெருமானுற தீக்ஷிக்கப்பட்டவர்கள்" என்றும, "அவர்கள் சிவப்பிராமணர்கள் எனப்படுகின்றார்கள்" என்றும சுப்பிரபேதாதி ஆகமங்கள் கூறலின், தமமினின்று உதித்துப் பிராமணத்துவம் நீங்கப்பெறுத சிவப்பிராமணர்களுக்குச் சிவபெருமான குண்ட மண்டபாதிகளைப புறத்தே இடாது ஞானவதிபாகவேனும வேறெனருகவேனும சிவதீக்ஷாசமஸ்காரத்தை வைதிக தீக்ஷாசமஸ்காரத்தோடு புரிந்தருளுவார் என்பது அறியப்படுகின்றது. ஆகலின், சதியாசியார் தமது கண்டனப்பத்திரிகையின் உஅ-ஆம பக்கத்திற பரமசிவன வாய்க்குட் குண்டமண்டபாதிகள் இடப்பட்டனவா என்றறெடுக்கத்தனவாகச் சிவத்துரோக சிவநிந்தா மொழிகளைப் பிதற்றிய இவர்க்கு யாது பிராயச்சித்தஞ் செய்யவேண்டும் என்பதைப் பெரியோர் கவனிப்பாராக.

இராஜவம்சத்திற் பிறந்த குழந்தைகளுக்குக் கர்ப்பத்திலே இராஜத்துவம் உளதென்று கூறுமாறு போல, கர்ப்பத்திலேயே ஆதிசைவர்களுக்குச் சிவதீக்ஷாசம்ஸ்காரம் உளதென்று கொள்ளப்படும். எத்துணைக்கல்வி ஐசுவரியம் அழகுடையனுக மற்றெந்தச்சாதியில் ஒருவன் இருந்தாலும் அவனுக்கு அரசனுக்குரிய இராஜகிரீடமும் செங்கோலும் எய்தா; அங்ஙனம் சிவபெருமானைத் தீண்டிப் பூசிக்கும் உரிமைமற்றைப் பிராமணர்க்குஞ் செல்லாது.

ஆதிசைவரென்றும், தூர்வாசர்பூர்வகாசிகசைவரை மத்தியசைவரென்றும், மற்றையோரை அந்தியசைவரென்றும் சந்நியாசியார் வகுத்துப் பெயரிட்ட முறையை நோக்குங்கால், அது ஆலயத்துட் பிரவேசித்தானொருவன் தக்ஷிணாமூர்த்தி என்னும்பெயர் கேட்டவுடனே, அவன் இது தக்ஷிணாமூர்த்தியாயின் மற்றைத்திசைகளிலுள்ள தெய்வங்களுக்கு மேற்கணாமூர்த்தி வடக்கணாமூர்த்தி கிழக்கணாமூர்த்தி என்று பெயர் கூறினமை போலாம். சைவர் ஆதிசைவர் முதல் எழுவகைப்படுவர் சைவசமயநெறி சூ. 20 இற் காண்க.

(கஎ) ஆதிசைவர் பலவாறாகக் கூறப்படுதல்.

ஆதிசைவரைச் சில தேசத்திற் குருக்கள் என்றும், சிலதேசத்தில் நம்பியார் என்றும், எங்கும் பூசாரி என்றும் சொல்கின்றார்கள் என்றும் கூறிய சந்நியாசியார் ஏகான்மவாதமதத்தினரைச் சிலர் கேவலாத்துவிதிகள் என்றும், சிலர் மாயாவாதிகள் என்றும், சிலர் (ஞானத்துமாவில்ல உலகம் மித்தை என்று கூறும்) யோகசாரனுக்கு இனத்தவர் என்றும் கூறுதலை முதற்கண்ணே கவனிப்பாராக.

(கஅ) சிவனைப் பூசித்தற்கே ஆதிசைவர் சிருஷ்டிக்கப்பட்டமை.

ஆதிசைவர்களைச் சிருஷ்டித்தற்கு முன் பரமசிவன் பூசையில்லாதிருந்தனரா என்று நிந்தித்துக் கூறுகின்ற சந்நியாசியார்

ப்ரஹ்மாஸ்ருஜத் ஸ்வமுகதோ யுஷ்மாநாத்மபரீப்ஸயா |

"பிரமாவானவர் தமது சொந்தப்பாது காப்பின் பொருட்டே உங்களைப் (பிராமணர்களை) சிருஷ்டித்தார்" என்று பாகவதம் கூறுகின்றமையை நோக்குவாராக.

(கக) சிவாகமத்தை யார் படிக்கப்படாதெனல்.

தீக்ஷாவிஹீநவிப்ராஹ்யாஸ் க்ஷத்ரவிட்சூத்ரஜாதயஃ |
படந்தி ஶிவஶாஸ்த்ராணி ரௌரவநரகம் வ்ரஜேத் |

"தீக்ஷையில்லாத விப்பிரரும் க்ஷத்திரியவைசியசூத்திரராகிய மூவருணத்தாரும் சிவாகமங்களைப் படிப்பாராயின் ரௌரவநரகத்தை அடைவர்" என்று சிவாகமங் கூறியிருப்பவும் வடமொழிச் சுலோகத்தில் நேர்ந்த பிழையொன்று நோக்கி அதனைத் திருத்திப் பொருள் செய்ய வன்மையிருந்தும் சுபடர் தோடு ௩௩-ஆம் பக்கத்தில் அனர்த்தஞ்செய்தமை இவர்க்கழகாகுந்தானே இவர் தமது பத்திரிகையில் இட்டுவைத்தபிழைகளைத் திருத்தி எழுதப்புகின் அவை பூமி ஆகாயமண்டலங்களில் அடங்கா!!

(உ0) மகாசைவரென்றமைக்குக் காரணம்.

[illegible]

[illegible]ப்பால் ஆதிசைவரையுமாகமங்களும் [illegible]

[illegible]

[illegible]முதலிய மூவருணத்தாரும் துவிஜர் எனப்படுவார் என்றும், இம்மூவ ருணை சிவதீக்ஷைபெற்ற விப்பிரர் உற்கிருஷ்டராதல்பற்றி இவர் மகாத் [illegible] எனப்படுகின்றார் என்றும் அறிவாராக. அதுபற்றியே

த்விஜா: க்ஷத்ரியகா விப்ரா விஶேஷாத் குருத்தமா ஸ்ம்ருதா: |

என்றது சுப்பிரபேதாகமம்.

உக) சிவதீக்ஷைபெற்றபிராமணர் முதலாயினோர் நெறி.

சிவதீக்ஷைபெற்ற பிராமணர் முதலாகிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட நெறிகளினின்று தவறாது ஒழுகுதலோடு சிவதீக்ஷை பெற்றமையால் சிவபெருமானை அந்தரியாக பகிரியாக பூசைகொண்டு வழிபடுதலோடு ஆகமாந்த சித்தாந்த சாஸ்திரங்களை சிரவண மனனஞ் செய்து நிதித்தியாசனசமாதியில் நிலைபெறுதல் முத்திக்கு வாய்ந்தநெறியாமென்று ஓர்ந்து உணரக்கடவர்.

☞ தாந்திரிகதுண்ட கண்டனத்து உ௫-ஆம் பக்கத்தில் "சகலபிராமணர்களாலும் அங்கீகரிக்கப்பட்ட சிவாகமம்" என்று கூறி, சந்நியாசியார் தாம் தமது "முற்கரத்திலும்" "கண்டனத்திலும்" தூஷித்த தூஷணங்களையெல்லாம் தமது வாய்மையால் பூர்வபக்ஷஞ் செய்தது விட்டமைபோல, யாம் வேதசிவாகமஸ்தாபனத்தின்பொருட்டு பாருமெழுதவேண்டியது ஆவசியகமில்லையேனும், அங்ஙனம் அவர் கூறுந்தன்மையை பிறர் அறியமாட்டாமையின், அதனை ௮௭-ஆம் பக்கத்தில் எடுத்துக்காட்டுங்கால், அவர் பத்திரிகையில் உள்ள மற்றைய ஒவ்வோர் விஷயங்கட்குஞ் சமாதானமும் எழுதநேர்ந்தமை.

மாறினேன்சமயபேதவழிபடுமடமையெல்லாந்
தேறினேன்வீடுசேர்க்குஞ்சைவசித்தாந்தமென்றே
யேறினேன்சிவலோகத்தேயிரண்டறக்கலந்தொன்றாகி
யாறினேன்வருத்தமெல்லாங்கலைசைக்கோவருளினாலே.

உடைந்துநைந்துநெக்குநெக்குளங்குழைந்துசின்மயத்
தடைந்துகண்ணசும்பிருந்துதாரைபாயவன்புகூர்
குடைந்துவாழுமன்பர்சிந்தைக்கோயில்கொண்டுவாழ்வரான்
மடக்கைபாகமாய்க்கலைசைவாழ்சிதம்பரேசரே.

தாந்திரிகதுண்ட கண்டன கண்டனம்

முற்றியது.
